# CANAGARATNAM

## MADHYA MAHA VIDYALAYA

# MAGAZINE

*1987 - 1988*

**கனகரத்தினம் மத்திய மகா**

**வித்தியாலயம், யாழ்ப்பாணம்**

# CANAGARATNAM

## MADHYA MAHA VIDYALAYA

## (*Stanley College*)

# *Magazine*

## *1987-1988*

## கனகரத்தினம்

## மத்திய மகா வித்தியாலயம்

## யாழ்ப்பாணம்

## பத்திராதிபர் குழு.

திரு. க. வை. தனேஸ்வரன்
திருமதி. எம். அருமைநாயகம்
திருமதி. ப. இரத்தினவேல்
செல்வன். ஐ. குமரதாசன்

## நிர்வாகம்

திரு. ஜி. எவ். லூயிஸ்
திரு. ஆர். பாலகுமார்

## சஞ்சிகைக் குழு

திருமதி. தே. துரைராஜா
திரு. க. சச்சிதானந்தம்
திரு. பூ. குகதாசன்
திருமதி. ப. கனகரத்தினம்
திரு. சி. சண்முகராஜா
திருமதி. எஸ். சண்முகலிங்கம்

# MESSAGE

It gives me great pleasure as Head of the Educational District in sending this Message to the College Magazine, which I believe is being published after a long break. This College has been one of the pioneer Government institutions in the Peninsula, only to adorn later into a full fledged Central College in 1945.

Even during my tenure of office as a senior education administrator in this District not in the distant past, I had ample opportunities of associating myself very closely with the development of this premier institution. This College has grown in stature and stands out today as one of the leading Central Colleges in the District. The variety of courses the College offers, the numerous anciliary and auxilliary services it provides has attracted children from far and wide.

The Principal, I know, consented to accept this responsibility at the request of many parents and even more old boys. With a spirit of self sacrifice, utmost devotion and a deep sense of committment he has laboured hard to give the College an identity. This has led him along tracks beaten and unbeaten, conventional and unconventional.

A Principal more than a teacher is like a missionary. He has a special call to cross boundaries, boundaries of geography, culture, language, social class and traditions and identify himself with the children among whom his lot is cast

Especially at a time when we are heading for a world devoid of human compassion and concern, the priorities in education have to be recast and rearranged. This Institution I am certain has identified its goals and aspirations very correctly and is making a very significant contribution to society.

Education everywhere is inevitably influenced by the political, social, economic and religious climates of the time and place. The Principals and teachers have therefore to be forward looking and innovative enough to the extent of reconciling themselves with the realities in education,

Publishing a College magazine is no easy task. The enormous preparation it entails is time consuming. Nevertheless the experience it gives to the children is immeasurable. I wish the College made the publication of such an impressive magazine an annual feature

My congratulations go to the Principal, editorial staff and students for their wonderful effort.

Department of Education,
Jaffna.
1988-03-12

**M. M Munsoor**
Regional Director of Education

## வட்டாரக் கல்வியதிகாரி அவர்களின்

# ஆசிச்செய்தி!

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் நீண்டகால இடைவெளிக்குப்பின் ஒரு கல்லூரிச்சஞ்சிகையை வெளியிடும் வேளையில் ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்டகால வரலாறுபடைத்ததும், வசதிகுறைந்தமாணவர்களும், திறமையுள்ள மாணவர்களும் தடையின்றிக் கல்வியைப்பெறும் நோக்குடன் 1928ல் அரசினல் நிறுவப்பட்டதுமான இக்கல்லூரி பல ஆண்டுகளாக வடமாநிலத்தில் புகழுடன் விளங்கியது. இக்கல்லூரி பல்லாயிரக்கணக்கான மாணவர்களைப் பலதுறைகளிலும் பயிற்றுவித்துச்சிறந்த பாரம்பரியத்தை தனக்கெனக்கொண்டு விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

சிலகால அமைதிக்குப்பின் மீண்டும் அதிபர் திரு. மு. இராமலிங்கம் அவர்களின் அயராமுயற்சியாலும் ஆசிரியர்கள், பெற்ருேர், பழைய மாணவர்களது ஒத்துழைப்பாலும் இக்கல்லூரி புதுப்பொலிவு பெற்று விளங்குவது பாராட்டத்தக்கது.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் சஞ்சிகை வெளியீட்டு மரபு மிகப்பழமையானது. 1940 களிலேயே இம்மரபு தோன்றியது இதனல் இக்கல்லூரி புகழ்பூத்த பல எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளமை ஈண்டுநோக்கத்தக்கது.

இன்று இக்கல்லூரியில் "கலைச்சுடர்" என்னும் கையெழுத்துப்பிரதியுடன் விஞ்ஞான மாணவர் கழகத்தினல் வெளியிடப்பட்டுவரும் 'அறிவியல்கதிர்' என்னும் சஞ்சிகையும் வர்த்தகமாணவ மன்றத்தினல் வெளியிடப்பட்டுவரும் "வணிகசோதி" என்னும் சஞ்சிகையும் ஆண்டுதோறும் அச்சிடப்பட்டுவருவதும் பாராட்டதக்க செயல்களாகும்.

இச்சஞ்சிகை, நிலைபெற்று இடையூறின்றி ஆண்டுதோறும் வெளிவந்து கல்லூரிக்குப் புதுப்பொலிவையும், வரலாற்றுப்பெருமைமிக்க வளர்ச்சியையும், ஏற்படுத்த வாழ்த்துகின்றேன்.

க. சிவநாயகமூர்த்தி
கல்வி அதிகாரி, நல்லூர் வட்டாரம்

I deem it a matter of great joy and pride in giving a message of appreciation and congratulation on the occasion of the publication of the College Magazine. The publication of a college magazine at suitable times has been for long a great need of this institution. Since this has been achieved at a time when vicissitudes of varied forms have taken place in our country, those concerned in this venture merit high commendation.

Canagaratnam MMV has in recent times ascended heights of fame and name both in the curricular and extra curricular activities. The publication of this magazine is really a highlight and a milestone in the upward rise of the college.

May God guide the devoted Principal, staff and students to achieve spectacular progress in the sphere of all educational activities and venture at all times.

**T. Sellappah**
Former Teacher & Dep. Principal

## Message from the President, O S A

I am happy to send a message for the school magazine, I am proud to mention that I had my association as a pupil and a member and President of OSA for several years and now as parent and Vice President of the School Development Society I have had the pleasure of watching the development of the school since 1953 and the progress of the school in all directions has been very remarkable.

The glorious present day of school has emerged very slowly and steadily from difficult times in sixties. There is a noticeable change in the outward appearance of the school but more proudly to be mentioned is the education and its achievements. This institution is producing fairly good results in the University Entrnce Examination specially in the field of commerce in which it nearly leads the schools in Jaffna. The Science oriented section is also showing a considerable progress in their results as seen in the publication of Science Magazine — 1987.

We are happy and proud to note that C M M V has proved to be one of the leading Educational Institutions in Jaffna. Credit for this achievement should go to the Principal, and teachers of this school and also to the Department of Education in Jaffna. Special mention has to be made on the role of Mr. M. Ramalingam, Principal for his dedication, and untiring efforts in bringing up this Institution. The old students, parents, neighbours and well wishers too have contributed to the Development of the school.

Condidering the several extracurtcular activities such as Organisation of Sports, Interact Club, Scouts, Union of Sc Students and Commerce Students, Tamil Union, Hostelers Union, Aesthetic Society etc the school is able to bring the young people to be ready to meet the fast changing and challenging world and to be responsible leaders of the community. I am confident that our school will continue to progress well and maintain good traditions so that the members of the OSA will be proud to be associated with this Institution. We wish Principal, staff and students all the best to achieve the happiness and prosperity.

**S. Mohanadas**

B. Sc (Hons), Ph.D,(Adelaide), C. Chem F I. Cham

President / OSA

*Principal*



**M. Ramalingam,** *B. Sc., Dip. in Ed.*
*Govt. Schol Student*
*1945 – 1951*
*Principal. 1985 –*

*Jubilarian and Deputy Principal*



**Mrs. S. Balasubramaniam,**
*B. Sc., M. A. (Ed.)*
*Teacher 1962 – 1985*
*Deputy Pr. 1985 –*

# ஆசிரியர் பேசுகிறார்......

ஏற்றமும் தாழ்வும் இயற்கை வழி. மனிதவாழ்வும் தாபனங்களின் வரலாறும் விதிவிலக்கல்ல. இவ்வியற்கை நியதியை மாற்றியமைக்கும் திறன் எழுதிச் செல்லும் விதியின் வழியிலுள்ளது. விதியின் கட்டளையென்று மனிதகுலம் சாம்பிக்கிடப்பதில்லை முனைப்புக்கொண்டு உழைப்பதில் திருப்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. வரலாறு திருப்பமுடையதே.

ஓயாது உழைக்கும் திறனும் உறுதியுடன் வாழும் உரமும் மனித குலத்தை மேம்படுத்துவனவன்றோ! இந்நிலை தளரின் வாழ்வேது; வளமேது. தேடுவாரற்றுக் கிடக்கும் தாழ்வு நிலையன்றோ வந்தடையும். வையத்தில் வாழ்வாங்கு வாழுதல் தெய்வ நிலைக்கு இட்டுச் செல்கிறதென்பது வள்ளுவர் வாசகம்.

சலனமற்ற தெளிவு, சுயநலமின்மை, தண்ணளி, சாந்தம், ஆதியாம் அரும் பண்புகள் தெய்வநிலைக்கு மானிடத்தை உயர்த்துவன. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே; உயர்ந்த பண்புகள் ஒளிரின் ஊக்கம் பெருகும். நிலைத்த ஆக்கங்கள் வகைதொகையாகி வெளிவரும். ஏற்றமும் எழிலும் எதிலும் இனிதே விளங்கும். இதற்குச் சான்றாக அமைவன எமது கல்லூரி வெளிக்கொணரும் "வணிக ஜோதி" 'அறிவியல் கதிர்' மற்றும் இக்கல்லூரிச் சஞ்சிகையும், அதன் அடிநாதமாக அமைந்து விட்ட கையெழுத்தேடு - "கலைச்சுடரும்" எனலாம்.

மேற்குறித்த இலட்சிய வேட்கையை நோக்கியே எமது அழகுமணித்தீவின் கல்விச்சாலைகள் அரும்பாடுபடல் வேண்டும் என்பதில் இருகருத்துக்கள் இருக்க இயலாது. இன்றேல் ஈழவழநாட்டில் அமைதிக்குப் பதில் அவலமே அதிகரித்துக்கொண்டிருக்கும். மாணவர் உலகு காணுகின்ற கனவுகளை நனவாக்குவதும்; கல்வித்தத்துவங்களை ஏட்டுச் சுமைபோல் ஏற்றுக்கொள்ளாது அவற்றை அரிய செயல் வடிவங்களாக்கிக் களிக்க வைப்பதும்; பல்லாற்றற்றிறன் படைத்த பள்ளிச் சிறுவர்களுக்கு நேரான பாதையை புடமிட்டுக் காட்டிப் பிரகாசம் மிகுந்த எதிர்காலத்தை வகுக்கும் திறமையை வளர்த்திட வேண்டிய பாரிய பொறுப்பைச் சுமப்பதும் கல்லூரிகளினதாகும். அன்றாட வாழ்க்கைக்கும் பாடசாலைக் கல்விக்கும் பிணைப்பை ஏற்படுத்தி கல்வி வாழ்வுக்கெனும் கருதுகோளை நிலைநிறுத்தும் செயற்பாடு கல்விக் கொள்கைகளை வகுத்தளிக்கும் கல்விச் சிந்தனையாளர்களினதாகும்.

ஒவ்வொரு தனியாளும் தத்தமக்கேற்ற கல்வித்துறையைக் கவினுறப்பெறுதல் வேண்டும். கல்லூரி வாழ்க்கையை முடித்துக்கொண்டு சமுதாயத்தில் அடியெடுத்து வைக்கும்போது தாம்பெற்ற கல்வி தமக்குத்துணை போவதையே தனி ஆள் எதிர்பார்த்து நிற்கின்றான். தமது கற்றல் அனுகூலங்கள் தம்மட்டில் ஏற்றமிகு எதிர்காலத்தை உருவாக்குவதோடு நாட்டின் வளத்தையும் சிறப்பையும் பேணிப்பாதுகாக்க ஏற்றதாக இருத்தல் வேண்டும் என்ற நிலைப்பாடும் வலியுறுத்தப்படல் வேண்டும். காலத்துக்குக்காலம் வளர்ச்சியடைந்துவரும் கல்விச் சீர்திருத்தங்கள் மேற்காட்

டிய இலக்குக்கு இட்டுச் செல்லுமாயின் இன்றைய மாணவ உலகு அனுபவிக்கும் ஏமாற்றங்களும், குழப்பங்களும் நீங்கி அமைதியுற வழிபிறக்கும் என்பது துணிபு.

இன்று ஈழத்தமிழகத்தில் அங்க சம்பூரண நிலைபெற்றிலங்கும் கல்லூரிகள் சிலவற்றுள் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் தனிச்சிறப்பு வாய்ந்தது. மணிவிழாக்காணும் நாள் நடந்து கொண்டிருக்கிறது. கால வளர்ச்சியோடு அண்மைக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சி கல்லூரிச் சமுதாயத்தின் விழிப்புணர்ச்சியின் வெளிப்பாடே என்பதில் ஐயமில்லை.

சமூக உயிரியாக மிளிரும் இக் கல்லூரியில் ஒவ்வொரு துறையும் தக்க வழிகாட்டலின் நிமித்தம் பீடுநடை போடுகின்றது. இதன் விளைவாக நாம் அளிக்கும் கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக அமையாது பயிற்சியும் அனுபவமும் மிக்கதாகிடல் வேண்டுமென்ற இலக்கின் வடிவமாக உருப்பெற்றுத் தங்கள் கரங்களில் தவழ்கிறது கல்லூரிச் சஞ்சிகை மேற்குறித்த கல்வி நோக்கினை நிறைவேற்றும் சாதனைகளுள் இதுவும் ஒன்று. ஆனால் இது எமது கல்லூரிக்குப் புதியதொன்றல்ல 1942 லும் 1949 லும் 'கலாநிதி, என்னும் பெயரில் கல்லூரி இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது, நீண்ட இடைவெளியைக் கடந்து இன்று இதழ்வடிவம் பெற்றுள்ள மாணவரின் ஆக்கங்கள் பல்சுவைப் படையலாக அமைந்துள்ளன. அன்னாரின் அறிவுத் திறமையையும், ஆக்க உணர்வினையும், தற்துணிவையும் பேண, எழுத்தாற்றலை வளர்த்தெடுக்க, இத் துறையில் மாணவர் எடுக்கும் முயற்சிகளை நெறிப்படுத்த; வாழ்க்கைக்கே கல்வி எனும் தத்துவத்தை நடைமுறைக்குக் கொண்டுவர மாணவர்கள் நூல்களை வாசிப்பதோடமையாது தாம் தேடிக்கற்ற அனுபவங்களைத் திரட்டி நூல்களை உருவாக்க உறுதுணையாக விளங்கும் இச் சஞ்சிகை அதற்கான சான்றினை இவ்விதழை அலங்கரிக்கும் இலக்கிய வடிவங்கள் வெளிப்படுத்தும் என்பது சால்பு.

கல்லூரி ஆண்டிதழாமிது, மாணவ மாணவியரின் கலைப்படைப்புகளால் அணிசெய்யப் பெற்று மிளிர்கிறது, கல்லூரி வளர்ச்சி பற்றியதோர் ஆண்டறிக்கையும், சங்க அறிக்கைகளும் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் கல்லூரி அபிவிருத்திச் சபை மற்றும் பழைய மாணவர் சங்க அறிக்கையும், நிழற் படங்கள் சிலவும் தாங்கி வருகின்றது இம்மலர். தொடரும் ஆண்டுகளில் கல்லூரிச் சஞ்சிகை புதுமை, அறிவு ஆக்கம், பொலிவு ஆகிய பூந்தாதுகளைக் கல்வியுலகுக்கு வழங்கும் என்பது எமது நம்பிக்கை.

இச்சஞ்சிகை வெளியீட்டுக்கு முயன்றுழைத்த சஞ்சிகைக் குழுவினர்க்கும், நல்லாதரவு நல்கிய அதிபர் அவர்கட்கும் நன்றிப் பெருக்குடன் வாழ்த்தினைத் தெரிவித்து, வாழ்க! வளர்க! யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், என்று ஏற்றி போற்றிடுவோம்.

# அதிபர் அறிக்கை

**(13-11-83) வியாழன் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சமர்பிக்கப்பட்டது.**

மதிப்பிற்குரிய கல்விப்பணிப்பாளர் இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களே! பேராசிரியர் குணசேகரம் நேசையா அவர்களே! கல்வி அதிகாரி சு. சிவநாயகமூர்த்தி அவர்களே! ஏனைய கல்வி அதிகாரிகளே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன் விரும்பிகளே! ஆசிரியர்களே! மாணவ மாணவிகளே! உங்கள் அனைவருக்கும் அன்பு வணக்கம். இவ்வாண்டு பரிசளிப்பு விழா அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

பிரதம அதிதி இரா. சுந்தரலிங்கம் அவர்களே! நாட்டின் இன்றைய சூழ்நிலையிலும் தமிழர்தம் பாரம்பரிய சொத்தாக விளங்கும் கல்விச்செல்வத்தைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து கடமையாற்றும் தங்கள் நற்பணியை நாம் பாராட்டுகிறோம். கலலூரிகளில் சிறந்த ஆசானாகக் கடமையாற்றியபின் பரீட்சைத் திணைக்களததில் நீண்டகாலம் உயர்பதவி வகித்துப்பின் பிரதம கல்வி அதிகாரியாக விருந்து இப்போது பணிப்பாளராக இருக்கும் தங்கள் ஈடிணையற்ற பணி மென்மேலும் மிளிர்ந்து வருங்கால சந்ததியினரின் வாழ்வை வளம்படுத்த வேண்டுமென வாழ்த்துகிறோம். இனிய நற்பண்பும் எளிமையும் தூய்மையும் நிறைந்த தங்கள் வாழ்வும் "காண்போர்க்கினியனாய் கடுஞ்சொல்லன் அல்லனாய்" விளங்கும் கண்ணியமும் தங்கள் கடவுள் பக்தியும் பலராலும் பாராட்டப்படுவதாகும். இன்று தங்களைப் பிரதம அதிதியாக வரவேற்பதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமை அடைகிறது.

முதுபெரும் அறிஞர் பேராசிரியப் பெருந்தகை குணசேகரம் நேசையா அவர்களே! தங்கள் நுண்மாண் நுழைபுலம் மிக்க கல்வியறிவும், கல்வியியல் ஆய்வும், நீண்ட நெடுங்காலக் கல்விச் சேவையும், கதருடன் இணைந்த காந்தீயக் கொள்கையும இடையறா இடைவீட்டும் கடவுள் பக்தியும், அறநெறிபிறழாக்குடும்பவாழ்க்கையும் அதன் முழுமையில் கண்ட வெற்றியும எல்லோருக்கும் எடுததுக்காட்டாக விளங்குகிறது. தாங்கள் 1940களில் சுயமொழி மூலம் கல்விக் காற்றிய சேவையும் உயர்கல்விப் பீடமாம் பல்கலைக்கழகத்தில் கல்வியியலுக்கான தனிப்பிரிவின் ஆரம்ப வளர்ச்சியில் கொண்ட ஈடுபாடும் அதில் கண்ட வெற்றியும் கூட்டுறவு இயக்கத்தில் தங்கள் பங்களிப்பும் என்றும் எவராலும் மறக்க முடியாதவை. எண்பத்தைந்து வயதிலும் அறவழிப்போராட்டம் நடாத்தும் தாங்கள் அரசியல், சமூக, சமய, கலை, கலாச்சார இயக்கங்களில் காட்டும் ஆர்வம் வியக்கத்தக்கதாகும். தங்கள் சமகாலத்தவரும் தங்களைப்போன்று பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவருமான எமது கல்லூரி நிறுவுனர் அமரர் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களைப்பற்றி தாங்கள் சொல்லக் கேட்கும் பேறு எமக்குப் பெரும்பேறாகும். தங்களையும் மனமகிழ்வோடு வருக வருக என வரவேற்கின்றேன்.

பேரன்புக்குரிய பெற்றோர்களே, எமது கல்லூரியின் வாழ்விலும் தாழ்விலும் பங்கு கொண்டு அதன் வெற்றிகளைத் தன்னடக்கத்துடன் போற்றிப் புகழ்ந்தும் தோல்விகளைப் பொறுமையோடு சகித்தும் வேண்டிய உதவிகளை வேண்டியாங்கு அளித்து வரும் தங்கள் மெய்யான அன்பிற்கு நன்றி கூறி வரவேற்பதில் பெருமையடைகிறேன்.

பாடசாலைச் சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்களாகிய பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, ஆசிரியர்களே,

மாணவ மாணவிகளே உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

காலத்தையொட்டி வாழக்கற்றலே சிறந்த கல்வி. அந்த வகையில் இன்று நம் பிரதேச சூழ்நிலையிலும் கல்வியே கருந்தனம் எனக் கருதி தம் அயரா முயற்சியினால் கல்வி கற்கும் மாணவ சமுதாயத்தினர் பாராட்டுக்குரியவர்கள் வாழ்க்கைக் கேற்ற கல்வி, காலத்துக்கேற்ற கல்வி, நாட்டு வளத்துக்கேற்ற கல்வி வாழ்க்கை பூராவும் கல்வி என்ற அடிப்படையில் கல்வி அமைய வேண்டும். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" ஆயினும் நம்வாழ்க்கையின் விழுமியங்களைப் பாதுகாக்க நம் முன்னோரளித்த அருஞ் செல்வங்களான சமய நூல்களையும் புராண இதிகாசங்களையும் பண்டைய இலக்கியப் படைப்புகளையும் நாம் மறக்கலாகாது. இலத்திரோனியல் யுகத்தில் வாழும் நாம் நம் வருங்கால சந்ததியினரின் வாழ்வு வளம்பெற விஞ்ஞானக் கல்விக்கு கூடிய அழுத்தம் கொடுத்தல் வேண்டும். நாட்டில் அமைதி வேண்டி நிற்கும் நாம் ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் அமைதியை ஏற்படுத்த வேண்டும். இதனைத் தரவல்லது சமய அறிவும் கடவுள் பக்தியுமே. சிறு பிராயந் தொட்டே சமய அடிப்படையில் கல்வியூட்டப்பட வேண்டும். கல்வியின் பல்வேறு மட்டத்திலும் இதன் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும் இதற்கு இசைவான சூழ்நிலை பாடசாலை மட்டத்தில் மட்டுமல்ல சமூக மட்டத்திலும் ஏற்பட வேண்டும்.

## ஆசிரியர்கள்

### ஓய்வு பெற்றவர்கள்

இவ்வாண்டு எமது கல்லூரியில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்கள் இருவர் தமிழ், சமஸ்கிருதம் ஆங்கிலம் ஆகிய பாடங்களை 18 ஆண்டுகளாக கற்பித்த வித்துவான் எஸ் சூசைப்பிள்ளை B A(Lond) அவர்களின் சேவை எவராலும் எளிதில் மறக்கவொண்ணாதது. "எல்லாம் சரி" என்னும் அவரது தத்துவப் போக்கு யாவருக்கும் பிடித்தமானது. அவரது விளையாட்டு, நாடக, சங்கீத, அறிவைப் பயன்படுத்தியவர்கள் பலர். கல்லூரிக் கிறிஸ்தவ மன்றத்தின் வழிகாட்டியாக அருஞ்சேவை யாற்றினார். சொல்லிலும் செயலிலும் ஓர் உண்மைக் கிறிஸ்தவனாக நடந்துகொள்ளும் ஆசிரியர் பல்லாண்டு வாழ ஆண்டவன் ஆசீர்வதிக்கட்டும்.

22 ஆண்டுகள் தமிழும் சைவசமயமும் கற்பித்து வந்த திருமதி யோ. நடராசா அவர்கள் சுகயீனமுற்று இளைப்பாற நேர்ந்தது எமது துரதிஷ்டமாகும். மாணவ மாணவியரின் ஒழுக்கத்தில் மிகக் கண்டிப்பானவரான இவர் கற்பித்த பாடங்களில் உயர்தரமான பெறுபேறுகளை கிடைக்கப் பெற்றன. சமய அனுஷ்டானங்களை மாணவர்களுக்குப் புகுத்துவதிலும் சமய விழாக்களிலும் அவரது சேவை மிகப் பாராட்டத்தக்கது. அவர் விரைவில் குணமாகி நீண்ட ஆயுள் பெற்று வளமாக வாழ எல்லாம் வல்ல நல்லூர் முருகன் அருள் புரிவாராக.

## புதிதாக சேர்ந்தவர்கள்

1-5-86 தொடக்கம் இக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்தவர்கள்.

பண்டிதை திருமதி. பி. அருளானந்தம் வி. ப. சைவம்
திரு. பி. குகதாசன் வி. ப. கணிதம்
திரு. இ. தவபாலன் பி எஸ். சி.
ஜனாப் ஏ. சி. எம். சி. அசிம் வி. ப. விஞ்ஞானம்
திருமதி. எல். விக்ரோறியா வி. ப. மனையியல்
செல்வி எஸ். இராமநாதன் வி. ப. கணிதம்

1-8-86 தொடக்கம் மாற்றலாகி வந்தவர்.
செல்வி. எஸ். சின்னத்துரை தமிழ் பயிற்சி நூலக பயிற்சி

இவர்கள் எல்லோரையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

## பரீட்சை பெறுபேறுகள்

### க. பொ. த. (சா) டிசம்பர் 1985

ஐந்தத்கு மேற்பட்ட பாடங்களில் சித்தியடைந்தோர் 63 இவர்களில் க.பொ.த (உ) வகுப்பிற்கு தகுதி பெற்றோர் 25.

### க. பொ. த. (உயர்) ஆகஸ்ட் 1985

பாடங்களுக்கு மேல் சித்தியடைந்தோர் 18 பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைப் புள்ளிகளை பெற்றோர் 15

சிறப்பு சித்தி இ யூட். மனோராஜ் பொறியியல் 272 புள்ளி.

க. இந்திரமோகன் வர்த்தகம் 266 புள்ளிகள்.

அனுமதி பெற்றோர் : 7

பொறியியல் 1 உ. விஞ்-1 வர்த்தகம் 5

மகாபொல பரிசில் பெற்றோர்-5

### க. பொ த. (உ) ஆகஸ்ட் 1986

3 பாடங்களுக்கு மேல் சித்தியடைந்தோர் – 31

பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைப் புள்ளிகள் பெற்றோர் 24

விஞ்ஞானம்-6 கலை-2 வர்த்தகம்:16

## மன்றங்கள்

### மாணவ முதல்வர் மன்றம்

மாணவர் முதல்வர் மன்றம் சிரேஷ்ட ஆசிரியர்களைக் காப்பாளராகவும் மாணவ முதல்வர்களை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது. இவ்வாண்டு தொடக்கத்தில் செல்வன் த. குணசீலனையும், செல்வி நா. மஞ்சுளாவையும் சிரேஷ்ட மாணவ தலைவர்களாகக் கொண்டு மன்றம் பணியாற்றியது. 1985, 2-ம் பருவத்துடன் இவர்களது தலைமைப் பீடம் காலியானதும் செல்வன் ஜே. ஜெயவேந்தனும் செல்வி. பி. ஜனதாவும் தெரிவாகினர். புதிய உதவிச் சிரேஷ்ட தலைவர்களாக செல்வன். ச. பாஸ்கரனும் செல்வி. கி. ஜெயந்தியும் நியமனம் பெற்றனர். மற்றும் முப்பது அங்கத்தவர்களைக் கொண்ட இம் மன்றம் முதன்மை ஊக்கத்துடன் பணியாற்றி வருகின்றது. 23 10.86 இல் இடம் பெற்ற மாணவ முதல்வர் வகுப்பு தலைவர்கள் கருத்தரங்கில் உடற்கல்வி அதிகாரி திரு. வி. கணேசலிங்கம் அவர்கள் "மாணவ தலைவர்களின் கடமைகளும் உரிமைகளும்" எனும் பொருள் பற்றி உரையாற்றினார் திறந்தர ஒழுக்காற்றுக் கடமைகளுடன் கல்லூரியில் இடம்பெறும் பல்வேறு கல்வி சம்பந்தமான சிறப்பு வைபவங்களையும் ஒழுங்குற நிறைவேற்றும் பணிக்கு மாணவத் தலைவர்களின் பங்களிப்பு பெருமளவில் உதவுகின்றது 28-10-1986 இல் இடம்பெற்ற மாணவ முதலவர் ஒருங்கு கூடலில் கல்லூரிப் பழைய மாணவரும் யாழ் மத்திய கல்லூரி இரசாயனத் துறை நல்லாசிரியருமான திரு. ரி. நாகரத்தினமும் பாரியாரும் பிரதம அதிதிகளாகிச் சிறப்பித்தனர்.

### உயர்தர மாணவ மன்றம்

இம் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடல் 9-6-86 இல் இடம்பெற்றபோது பரியோவான் கல்லூரி ஆரம்ப பிரிவு அதிபரும் எமது ப. மா. ச. உபதலைவர்களுள் ஒருவருமான திரு செ. ப. ஜீவானந்தமும் பாரியாரும் பிரதம அதிதிகளாக சமுகம் தந்து சிறப்பித்தனர்

### வர்த்தக மன்றம்

இம் மன்றத்தினரால் வருடாந்தம் வெளியிடப்படும். "வணிக ஜோதி", இவ்வாண்டு 12-ம் ஆண்டு சிறப்பு மலராகவும் வர்த்தகக் கல்வி ஆரம்பித்த 25-ம் ஆண்டு சிறப்பு மலராகவும் நேற்றைய தினம் வெளிவந்தது. சுண்ணாகம் இலங்கை வங்கி முகாமையாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான திரு. ந. தங்கராசா அவர்கள் பிரதம அதிதியாக வருகை தந்து சிறப்பித்தார் இம் மலர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது. வர்த்தக நூல் நிலையத் திற்கென சுவர் மணிக்கூடு ஒன்று மன்றத்தினரால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

## தமிழ் மன்றம்

மாதாந்தம இலக்கியக் கூட்டம் நடாத்தி மாணவர் மத்தியில் கலை, இலக்கிய ரசனையை வளர்த்து வரும் இம் மன்றம் 11-9-86 இல் எமது ப மா ச. உப தலைவருள் ஒருவரும் கோண்டாவில் இ. ம. வி. அதிபருமான திரு. க சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் கவிஞர். அரியாலை வே. ஐயாத்துரை கவிஞர் சோ. பத்மநாதன், புதுவை இரத்தினதுரை, கவிஞர் மு. பொன்னம்பலம் ஆகியோர் பங்கு கொண்ட கவியரங்கம் ஒன்றை பாரதி தினத்தை யொட்டி நடாத்தியது. 1-10-86 இல் சப்பத்திரிசிரியார் கல்லூரி ஆசிரியர் வித்துவான் வேலன் மாறன் அவர்கள் திருக்குறள் பற்றி உரையாற்றினார். 2-10-86 இல் காந்தி ஜெயந்தி தினத்தையொட்டி ஆசிரியமணி ஆர் தி. சுப்பிரமணியம் "காந்தீயம்" பற்றி உரையாற்றினர்.

## இந்து மன்றம்

நால்வர் குருபூசை தினங்களும் திருவள்ளுவர் தினமும் நவராத்திரி பூசையும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. அப்பர் சுவாமிகள் பற்றி பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி. நா. சுப்பிரமணியஐயரும் ஞானசம்பந்த சுவாமிகள் பற்றி கம்பன் கழக இயக்குனர் இ ஜெயராஜ் அவர்களும் மாணிக்கவாசக சுவாமிகள் பற்றி "கரவை கிழார்" க கந்தசாமி அவர்களும் வள்ளுவர் பற்றி ஈழத்துச் சிவானந்தன் அவர்களும் உரையாற்றினர். 11-10-86 சனிக்கிழமை சரஸ்வதி பூசையை முன்னிட்டு இன்னிசை வேந்தன் பொன் சுந்தரலிங்கம் அவர்களின் இசைக் கச்சேரி இடம் பெற்றது.

## விஞ்ஞான மன்றம்

வருடாந்த வெளியீடான 'விஞ்ஞான மலர்' இரண்டாண்டுகள் இடைவெளிக்குப் பின் "அறிவியற் கதிர்" எனும் பெயரில் 3-4-86 இல் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக ப. மா. ச. உப தலைவருள் ஒருவரான மாநகர சபை ஆணையாளர் சி. வி. கே சிவஞானம் அவர்கள் கலந்துகொண்டுசிறப்பித்தார்கள். கல்லூரி பழைய மாணவரும் மலேரியா தடுப்பு இயக்க பொறுப்பதிகாரியுமான வைத்திய கலாநிதி எஸ். சிவகுரு வெளியிட்டு வைக்க பழைய மாணவ சங்க நிர்வாக உறுப்பினரும் கிளிநொச்சி பட்டின சபை நிர்வாக அதிகாரியுமான திரு ந பாலசுப்பிரமணியம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். இந் நிகழ்ச்சியை வீடியோ ஒளிப்பதிவு செய்து ஒளிபரப்பிய றீகல் ஸ்தாபனத்தினர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

## இன்ரறக்ற் கழகம்

இவ்வாண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் கழகத்தின் ஆரம்ப வைபவத்தில் ரொரேறியன். S. சத்தியமூர்த்தி ரொரேறியன் R. J குணரத்தினம் ஆகியோர் சமுகம் கொடுத்தனர். இக் குறிகிய காலத்திலும் கழகம் கல்லூரி மட்டத்தில் அளப்பரிய சேவை ஆற்றியுள்ளது கல்லூரியின் மத்திய பகுதியைத் தொடுக்கும் வீதி அமைத்தமை, மேல்மாடிக்கு முன்னல் பூந்தோட்டம் அமைத்தமை, 160'' குழாய் பொருத்தி 12 நீர் விநியோகக் குழாய் பொருந்தியமை, 42 கரும்பலகைக்கு மை பூசியமை, 4 அறைக்கதவுகள் யன்னல்களுக்கு வர்ணம் பூசியமைஆகியவை செய்தசேவையில் சிலவாகும். கிராம மட்டத்தில் கிட்டத்தட்ட 75 துவிச்சக்கர வண்டிகளுக்கு பிறேக் இலவசமாகக் பூட்டிக் கொடுத்தனர். இதற்கு உதவிய ரேூரறிக் கழகத்தினர்க்கு நன்றி. 19-6 86 இல் இசை நிகழ்ச்சி நடாத்தி நிதி திரட்டினர். தமிழ் அகதிகள் புனரமைப்பு நிறுவனத்தினருக்கு ரூபா 300/- அன்பளிப்பு செய்தனர். அண்மையில் சம்பத்தாசிரியார் கல்லூரியில் நடைபெற்ற அக்கல்லூரியின் கழகத்தினரின் ஒன்று கூடல் நிகழ்ச்சியில் இடம்பெற்ற பொதறிவுப் போட்டியில் இரண்டாம் இடத்தை எமது கழகத்தினர் பெற்றமை பாராட்டுக்குரியது.

## சாரணியர் குழு

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற கல்விப் பொருட்காட்சியிலும் எமது கல்லூரியில் இடம் பெற்ற குருளைச் சாரணர் விழாவிலும் எமது கல்லூரி விழாக்களிலும் கடமையாற்றினர். நல்லூர் தரு விழாக் காலத்து சேவைக்காக இக்குழு முதலிடம பெற்றுக் கேடயத்தைத் தட்டிக் கொண்டது கலாசார மண்டபத்தின் முன்னால் பூந் தொட்டியும பூந்தோட்டமும் அமைத்துள்ளனர். கிராமத்தின் மூன்று ஆலயங்களில் சிரமதான பணி மேற்கொண்டனர்.

## விடுதி மாணவர் மன்றம்

இவ்வாண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இம்மன்றம் 60 அங்கத்தவர்களை கொண்டுள்ளது. விடுதி ஒழுங்குகளைக் கவனித்து வரும் இவர்கள் 12-9-86 ஞாயிறு வெகு சிறப்பாக விஜயதசமி விழாக் கொண்டாடினர். 10-11-86 இல் விடுதியாளர் தினமும் கொண்டாடினர். திரு. ந. காசிவிசுவநாதன், பழைய மாணவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

## நலன்புரிச் சங்கம்

மாணவர்களால் நடாத்தப்படும் இச் சங்கம் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை மலிவு விலையில் கொடுத்து உதவுகிறதுடன் இவ்வாண்டு பெற்ற லாபத்தில் 1500/- பெறுமதியான மேடைக்கான திரைச்சீலை வாங்கி அன்பளிப்பு செய்துள்ளது.

## ஆசிரியர் கழகம்

43 உறுப்பினர்களைக் கொண்ட இக் கழகம் கல்லூரியின் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் கருத்தாகக் கொண்டு இயங்கி வருகிறது ஆசிரியர்களது தனியான நலன்களில் அக்கறை கொண்டுள்ளதோடு சமூகப்பணியினையும் தன்னாலியன்றளவு ஆற்றி வருகிறது. திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபைக்கும் அகதிகள் புனர்வாழ்விற்கும் நிதிஉதவி செய்துள்ளது.

## விளையாட்டுத்துறை

கல்லூரி விளையாட்டுக்கழகம் இக்கல்வியாண்டுச் செயல்பாடுகளை வழமைபோல் செவ்வனே செய்துள்ளது.

1986-ம் ஆண்டுத் தவணைத் தொடக்கத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியை மிகச் சிறப்புற நடாத்தியது. எமது பழைய மாணவர், தொழிலதிபர் திரு. சோ கணேஷசுந்தரம், திருமதி. கணேஷசுந்தரம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். கனகரத்தினம் இல்லம் மெய்வல்லுனர் போட்டிகளில் முதலிடம் பெற்றது. இரண்டாம் இடத்தைப் பெரோரா இல்லம் தட்டிக் கொண்டது. இல்லப் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களையும் ஈட்டிய போட்டியாளர்கள் நல்லூர் வட்டாரப் பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபற்றனர் மெய்வல்லுனர் செ. சேவியர், வே. தயாபரசிங்கம், ஆ. பாஸ்கர் செல்வி கு. பாலநந்தினி ஆகியோர் அகில இலங்கை மெய்வல்லுனர் போட்டிக்குத் தகுதி பெற்றனர். யாழ் றேட்டறிக் கழகத்தினர் நடாத்திய ஏழு நிகழ்ச்சிகள் கொண்ட மெய்வல்லுனர் போட்டியில் செல்வன் ஸ்ரீகாந் வெற்றிக் கிண்ணத்தினைப் பெற்றார், வே. தயாபரசிங்கம், செ. சேவியர் இருவரும் திறமைச் சான்றிதழ்களைப் பெற்றனர். வீதி ஓட்டப் போட்டியில் செ. சேவியர் மூன்றும் இடத்தையும், வே தயாபரசிங்கம், சத்தியவான் ஏ. ராலேந்திரா ஆகியோர் முறையே 5ஆம், 7ஆம், 9ஆம் இடங்களைத் தமதாக்கினர். வடமாகாண மெய்வல்லுனர் பயிற்சி முகாமுக்குத் தெரியப்பட்ட ஆ. பாஸ்கரன் சு. சுரேந்திரன், நா. ஸ்ரீகாந் ஆகியோர் கல்லூரி விளையாட்டுக்கழகத்திற்கு பெரிதும் உதவுகின்றனர்.

கல்லூரி உடற்பயிற்சி அணிகள் 19 வயதுப் பெண்கள் ம. சகிலாவின் தலைமையிலும் 17 வயது ஆண்கள் வே. தயாபரசிங்கத்தின் தலைமையிலும் போட்டியிட்டன நல்லூர் வட்டாரப்போட்டியில் பெண்கள் அணி முதலிடத்தைப் பெற்று யாழ் மாவட்டப் போட்டியில் இடம் பிடித்தது. ஆண்கள் அணிக்கு இரண்டாம் இடம் வட்டாரத்தில் கிடைத்தது. இவ்விரு வயதுப்பிரிவு அணிநடைக்குழுக்கள் கல்லூரி மட்டத்தில் உருவாக்கம் பெற்றுள்ளன. கல்லூரி மத்திய பிரிவினர் உடற் பொருத்தப்பாட்டு நிகழ்சிகளை ஒழுங்கு முறைப்படி நடாத்துகின்றனர்.

கல்வித்திணைக்களம் நடாத்தும் சகல போட்டிகளிலும் கல்லூரி விளையாட்டுக் குழுக்கள் பங்குபற்றின. பெரு விளையாட்டுக்களின் தரம் குறையா நிலை பேணப்படுகின்றது 'கிறிக்கெட். விளையாட்டினை தொடங்கும் திட்டம் எதிர்வரும் டிசம்பரில் மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொண்ட பிரதம அதிதியின் ஆதரவுடன் ஆரம்பமாகும், விளையாட்டுக்கழகம் முன் வைத்துள்ள பெருவிளையாட்டுகளுக்கான தக்க பயிற்சியாளர்களை நியமிக்கும் ஆலோசனை அடுத்த கல்வியாண்டில் நடைமுறைப் படுத்தப்படும்.

உதைபந்தாட்டக் குழுக்கள் (19 வயது 17 வயது, 13 வயது) வழமைபோல் கல்வித் திணைக்களப் போட்டிகளிலும், சினேகபூர்வப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிகளையும் தோல்விகளையும் சம்பாதித்துள்ளன. இவ்வருடம் ஒஸ்மானியாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி மற்றும் அரியாலை விளையாட்டுக்கழகம், சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம், சென் நிக்கலஸ் விளையாட்டுக்கழகம் ஆகியன உதைபந்தாட முன்வந்தமைக்கு கல்லூரி விளையாட்டுக்கழகம் நன்றியுடையதாகும். மாவட்ட உதைபந்தாட்டக் களப்பயிற்சி பெற்ற வே. தயாபரசிங்கம், செ. சேவியர் மற்றும் ஆர். ஜெயக்குமார் ஆகியோர் வகுப்பு ரீதியாக உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தும் பொறுப்புடையர்.

கல்லூரி விளையாட்டுக் கழகத்தலைவர் செல்வன் ஆ. பாஸ்கரனும் செயலாளர் செல்வி எம். சகிலாவும் நற்பணியாற்றுகின்றனர். இவர்களின் முயற்சியால் உள்ளக விளையாட்டுக்குரிய உபகரணங்களைப் பழைய மாணவர் சங்க உப தலைவர் திரு. செ ப. ஜீவானந்தம் மூலம் சிவகுமார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. என். நமசிவாயம் அவர்களிடமிருந்தும், வலைபந்தொன்றினைப் பழைய மாணவர் சங்க உப தலைவர் திரு. எஸ். ரி. பத்மநாதனிடம் இருந்தும் பெற்றுக் கொண்டனர்.

பழைய மணவர் தினத்தன்று இடம் பெற்ற மென்பந்துக் கிறிக்கெட் போட்டியிலும், எறிபந்துப் போட்டியிலும் பள்ளி மாணவர்களுடன் போட்டியிட்ட பழைய மாணவர்களுக்கு போட்டி யேற்பாடுகளைத் திறம்படச் செய்த கல்லூரி விளையாட்டுக் கழகம் சம்மந்தப்பட்டவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றது.

## பாடசாலை அபிவிருத்திச் சபை

பாடசாலையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு கொள்ளும் இச்சங்கம் கடந்த ஒரு வருடம் நான்கு மாத காலத்தில் ரூபா 110 000 செலவில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுள்ளது. தற்காலிக விகிதர் ஒருவரை கல்லூரிக்கு நியமித்தும் உதவியுள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் 12,000 ரூபா செலவில் 100 கதிரைகள் செய்வித்து உதவியுள்ளது. 3 தினங்கள் வெகு சிறப்பாக நடைபெற்ற பொருட் காட்சிக்கும் பரிசளிப்பு விழாவுக்கும் நிதி உதவி செய்துள்ளது.

## பழைய மாணவர் சங்கம்

9-2-86 இல் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு மதிப்பிற்குரிய பணிப்பாளர் வருகை தந்து சிறப்பித்தார்.

இச் சங்கத்தின் இவ்வாண்டின் முக்கிய செயற் பாடாக நூலக வாரம் அமைந்தது. கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களின் ஒத்துழைப்போடு நடைபெற்ற இந் நூலக வாரத்தின்போது சேர்ந்த 12000 ரூபாவுக்கு நூல்கள் வாங்கி அன்பளிப்புச் செய்யப்பட்டன

## விடுதிகள்

கடந்த ஆண்டு 3 மாணவர்களுடன் இயங்கிய விடுதிகளில் இன்று 60 மாணவ மாணவியர் உள்ளனர் சகல வசதிகளும் உடைய ஆண் பெண் விடுதிகளுக்கென மேற்பார்வையாளர் (Matron) ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். விடுதி மாணவர் பாவனைக்கென இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளாக பாவனையற்றிருந்த கிணறு சுத்தப் படுத்தப்பட்டு நீர் இறைக்கும் இயந்திரம் பொருத்த ஏற்பாடாகியுள்ளது. இதற்கான பம்பினை தனது சொந்த செலவில் வார்ப்பித்து உதவிய பழைய மாணவரும் திருநெல்வேலிச் சந்தி "அபிராமி" உரிமையாளருமான திரு. க. தியாகராசா அவர்களுக்கு எமது நன்றியும் பாராட்டுகளும்.

## நூலகம்

கல்லூரியின் முக்கிய அம்சமான நூலகம் முழுமை பெற்று இயங்க வேண்டுமென எண்ணிய பழைய மாணவர் சங்கம் நூலக வாரம் நடாத்திச் சேகரித்த பணத்திற்கு வாங்கிய நூல்களை பிரதம கல்வி அதிகாரி திரு வி. தங்கராசா அவர்கள் உத்தியோக ரீதியாக ஏற்று அன்பளிப்பு செய்தார். இந்நிதி திரட்டலில் மாணவர்களதும், ஆசிரியர்களதும், சேவை பாராட்டுக்குரியது. இந்நூலக வார ஆரம்பதினத்தன்று சமூகம் தந்து 500 ரூபாவுக்கு நூல்கள் உதவிய குளோபல் தொலைதொடர்பு ஸ்தாபன உரிமையாளர் திரு. மு. சிவராசா அவர்களுக்கும் இம் முயற்சியின் முன்னோடிகளான திரு. ந. பாலசுப்பிரமணியம் திரு. செ, ப. ஜீவானந்தம் ஆகியோருக்கு எமது நன்றி. நூலகராகவும் ஆசிரியராகவும் கடமையாற்ற செல்வி சின்னத்துரை அவர்களை நியமித்து உதவிய கல்விப் பணிப்பாளருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

## தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்தி

சமூக வாழ்வுக்கேற்ற பூரண மனிதனுக்கலே கலவியின் நோக்கமாகக் கொண்டு எமது பாடசாலை தொழில் நுட்பப்பிரிவு இயங்கி வருகிறது. மரவேலை, உலோக வேலை, நெசவு, வனைதல், விவசாயம், மனையியல்,வாழ்க்கைத்திறன் ஆகிய பாடநெறிகள் முறைசார்ந்த கல்விப் பிரிவில் கற்பிக்கப்படுகின்றன. யாழ் மாவட்டத்தில் 14 முன்னோடிப்பாடசாலைகளில் கற்பிககப்படும் வாழ்க்கைத்திறன் கல்வியானது மாணவருக்குப் பெரும் பயனளிக்கும் திட்டமாகும், இம் முயற்சியில் எமது பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் பங்கு பற்றிச் சிறப்பாக செயற்பட்டுப் பயன்பெற்றுள்ளார்கள் என்பதைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சிகொள்கிறேன்.

பூரணமனிதனெனவன் பொருளாதார வளமுடையவனாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். எனவே பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்கள் யாவரும் தொழிலொன்றைத் தெரிவதற்கான அறிவுகைத்திறன் நல்மனப்பாங்குடையவர்களாக இருக்க வேண்டும். இதைக் கருத்திற் கொண்டு கல்வித்திணைக்களம், பாடசாலை அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து மோட்டோர் பொறித்தொழில் உடையமைத்தல் ஆகிய பாடநெறிகள் இவ்வாண்டிலிருந்து கற்பிக்கப்படுகிறது. இதனால் சராசரி 100 மாணவர்கள் பயன்பெற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆசிரியர்கள் மிக உற்சாகமாகக் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்கள் இவ்வாண்டில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுத்தருவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

ஆசிரியர், மாணவரின் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலை வட்டார நிலைக் கல்விக் கண்காட்சியில் எமது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் காட்சிப் பொருட்கள் மிகத் திறமையானவை எனக் கல்விப்பணிப்பாளர் கல்வி அதிகாரிகளினால் பாராட்டப்பெற்றுள்ளது: இதற்குச் சான்றாக தொழில் நுட்பப் பிரிவில் மாத்திரம் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு 50 சான்றிதழ்கள் கிடைத்துள்ளன. மேலும் மாவட்டரீதியில் நடைபெறும் கண்காட்சியிலும் எமது பாடசாலை மாணவர்களின் காட்சிப் பொருட்கள் முக்கிய இடம் பெறவுள்ளன.

கடந்த காலங்களைவிட இப்போது தொழில் நுட்பப் பாடங்களைக் க. பொ. த சாதாரணப் பரீட்சைக்கு எடுக்கும் மாணவர் தொகை அதிகரித்துள்ளதோடு கடந்த ஆண்டுப் பெறுபேறும் பாராட்டக்கூடியதாகவுள்ளது.

தொழில் நுட்ப, முறைசாராக் கல்விப் பிரிவுகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவரின் திறனிலிருந்து ஏற்ற வழிமுறையில் மிக உற்சாகத்தோடு கடமையாற்றுவதே இதற்கான காரணமெனக் கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன். இவ் ஆசிரியர் குழாத்திலுள்ள நெசவு பாடத்துக்கு செல்வி K. வேலுப்பிள்ளை அவர்கள் ஆசிரியர் சேவைக்கால கல்வி ஆலோசகராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். என்பதும் பாராட்டப்படக் கூடிய செய்தியாகும்.


1987 ம் ஆண்டு தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் இவ்வேளையில் எமது பாடசாலை மேலும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. இதன் பிரகாரம் சுமார் 80,000/- பெறுமதியான மின் சூளை, வணை சில்லு போன்ற உபகரணங்கள் கல்வித் திணைக்களம் எமது பாடசாலைக்கு வழங்க முன்வந்துள்ளது. மேலும் முறைசாராக்கல்விப் பிரிவின் கீழ் வானொலி பேணல், கொம்பியூட்டர் பயிற்சி ஆகிய பாடநெறிகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் இத்துறையில் உள்ள தொழில் நுட்பவியலாளர் தட்டுப்பாட்டை ஓரளவுக்குக் குறைக்கக் கூடியதாகவிருக்கும் என நம்பலாம் இச் செயல் திட்டங்களை நிறைவு செய்வதற்கு எமது பாடசாலையின் அபிவிருத்திச் சபையும் முழுமூச்சுடன் செயற்படவுள்ளது. இதற்குக் கல்வித் திணைக்களத்தின் உதவியையும் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

## அனுதாபம்

எமது கல்லூரியில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் ஐ. வேலாயுதர் வி. கதிரவேலு, லிகிதர் எஸ். ஷண்முகதாஸ் மத்திய பிரிவுத் தலைவர் எஸ். குலோத்துங்கம் ஆகியோரது மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## நன்றி

எமது கல்லூரியில் 1985 யூலை முதல் இற்றை வரைக்கும் 475 மாணவர்கள் புதிதாகச் சேர்ந்துள்ளனர். இவர்களில் நால்வர் புலமைப் பரிசில் பெற்றவர்கள். இவ்வாண்டு க. பொ. த. (உ) பெறுபேறு கடந்த ஆண்டினைவிட கணிசமான அளவு கூடியுள்ளது. இவை கல்லூரி முன்னேற்றப் பாதையில் செல்கிறது என்பதற்கு அறிகுறியாகும். இதற்கென அயராது உழைக்கும் ஆசிரியர் குழுவுக்கு முதற்கண் நன்றி. அடுத்து இத்துரித முன்னேற்றத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் மாணவர்களுக்கும் பா. அ. ச. ப மா. ச நிர்வாக உறுப்பினர்க்கும் இப்பரிசளிப்பு விழாவுக்கு பொருளுதவி புரிந்த யாவர்க்கும் இவ்விழாவினைச் சிறப்பித்த பிரதம அதிதி கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் தம்பதியர்க்கும் பேராசிரியர் நேசையா அவர்களுக்கும் இவ்விழா சிறப்புற அமைய உழைத்த சகல ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கல்லூரி நிர்வாகத்தில் பெரும பங்கேற்று நடத்தும் துணை அதிபர் திருமதி. சி. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.



**R. Kirupalingam**

*Scored the highest marks (265) in College with an "A" in Acct at G. C. E. A/L Aug. 1987*



**A. Baskaran**

*Best Athlete Selected for National Athletics 1987*

# அன்னை எனது தெய்வம்

அன்னை எனது தெய்வம்
அன்பு கொண்ட தெய்வம்
அன்னை என்ற தெய்வம்
அமுத மான தெய்வம்

அன்பை அள்ளிப் பெய்து
அருளைக் காட்டுந் தெய்வம்
இன்பச் சோலை ஆகி
இதயம் பூக்குந்தெய்வம்

கரும்பு போலப் பேசி
கனியைப் போலப் பாடி
அரும்பு போல மலர்ந்து
அமுதம் ஊட்டுந் தெய்வம்

மலரின் இன்ப மணமும்
மணியின் வண்ண வடிவும்
புலரி தந்த ஒளியும்
பொலிய நிற்குந் தெய்வம்

கள்ளம் அற்ற உள்ளம்
காட்டிக் காட்டி நாளும்
மெள்ள மெள்ள என்னை
மேன்மை செய்த தெய்வம்

பொய்மைச் சீறித் தெய்வப்
பூசை செய்யக் காட்டி
உய்ய என்னைச் செய்த
உண்மையான தெய்வம்

குறும்பு செய்த போதும்
குழந்தை தானே யென்று
சிறந்த புத்தி சொல்லித்
திருத்தி வளர்க்கும் தெய்வம்

பாட்டுக் கதைகள் சொல்லிப்
படமுந் தொட்டுக் காட்டி
ஏட்டிற்பொருளை விளக்கி
என்னை வளர்க்குந் தெய்வம்

புழுதி யாடி உடலைப்
புன்மை செய்த போதும்
மழலை பேசி அணைத்து
வாரி அணைக்குந் தெய்வம்

கண்ணிற் கண்ட தெய்வம்
கவலைபோக்குந் தெய்வம்
எண்ணில் நெஞ்சில் இருத்தி
என்றும் ஏத்துந்தெய்வம்

ம. குமுதினி
ஆண்டு 10 B.

# நான் விரும்பும் பெரியார்

நான் விரும்பும் பெரியாராகிய இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகவும், எமக்குத் தாயாகவும், சமூக சேவகி ஆகவும், நூற்றியொரு ஆபிரிக்க நாடுகளைக் கொண்ட அணி சேரா இயக்கத்தின் தலைவியாகவும், இருந்து பெரும் பணி ஆற்றினார்.

இவர் 1917-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி அலகபாத்தில் இந்துப் பிராமணக் குலத்தில் பிறந்தார். அவருடைய தந்தை பெயர் ஜவகர்லால் நேரு. தாய் பெயர் கமலா. இவர் பிறந்த 1917-ம் ஆண்டில் வரலாற்றுப் பெருமை மிக்க சோவியத் புரட்சி இடம்பெற்றது. இளமையில் இவர் செல்லமாக இந்திரா பிரிய தர்சினி என அழைக்கப்பட்டார் இவர் தந்தை ஜவகலால்நேருவின் சக்தி மிக்க செல்வாக்கில் வளர்ந்தபடியால் பிற்காலத்தில புகழ் மிக்க செல்வியாக மிளிர்ந்தார் இவர் இளமையில் பம்பாயிற் கல்விகற்றார். பின்னர் ஜெனீவா மக்கள் கல்லூரியிலும், ஒக்ஸ்வேட் பல்கலைக்கழகத்திலும் உயர் கல்வி கற்றார். இவரது 17 ஆவதுவயதில் தாய் இறந்து விட்டார். பின்னர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் அங்கத்தவராகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார். கட்சிப் பணியில் ஈடுபட்ட இந்திரா காந்தி 1947-ம் ஆண்டு பெரோஸ் காந்தியைத் திருமணம் செய்தார். பின்னர் சுதந்திரப் போராளியாக பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டார், பின்னர் மகாத்மா காந்தி பற்றும்பெரியவர்களின் முயற்சியினால் இந்தியா சுதந்திரமடைந்தது. தந்தைக்குப் பின் மகளான இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராக இருந்து பெரும் பணிஆற்றினார். இவர் வாழ்ந்த காலத்தில் புரிந்த பணிகளும் சாதனைகளும் இன்றும் நம் கண் முன்னே நிற்கின்றன. இவர் 1983-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் திகதி இனவெறி கொண்ட இவரது மேன்மைவாய்ந்த சீக்கிய பாதுகாவலரால் சுட்டுக் கொல்லப் பட்டார். இவரின் மறைவு உலகமக்களுக்கு ஒரு பெரிய இழப்பாகும். இவருடைய பூதஉடல் அழிந்தாலும் புகழ் எமதுநெஞ்சங்களில் அழியாத ஓவியமாகிவிட்டது.

இ. இராஜசெழியன்
ஆண்டு 7 A

---

# சோமசுந்தரப்புலவர்

நான் விரும்பும் பெரியார் சோமசுந்தரப் புலவர். கதிர்காமர் இலக்குமிப்பிள்ளை ஆகிய இவர்கள் செய்த தவப்பயனால் சோமசுந்தரப் புலவர் கி. பி. 1880 ஆம் ஆண்டு யூன்மாதம் 12-ம் திகதி பிறந்தார்.

சோமசுந்தரப் புலவருக்கு ஏடு தொடக்கி ஆரம்பக்கல்வியைக் கற்பித்தவர் அருணாசல உபாத்தியார். பின்னர் தமது உறவினரான இராமலிங்க உபாத்தியாரிடம் ஆங்கிலமும் தமிழும் கற்று புலமை எய்தினார், புலவர் தமது பதினைந்தாவது வயதிலே பாடல்களை ஆக்கத் தொடங்கி விட்டார். புலவர் பதினைந்தாவது வயதிலே அட்டகிரி முருகவேள் மீது பதிகம் பாடியபோது பலர் வியந்து அவரைப் பாராட்டினர். யாப்பிலக்கணங் கற்றுக் கொள்வதற்கு முன்னரே தனிப் பாடல்களைத் திறம்படப் பாடும் வல்லமை அவருக்கு இயல்பாகவே அமைந்து கொண்டது அதனால் அவரை எல்லோரும் வரகவி என்று வழங்குவாராயினர் வட்டுக்கோட்டையிலுள்ள ஆசிரியர் சின்னத்துரை என்பவரும் புலவரும் அவ்வூரில் ஓர் ஆங்கில பாடசாலையைத் தொடங்கினர். அங்கே புலவர்

நாற்பது ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். அவர் மாணவர்களுக்கு ஆங்கிலம் தமிழ் இதிகாசம் என்னும் பாடங்களைக் கற்பித்தார். அவரிடம் இரண்டாயிரத்துக்கு அதிகமான மாணவர் கல்வி கற்று வெளியேறினர். புலவரது நற்பணியாலே தமிழ்க் கல்வியும் சைவசமயமும் வளர்ந்து சிறப்படைந்தன. நிலையில்லாத உலகத்திலே நிலையான பொருளை அறிய வேண்டும் என்னும் ஆசை அவருக்கு உண்டானது. அதனால் தமக்கு ஒரு சற்குருவைக் காட்டுதல் வேண்டுமென்று முருகப்பெருமானை வழிபட்டு வந்தார். அவருக்கு இருபத்தொருவயதிலே அப்பேறு கிடைத்தது. பெங்களூரிலிருந்து சுப்பிரமணிய சுவாமியார் என்பவர் நவாலியூருக்கு வந்தார். அவர் ஒரு ஞானி. அவர் புலவருக்கு இஃது எல்லாம் தரும் என்று ஓர் அருட் குறியைக் கொடுத்தார். அதனைப் புலவர் வைத்துப் பூசை செய்து வழிபட்டார். புலவர் தமது குருநாதனின் கட்டளைப்படி சின்னம்மை என்னும் தமது தாய் மாமன் மகளைத் திருமணஞ் செய்து இல்லறவாழ்வை இனிது நடாத்தி வந்தார். 1925 ஆம் ஆண்டு உயிரிளங்குமரன் என்னும் நாடகத்தை புலவர் எழுதி நடிப்பித்தார். அந்த நாடகத்தின் அருமை பெருமைகளை அறிந்த இலங்கைத் தமிழ்ப் புலவர்கள் புலவர் என்னும் பட்டத்தை அவருக்கு அளித்தனர். பள்ளிச் சிறுவர்களுக்கு ஏற்ற பாடல்களைப் பாடித் தரும்படி இலங்கைக் கல்விப் பகுதியினர் வேண்டினர். ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி முதலிய பாடல்களைப் பாடிப் பரிசும் முதன்மையும் பெற்றார். தந்தையார் இறந்த போது அவர் நினைவாகத் தந்தையார் பதிற்றுப் பத்து என்னும் விழுமிய நூலை எழுதினார். புலவர் ஆசிரியத் தொழிலினின்றும் இளைப்பாறிய பின்னரும் தமது இல்லத்திற் சித்தாந்த வகுப்பும் காவிய வகுப்பும் வைத்து நடாத்தி வந்தார். இவ்வாறு சிவ வாழ்விலே ஊறித் தமிழ்த் தாய்க்குப் பெருந் தொண்டு செய்த நக்கத்தாதத்தா கி.பி 1953 – ஆம் ஆண்டு யூலை மாதம் 10 - ஆம் நாள் சிவபதமெய்தினார்.

T. றமேஸ்
7 B

---

# எனது கிராமம்

எனது கிராமம் நெடுந்தீவு- நாலா பக்கமும் இந்து சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கும். இத்தீவு கடந்த காலத்தில் பால்தீவு என்றும் பசுத்தீவு என்றும் அழைக்கப்பட்டது. தற்போது டெல்வ்ற் என்று வழங்குகிறது. ஏழுமைல் நீளமும் ஐந்து மைல் அகலமும் கொண்ட இத்தீவின் அழகே தனித்துவமானது. இந்தத்தீவைச்சூழ இருக்கும் அழகிய கடற்கரையில் உட்கார்ந்தால் காலம் போவதே தெரியாது. கதிரவனின் வர்ணங்களில் கடலின் அழகையும் அமைதியையும் பார்க்கும் பொழுது கிறிஸ்து நாதரும் கலிலேயாக்கடலும் தான் எவர் மனதிலும் உதிக்கும்.

இங்கு குதிரைகள் ஏராளம் கூட்டம் கூட்டமாக சுதந்திரமாக வெளிலே என்னும் பகுதியில் காணப்படும் மேற்குப்பகுதியில் பரந்த புல்வெளிகளில் மந்தைகள் கூட்டம் கூட்டமாக மேய்ந்து திரியும். அடர்ந்த காடுகள் அழகாகக் காட்சிதரும் அன்றைய ஆட்சிக் காலத்தில் அரசர்களால் அமைக்கப்பட்ட வெடியரசன் கோட்டைகளின் இடிந்த கட்டிடங்கள் இன்றும் அழியாது ஆண்ட பரம்பரையின் வரலாற்றைக் கூறி நிற்கும்.

தற்போது இத்தீவில் பன்னிரண்டு பாடசாலைகள் உள்ளன. அவற்றில் ஒன்று (க.பொ.த) உயர்தர வகுப்புக்களைக்கொண்டு நெடுந்தீவு மகா வித்தியாலயம் என அழைக்கப்படும். எல்லாப்பாடசாலைகளும் இன்று கொத்தணி அமைப்பில் ஒரே அதிபரின் கீழ் இயங்குகின்றன. கடந்த காலத்தில் இத்தீவகம் உலகத்திற்கு அளித்த தனிநாயகம் அடிகளார் போன்ற ஏராளமான அறிஞர்களை விட எதிர்காலத்தில் இன்னும் அதிகமானவர்களை அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு ஒன்பது பெரிய கிறீஸ்தவ ஆலயங்களும் பத்துப் பெரிய இந்துக்கோயில்களும் காணப்படுகின்றன. இந்த ஆலயங்களின் அமைப்பு அத்தீவக மக்களின் இறைபக்தியை மட்டுமல்ல அவர்களின் கலை கலாச்சார ஆர்வத்தையும் வள்ளல்த்தன்மையையும் எடுத்தியம்புகிறது.

இத்தீவு விருந்தோம்பலில் மிகச்சிறந்து விளங்குகிறது. இன்றைய நிலையில் பிரயாணக்கஸ்டம் காரணமாகப்பின் தங்கிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது இதுமிகவும் கவலைக்குரிய விடயமாதலால் ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் அக்கறையுடன் பரிசீலனை செய்யவேண்டியுள்ளது.

அ. நிரஞ்சன்
ஆண்டு 8 B

# நான் ஆசையோடு வளர்க்கும் பிராணி

நான் ஆசையோடு வளர்க்கும் பிராணி நாய் ஆகும். எனது நாய்க்கு ஜிக்கி என்று பெயரிட்டு அன்புடனும், ஆதரவுடனும் வளர்த்து வருகின்றேன்.

ஜிக்கி மிகவும் அழகான தோற்றமுடையது. 'ஜிக்கி' கரிய நிற உரோமங்களை அடர்த்தியாகக் கொண்ட சடையை உடையது. சிறிய கண்களும் நீண்டு தொங்கும் செவிகளும் எனது ஆசைப் பிராணிக்கு கிடைத்துள்ளன. ஜிக்கியின் கம்பீரம் யாரையும் கவரும் தன்மையுடையது. அதன் அழகுத் தோற்றத்தினால் நான் அதனிடம் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறேன். ஜிக்கியின் தோற்றத்தை காணும் பலர் தம்மிடம் இதுபோல் அழகான ஒரு நாய் இல்லையே என்று கவலையடைந்தனர். சிலர் பொறாமைப்பட்டனர்.

நான் பாடசாலைக்குப் போகும் பொழுது 'ஜிக்கி' வாசல்வரை வந்து வழியனுப்பிவிட்டுச் செல்லும். பின்னர் பாடசாலை விட்டு வரும் பொழுது அது எனக்காகக் காத்துநிற்கும். நான் வந்ததும் வாலை ஆட்டிக் கொண்டு என்னைச் சுற்றிச் சுற்றி வரும். நான் விளையாடும் பொழுது பந்து வெளியில் விழுந்து விட்டால் 'ஜிக்கி' பந்தை வாயில் கௌவிக் கொண்டு வந்து என்னிடம் தரும். நான் அதனுடன் விளையாடுவதில் என்னை மறந்து நேரம் செல்வதே தெரியாமல் இருந்து விடுவேன். அதன் செய்கைகள் எனக்குச் சிரிப்பையூட்டும்.

கிழமைக்கு ஒரு முறை ஜிக்கியைச் சவர்க்காரம் போட்டுக் குளிப்பாட்டுவேன். நான் சாப்பிடும் பொழுது அது கீழிருந்து பார்த்துக் கொண்டிருக்கும். எனது சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஜிக்கிக்கு சாப்பாடு போடுவேன். மாலையில் மாமிசம், பிஸ்கட், பால், முதலியவற்றை அதற்கு உண்ணக் கொடுப்பேன். நான் எங்கு சென்றாலும் ஜிக்கி என்னுடன் வரும். அதை நான் போகும் இடமெல்லாம் கூட்டிச் செல்வேன். நான் படுக்கும் கட்டிலின் கீழ் ஜிக்கியும் படுக்கும். நான் காலையில் எழுந்ததும் ஜிக்கியும் எழுந்துவிடும்.

ஜிக்கி பலவகையில் நன்மை செய்கிறது. அது ஆடு மாடுகளையோ, கோழி பூனைகளையோ வர விடாது. கள்வர்களை, அயலவர்களைக் கூட வளவுக்குள் வரவிடாது குரைக்கும். இரவும் பகலும் வீட்டைக் காத்து வருகிறது. வேறு நாய்கள் வரின் கோபங் கொண்டு சண்டைசெய்து துரத்திவிடும். கோழிகளை எனது தோட்டப் பக்கம் வரவிடாது பாய்ந்து துரத்தும். தனக்கு அறிமுகப்படாதவர்கள் என்னிடம் வருவது கண்டால் ஓடோட விரட்டும். ஜிக்கியின் வீரத்தினாலும், விசுவாசத்தினாலும் எனக்கு அதன்மேலுள்ள ஆசை மேலும் மேலும் வளர்கிறது. நன்றிக்கு ஒரு பிராணி 'ஜிக்கி'.

**செல்வி ப. மைதினி**
ஆண்டு 8 C

---

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

மக்கள் நோயின்றி இருத்தல் வேண்டும். ''அரிது அரிது மானிடர் ஆதல் அரிது'' என்று ஒளவையார் கூறுகிறார். அதிலும் கூன், குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என்கிறார். மனித பிறப்பு எல்லாவற்றையும விடப் மேலானது. ஆகவே மனிதன் நோயின்றி வாழ வேண்டும். மனிதன் நோய்வாய்ப்பட்டானால் அவனது உடல் நலம் குன்றும். இறக்கநேரிடும். எனவே மனிதன் சுத்தமாக இருக்கப்பழக வேண்டும்.

''சுத்தம் சுகம் தரும்'' ''எச்சில் இரக்க வைக்கும்'' என்பார்கள். இது பழமொழி சுத்தமாய் இருந்தால் நோய் வராது. மக்கள் அசுத்தமாக இருத்தல் கூடாது. ஆஸ்பத்திரிகள் மருந்துச்சாலைகள் போன்றவை மூடப்படும் அபா

யம் இன்று ஏற்பட்டுள்ளது. ஆகவே மனிதர் சுத்தமாக இருக்கவேண்டும். நோயின்றி வாழப் பழகவேண்டும்.

நாம் சுத்தமாயிருக்கவேண்டிய முறைகளை ஆராய்வோம். முதலாவதாக விடியற்காலையில் எழுந்ததும் பல் துலக்கி முகம் கழுவவேண்டும். பின் சாப்பிடும்போது கைகளையும் நகங்களையும் கழுவி சுத்தமாகச் சாப்பிடவேண்டும். சாப்பிட்டவுடன் வாயில் நீர் ஊற்றி வாயைக்கொப்பளிக்கவேண்டும். இவ்வாறு உடலைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். இரவு படுக்கும் பொழுது பல்தீட்டி வாய் கொப்புளித்தல் அவசியமாகும்.

இனி நோய் பரவும் முறைகளை அவதானிப்போம் நோயாளி ஒருவரின் படுக்கைகளை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. அடுத்ததாக நோயாளி ஒருவரை எல்லா இடத்திலும் புழங்க விடக்கூடாது அவருக்கென்று நல்ல காற்றோட்டமுள்ள அறையை ஒதுக்கி அவரை அதிலே வசிக்க விடுதல் வேண்டும். அவர் பாவித்த உபகரணங்களை இன்னொருவர் பாவிக்கக் கூடாது. அப்படிப் பாவிப்பாராயின் அவருடைய நோய் தொற்றக் கூடும். ஆகவே, சுத்தமாக இருக்கப் பழகுங்கள். நோய் தொற்றாது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". வாழ்க்கையை இனிதே அனுபவிக்க இயலும்.

**அ. உமாகாந்தன்**
ஆண்டு 9 A

---

# தொலைக் காட்சி பார்ப்பதினால் நன்மையா? தீமையா?

தொலைக்காட்சி பார்ப்பதால் நன்மையும் இருக்கிறது அதே அளவு தீமையும் இருக்கிறது. தொலைக்காட்சி பார்ப்பதால் தாய்மார்கள் தமது குழந்தைக்கு வரும் நோய்களில் இருந்து பாதுகாக்கின்றனர். மாணவர்களும நாடகம், பரத நாட்டியம் முதலியவற்றை கண்டு மகிழ்கின்றனர். மற்றும் பற்பல விளையாட்டுக்களையும் பார்த்து இரசிக்கின்றனர்.

உயர்தர மாணவர்களுக்கு தொலைக்காட்சியில் கல்வி போதிக்கப்படுகிறது. இதனால் அவர்கள் பெரும் நன்மை அடைகின்றனர்.

மற்றும் உலகில் உள்ள விதம்விதமான பறவைகள், மிருகங்கள் முதலியனவற்றை காண்கின்றனர். அவை எந்த சூழலில் எப்படிப்பட்ட காலநிலையில் வாழ்கின்றன என்ற அறிவை பெறுகின்றனர்.

மேலும் எந்த நாட்டில் எப்படிப்பட்ட மக்கள் வாழ்கின்றனர் என்பதை வீட்டில் இருந்து கொண்டே அறிகிறான் மனிதன் அவர்கள் எப்படி உணவு உட்கொள்கின்றனர், எந்தெந்த வேலைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதையும் அறிகிறான்.

தொலைக்காட்சி பார்ப்பதால் உலகில் நடக்கும் பிரச்சனைகள், மாக்கலவரங்கள் முதலியவற்றைக் காணமுடிகிறது.

தொலைக்காட்சி பார்ப்பதால் மனிதன் விஞ்ஞான அறிவையும் பெறுகிறான். சந்திர மண்டலத்திற்கு செல்லும் விண்வெளிக் கப்பல், சந்திரன் மற்றும் கிரகங்கள் முதலியவற்றை நேரே காண்கிறான். மேலும நாளை நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளையும் அறிந்து கொள்கிறான். மழை நாளை வரும் என்று இன்றே தொலைக்காட்சியில் கூறுகிறார்கள். அதனால் மனிதன் முன்னேற்பாடுகளை செய்து பாதுகாப்புப் பெறுகிறான்.

சந்திரனில் காலடி வைத்த மனிதன் விண் வெளிப்பயணத்தில் சேகரித்த செய்திகள் முதலிய வற்றை நாம் தொலைகாட்சியில் காண்கிறோம். வால்வெள்ளி, நட்சத்திரங்கள் முதலியவற்றைத் தொலைக்காட்சியில் மிகத்தெளிவாக காண்கிறோம்.

தொலைக்காட்சி பார்ப்பதால் அறிவை பெறுவதுடன், பொழுதைப் போக்கவும் முடிகிறது

தொலைக்காட்சி பார்ப்பதால் உள்ள தீமைகள் பல மாணவர்கள் படிப்பு நேரத்திலும் தொலைக்காட்சி பார்க்கின்றனர் இதனால் அவர்களுடைய கல்வி மிகவும் பாதிப்படைகிறது இதனால் அவர்களது பெற்றோரும் ஆசிரியரும் கவலைகொள்கின்றனர். மற்றும் ஆபாசப் படங்களைப்பார்ப்பதால் மாணவர்கள் சீரழிந்து போகிறார்கள். மின்சாரத்தில் தொலைக்காட்சி வேலை செய்வதால் மின்சாரச் செலவு ஏற்படுகின்றது. நெடுநேரம் தொலைகாட்சியினைத் தொடர்ந்து பார்ப்போமாயின் கண்ணின் பார்வை நரம்புகள் பாதிக்கப்படுகின்றன.

எனவே தேவை கருதித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்துதல் போற்றுதற்குரியது.

*S. வதனி*
ஆண்டு 10 A

---

# வானத்தில் பூத்திருக்கும் வண்ணமலர்

வட்டமான வடிவழகி வானுயர்ந்த ஒளியழகி
எல்லையில்லாத் தண்ணொளியை எழிலுடனே
பரப்பிடுவாள்
விண்ணகத்தே இவளாட்சி வீறுடனே
விளங்கிடவே
மண்ணகத்தே தண்ணொளியை மாண்புடனே
தந்திடுவாள்

தேய்ந்து போன நம்மனத்தைத் தேறவைக்கும்
தேன் நிலவே
தேசம் முழுவதிலும் தெறித்து நிற்கும் பால்
நிலவே
வீசும் நின்னொளியால் பேசும் மனித இனம்
நாளும் பெற்றிடுமே நல்லவுயர் நன்மைதனை

மழலைகளின் இளமனதை மகிழ்வுடனே
மயக்கிடுவாள்
மாலைப் பொழுது தனில் எழிலுடனே
விளங்கிடுவாள்
காலைப் பொழுதுதனில் காணமுன்
மறைந்திடுவாள்
மாசில்லா நிலவு இவள் மானிலத்தில்
மலர்ந்திடுவாள்.

வீட்டு முற்றமதில் விழிப்புடனே நாமிருக்க
வீதி விளக்குகள்போல் வீசும்ஒளி நீயளிக்க
வீசு தென்றலது தேடிவந்து நம்முடலில்
தீஞ்சுவையைக் காட்டித் தேன்சுவையை
ஊட்டிடுதே

வெள்ளிகள் மத்தியிலே மின்னுகின்ற
வெண்ணிலவே
அள்ளிப் பொழிந்திடுவாய் அழகுநிறை
அகவொளியை
பள்ளிச் சிறுவர்பல முறைபாடிப் பரவிடவே
பாரினில் பலகாலம் பாங்குடனே
மிளிர்ந்திடுவாய்

செல்வி. ஜெ. அகல்யா
ஆண்டு 10 D

# இருண்ட பக்கங்கள்

ஆலைச் சங்குகளின் அலறல்
அழுகின்ற குழந்தைகளின் குமுறல்
ஓலைக் குடிசைகளின் ஒழுகல்
எரியாத அடுப்புக்களின் ஏக்கம்
நாளைப் பொழுதைஎண்ணி நம்முள்
நடுங்கிச் சாகின்ற வயிறு
உருண்ட உலகத்தின்
இருண்ட பக்கங்கள்

கனவுகளின் சிதறல்கள்
காலத்தின் கதறல்கள்
ஏழைகளின் உலகம்
எத்தனை பேரறிவார்?

செல்வி. சி. மதிவதனி
ஆண்டு 10

---

# புதுமைப் பூக்கள்

புண்ணிய பூமியிலே
புஷ்பித்த
புதுமைப் பூக்கள் நாங்கள்
பூமித்தாயின்
மடியினிலே
முகம் புதைத்து
குறட்டை விட்டுக்
குவலயத்தைக்
குட்டிச் சுவராக்கிட
நாம் விரும்பவில்லை.

இல்லங்களின்
விளக்கு விருச்சங்களானாலும்
வீதி இருளை
அகற்றிடவும்
எமது இலட்சிய
விளக்கு துணைபுரியும்
சமுதாய முற்றத்தில்
அநியாயக் குப்பைகள்
வாழ்க்கை நீரோடு
சங்கமிக்கும் போது
அநீதிப்பயிர்
புதுசாய்...
அங்கே முளைக்கும்
அப்போது
நீதி நியாயம்
கண்ணை இறுக மூடிக்கொள்ளும்.

ஆனாலும்
புதுமைப் பூக்களின்
இரத்த நாளங்கள்
துரிதமாய் இயக்க
இலட்சியக் கோடுகளோடு
பேனா கையிலேந்தி
மாற்றத்தை நோக்கி
பயணிக்கும்
சமுதாயச் சாக்கடையில்
சரிவான எண்ணங்கள்
நாளைகளின்-
இருதயத்தை
மறைந்திருந்து
உணவாக்கும்
அப்போதும்
இருட்டுலகம்
அநீதியைத் தேடும்
அதனைக் கண்டு
புதுமைப் பூக்கள்
சோகக் கண்ணீரைத்
தாரை வார்க்கும்
ஆனாலும்
அதைக் கொண்டு
உயர் மாற்றத்தை
உண்டு பண்ணும்.

அகிலா கணேசன்
ஆண்டு 11 C

# மேலைத்தேய விஞ்ஞானிகள்

அரிய விஞ்ஞான சாதனைகள் மேலைத் தேசங்களில் இடம் பெறுகின்றன. இந்திய விஞ்ஞானிகளும் அரிய சாதனைகளுக்காக நோபல் பரிசு பெற்றுள்ளார்கள். இவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி நாமும் சாதனைகளைப் புரிய வேண்டும். விஞ்ஞானிகளின் சுருக்கமான வரலாறு நம்மை இத்துறையில் ஊக்குவிக்க உதவும்.

## பெஞ்சமின் பிராங்க்லின் *(1706-1790)*

பிராங்க்லின் அமெரிக்காவில் பொஸ்டன் (**Boston**) நகரில் தாய் தந்தையருக்குப் பதினைந்தாவது குழந்தையாகப் பிறந்தார். இவரது பத்தாம் வயதோடு படிப்பு நின்று விட்டது. தமது சுயமுயற்சியினால் முன்னேறிப் புத்தகங்கள் பலவற்றை எழுதியதோடு சிறந்த அரசியல்வாதியாகவும், விஞ்ஞானியாகவும், தத்துவ ஞானியாகவும் விளங்கினார். இடிமுழக்க முகிலினுள் பட்டத்தை ஏற்றி அதனை நூலினூடாக மின் பாய்வதை முதன் முதலில் காட்டினார். மின் பெரிய கட்டிடங்களையும் மரங்களையும் தாக்குகின்றது. இன்று உயர்ந்த கட்டிடங்களில் பயன்படும் இடியேறு தாங்கியைக் கண்டு பிடித்தவர் பெஞ்சமின் பிராங்க்லின் ஆவர்.

## சாமுவேல் பின்லிப்றீஸ் மோர்ஸ் *(1791-1872)*

அமெரிக்காவில் சாள்ஸ் ரவுனிற் பிறந்தார். அக்காலத்தில் புகையிரதம், குதிரைவண்டி முதலிய வாகனங்கள் மூலமே செய்திகள் அனுப்பப்பட்டு வந்தன. ஓவிய விற்பன்னரான மோர்ஸ் 1832 முதல் நியூயோக் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் இருக்கும்போது எழுத்துக்களுக்குச் சுருக்க ஒலிக்குறிகளினால் ஒரு அமைப்புத் திட்டத்தை (**Code**) அமைத்தார். 24-5-1854ல் செய்திகளை அனுப்பி வெற்றி கண்டார். இவ்வாறு இப்பெரியார் மின்சாரத் தந்தியைக் கண்டபின் தூரத்திலுள்ள இடங்களுக்கு விரைவிற் செய்திகளை அனுப்பப் பெரிய வசதி ஏற்படலாயிற்று

o— என்னும் குறிகளை ஏற்றவாறு பயன்படுத்திச் செய்தியை அனுப்புகிறார்கள்.

## மார்க்கோனி *(1847-1937)*

இத்தாலிய விஞ்ஞானியாகிய இவர் மின்சார அலைகளை ஆராய்ந்து (1896ல்) செய்திகளை இரண்டு மைல் தூரத்திற்குப் பரப்பினார். பின்னர் கூடுதலான தூரங்களுக்கும் பரப்பித் தமது ஆராய்ச்சியில் வெற்றி கண்டு இங்கிலாந்தில் தபாற் பகுதியினருக்குக் காட்டி பெரும் புகழீட்டினார். இத்தாலிய அரசாங்கம் இவரை அழைத்து ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைத்துக் கொடுத்துதவியது. 1901 ல் போல்டு (**Poldhu**) நகரிலிருந்து நியூபவுண்லாந்துக்குக் கம்பியில்லாத தந்திச் செய்திகளைப் பரிமாறி முன்னேற்றங் கண்டார். 1909 ல் பெளதிகத் துறையில் நோபல் பரிசு பெற்றார். இவரது விடா முயற்சியினாலும் விவேகத்தாலும் வீடுகள் தோறும் இன்று வானொலிப் பெட்டிகள் இருப்பதைக் காண்கின்றோம்.

இந்திய விஞ்ஞான மேதையான ஜெகதீஸ் சந்திரபோஸ் என்பாரே முதன் முதலில் வானொலிச் செய்தி முறையைக் கண்டு பிடித்தார் எனவும் அவரது நண்பரான மார்க்கோணி பின்னர் அதைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து புகழ் தேடிக் கொண்டாரெனவும் கூறுவாருமுளர். தற்காலத் தொடர் கருவி தோன்றுவதற்கு மார்க்கோணியின் ஆராய்ச்சிகள் முன்னோடியாக இருந்தன.

## தோமஸ் ஆல்வா எடிசன் *(1847-1931)*

அமெரிக்காவில் மிலான் நகரத்தில் வறிய குடும்பத்தில் எடிசன் பிறந்தார். பன்னிரண்டாம் வயதில் புகையிரத நிலையங்களில் பத்திரிகை விற்று சம்பாதிக்கத் தொடங்கினார். ஒரு புகையிரத அதிகாரியினது குழந்தையின் உயிரைக் காப்பாற்றியதற்காக அவ்வதிகாரி எடிசனைத் தந்திப் பகுதியிற் படிக்க வைத்தார். தமது

நுண்ணறிவினால் ஆயிரத்துக்கு மேற்பட்ட புதுப் பொருளைக் கண்டு பிடித்தார். அவற்றுள் வாக்குகளைப் பதிவு செய்யுங் கருவி சுயமாக இயங்குவதற்கு தந்தி, அச்சுத் தந்தி, பதிவுக்கருவி, பாடுங்கருவி, (கிராமபோன்), செவிடர் உபயோகிக்கும் எடிபோன், அசையும்படக்கருவி, மின் சார விளக்கு என்பன இவர் கண்டு பிடித்தவற்றுட் சிலவாகும். 1899ல் எஸ்போட்டர் என்பவரின் உதவியுடன் எடிசன் முதன் முதல் ஒரு கதையைத் திரைப்படமாக்கி வெளியிட்டார். இன்று எடிசனின் ஆராய்ச்சித் தொண்டின் பயனாகத் தந்தி முறைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன வீடுகளில் மின்சார விளக்குகள் எரிகின்றன. விழாக்களில் ஒலிபெருக்கிகள் பாடுகின்றன. மக்கள் படக்காட்சிகளைக் கண்டு மகிழ்கின்றனர்.

### அலெக்சாந்தர் கிரகாம் பெல் 1847-1922

இவர் ஆசிரியரும் பல நூல்களை எழுதியவருமான அலெக்சாந்தர் மெல்வில்பெல் என்பவருக்கு மகனாக இங்கிலாந்திலுள்ள எடின்பரோ நகரிற் பிறந்தார். லண்டன் சர்வகலாசாலையில் பி. எச். டி. (Ph. D.) பட்டமும் பெற்றார். செவிடர்களைப் படிப்பிக்கும் முறையில் ஊக்கங்கொண்டு வெற்றி கண்டார். பொஸ்டன் நகர்க் கல்லூரியிற் பேராசிரியராய் இருந்தார். அங்கு விடுதிச் சாலையில் ஒரு நாள் இவர் ஒரு பக்கத்தில் இருந்து பேசிய பொழுது கம்பியினாற் தொடுக்கப்பட்ட மறுபக்கத்தில் நின்றோருக்கும் ஒலி கேட்டது. ஆனாலும் இந்நிகழ்ச்சியைப் பலர் முற்றாக நம்பவில்லை. எனவே ஒரு பொருட் காட்சியில் உபகரணங்களை அமைத்து இவர் ஒரு பக்கமும் பிறேசில் மன்னர் மறுபக்கமுமாக இருந்து பேசினர் அதன் பின்னரே எல்லோரும் நம்பினர். இவ்வுபகரணமே வீடுகளிலும், வியாபார ஸ்தலங்களிலும், மற்றும் எவ்விடங்களிலும் நாம் காணும் தொலைபேசி (டெலிபோன்) ஆகும் இவரே எடிசன் ஆராய்ந்ததைத் திருத்தி ஒலிபதிவுக் கருவி (போனோகிரவ்) அசையும் பாட்டியந்திரம் (போட்டோபோன்) என்பனவற்றையும் கண்டுபிடித்தவராவர்.

ம. தவராஜ்மதிச்சந்திரன்
ஆண்டு 9 A

---

# கல்வியும் கைத்தொழிலும்

இவ் வையகத்தின் கண் வாழும் எல்லா மக்களும் தம்முயிரையும் உடம்பையும் பாதுகாத்து இனிது வாழ்தற்கு இன்றியமையாத கருவிகள் இரண்டு அவை கல்வியும், கைத்தொழிலுமாகும். கல்வி என்பது அறிவை வளர்த்தற்கு ஏதுவான படிப்பு கைத்தொழில் என்பது உடம்பை வளர்த்தற்கு ஏதுவானது உணவு வருவாயைத் தரத்தக்க ஒரு தொழில். ஆகவே கல்வியும் கைத்தொழிலும் அறிவையும் உடம்பையும் வளர்த்தற்கு வாய்ப்பான ஏதுக்கள் என்பது தெளிவாகும். பெரும்பாலும் உலகத்தின் எல்லாப் பகுதியிலும் நடக்கும் தொழில்களுக்கும் கல்வியானது முதன்மையாக வேண்டப்பட்டு உடம்பைப் பாதுகாப்பதேயாயினும் சிறப்பாக ஆராயுமிடத்து கல்வி உயிரைப் பாதுகாத்து வளர்ப்பதற்கே கருவியாய் இருக்கிறது. கைத் தொழிலோ எவ்வளவு நுட்பமாகச் செய்யப்படினும், அது நமக்குக் கல்விபோல் நேரே பயன்படாது. எத்தொழிலைச் செய்வதாயிருந்தாலும் அதற்கு அறிவு வேண்டியிருக்கின்றது. அறிவில்லாமல் எதனையுஞ் செய்தலியலாது. கல்லாதவர்க்கு அறிவை வளர்த்தல் இயலாதது. கல்லாதவர் விலங்குகளை ஒப்பார். பகுத்தறிவுக் கல்வி அறிவில்லாமல் விளக்கம்பெறாது அறிவுடையவர் ஒரு தொழிலைத் திருத்தமாகவும்

விரைவாகவும் செய்து முடிப்பதைக் கண்டு நாம் எவ்வளவு மகிழ்ச்சியும் வியப்பும் அடைகிறோம். இவை யாவற்றிற்கும் அடிப்படையாய் அமைந்து இருப்பது கல்வி அறிவு அன்றோ!

அறியாமைக்கும் இருளுக்கும் மிகவும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு என்றே சொல்லலாம். அறியாமை அகஇருளும் இருள் புற இருளுமாகும். அறியாமை மக்கள் மனதில் இருள் படரச் செய்து பல இடையூறுகளுக்குக் காலாகின்றது. ஆனால் இருளோ வெளியுலகில் பேரிருளைப் படரச் செய்து இப்புவியைப் பேதுறச் செய்கின்றது. எல்லா உயிர்களின் அறிவையும் அறியாமை என்னும் ஒரு பேரிருள் மறைத்துக் கொண்டிருக்கின்றது. இருளைப் போக்குவதற்கு ஒளியினுதவி கட்டாயமாக வேண்டுவது போல் நமதறிவை மறைக்கும் அறியாமையைப் போக்குவதற்கு கல்விப் பொருள் இன்றியமையாதது உடற் பாதுகாப்பின் பொருட்டு எத்தொழிலைச் செய்தாலும் கல்வியின்றி அதனைச் செய்தலாகாது. நம்நாட்டவர்களுள் அநேகர் கல்லாமல் அறியாமையிலேயே தங்கள் காலத்தைக் கழித்துப் பேதைகளாய்க் கிடந்து மாண்டு போகின்றனர். ஆனால் இறைவனால் அருளப்பட்ட இப்பிறவியில் நாம் நமது உடம்பைப் பாதுகாத்து அறிவை வளர்த்து அறியாமையைத் தொலைத்துப் பேரின்பத்தையடைய வேண்டும் இம்மை இன்பங்களைச் சிறப்பாயடைந்து மகிழ்வதற்கும் கல்வியறிவு கட்டாயம் வேண்டும் அன்றோ.

உயர்ந்த கல்வியறிவு இல்லாதவன் எவ்வளவு பொருள் வளத்தானுயிருந்தாலும் அவற்றை நுட்பமாய்த் துய்த்து மகிழும் வழியறியாமையால் துன்பத்திலேயேகிடந்து மாண்டுபோவான். ஆகையால் இன்பத்தைப் பெறவேண்டுவோர்க்குக் கல்வியறிவு முதன்மையாக வேண்டும் என்பதை எல்லாரும் கருத்தில் பதித்தல் வேண்டும். மக்களுக்குக் கண்கள் இரண்டு இருந்தும் அவர்கள் அறியாமை என்னும் இருளின் முன் குருடர்களைப்போல் தடுமாறுகிறார்கள் இன்று உலக மக்களிடையே நடந்து வரும் கொடுமைகளுக்கும் எல்லாம் அடிப்படையான ஏது அறியாமையேயாகும்.

ஐரோப்பா முதலான அயல் நாடுகளிலுள்ள மேன்மக்களே கல்வியறிவில்லாமல் எத்தொழிலும் செய்யமாட்டார்கள் அவர்களில் எந்தத் தொழிலைச் செய்கிறவர்களும் கல்வியறிவிற் சிறந்தவர்களாகவே காணப்படுகின்றனர் ஐரோப்பிய நன்மக்கள் தமக்குள்ள கல்வியறிவால் பற்பல புது எந்திரங்களை அமைத்து, அவற்றின் உதவியினால் ஒரு கைத்தொழிலைச் சொற்ப செலவில் மிகவும் நேர்த்தியாகவும் திறமையாகவுஞ் செய்து முடிக்கின்றனர் அஃதன்றி யேலை நாடுகளில் அறிவு வாய்க்காதவரும் தொழிற் கல்வியில்லாதவரும் தொழில்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் ஒரே ஒரு கால் அவர் மறைந்து செய்து போந்தாராயின் அஃது அறிவுடையோரால் பாராட்டப்படமாட்டாது.

ஆனால் நம் நாட்டிலோ உணவு தருவதற்கு ஏதுவான தொழில்கள் எல்லாம் கல்லாதவரால் செய்யப்படுகின்றன. தச்சு வேலை, இரும்பு வேலை பித்தளை வேலை, நெசவு வேலை, கட்டிட வேலையென்று இவையெல்லாம் நம் நாட்டில் கல்லாதவரால் மிகுதியும் செய்யப்படுகின்றன.

தொழில்கள் கல்வி அறிவில்லாதவரால் செய்யப்பட்டால் அவற்றுக்குப் பெருமை வராமையோடு பயனும் உண்டாதல் இல்லை என்பதை ஆசிரியர் திருவள்ளுவனாரும்

"கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்"

எனக்கல்வி அறிவில்லாதவர் செய்வன அறிவுடையாரால் பாராட்டப்படமாட்டா என்று பொருள் அமைத்து உண்மையை அறிவுறுத்திப் போந்தார்.

ந. ஜீவகுமார்
ஆண்டு 10A.

## Netball Team



SEATED : Mr. M. Ramalingam (Principal) M. Sakeela (Capt.) T. Vijayanirmala (Vice Capt.)
Left to Rt. K. Krishnaverni Mrs. M. Arumainayagam (Teacher in Charge)

STANDING : R. Premalatha, T. Jeyanthi, M. Thiruvarulchelvi, S. Mathivathani, P. Anparasi

## "மாலைக் கடற்கரை"

கண்ணும் கருத்தும் ஒருங்கே களிப்படையும் மாலைவேளை கதிரவன் தன் பொற்கிரணங்களை மடக்கியவாறு பகல் முழுதும் ஆட்சி செய்த களைப்பினால் கீழ்த்திசையில் பள்ளி கொள்ளச் சென்று கொண்டிருந்தான்.

கடற்கரையின் வெண்மணற் பரப்பிலேயிருந்த எல்லோரும் செங்கதிரோனின் அழகை அள்ளிப்பருகி வியப்புடன் இருந்தார்கள். சிறுவர்கள் மணல் வீடு கட்டியும் பலவிதமான விளையாட்டுக்களிலும் கூட்டம் கூட்டமாக ஈடுபட்டிருந்தார்கள் அலைகள் திரண்டு வந்து கரையிலே சங்கமித்தன. குபுகுபு காற்று இதமுடன் வீசிக் கொண்டிருந்தது. வானத்திலே வண்ண வண்ணப் பட்டங்கள் அசைந்தாடிச் சென்று கொண்டிருந்தன அவைகளில் பொருத்தப்பட்ட விண்ணின் ஒலி விண்ணையும் அதிர வைத்துக் கொண்டிருந்தது.

காலையிலே கொண்டு வந்த மீனை விற்று மனைவி மக்களுடன் உண்டு களித்து விட்டு மறுநாள் உணவுக்காக உழைப்பதற்குப் படகுகளில் மீனவர்கள் சென்று கொண்டிருந்தார்கள் மேலெழும்பும் அலைகளையெல்லாம் எதிர்த்து ஆழ்கடல் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்: சிறு தொழில் செய்வோர் சிறிய வள்ளங்களில் சென்று கொண்டிருந்தார்கள். கடற்கரைக்கு மிக அண்மையில் வலைவீசி மீன் பிடிப்போரும் ஆங்காங்கே காணப்பட்டார்கள். வலையில் பட்ட மீன்களைப் பறியில் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

பலதரப்பட்ட வாகனங்களிலும் மக்கள் தங்கள் வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். அவைகளுக்கெல்லாம் இடம் கொடுத்துப் பாதசாரிகளும் நடந்து கொண்டிருந்தார்கள்.

கடற்கரையிலே பொருத்தப்பட்ட மின் விளக்கின் ஒளியையும் மிஞ்சி ஆங்காங்கே பந்தங்கள் போன்ற வெளிச்சங்கள் காணப்பட்டன. அவை அங்குள்ளவர்களுக்கு உதவக் கூடிய பொருட்கள் விற்கும் விற்பனை நிலையங்களின் ஒளி, ஐஸ்பழம் விற்கும் வானிலிருந்து இனிய பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. கடற்கரையிலே அந்த இனிய மாலையைக் கண்டு களித்த கழி பேருவகையுடன் அங்கிருந்த கூட்டம் சிறிது சிறிதாகக் கலையத் தொடங்கியது. கடற்கரை வெறுமையடைந்தது. கடலும் தன் காட்சியை நிறுத்தி அமைதி கொண்டது. களிப்படைந்தவர்கள் கலைந்து விட்ட கவலையோ என்னவோ?.

**செல்வி ஆனந்தி**
ஆண்டு 10 C

## அம்மா கலைவாணி

அம்மா கலை வாணி
அடியேற்கு ஒருவரம் தா
இம் மாநிலம் சிறக்க
ஏற்றவற்றைத் தந்தருள் செய்!
அரக்கன் மகிடனை — நீ
உரம் பிளந்து உருக்குலைத்தாய்
இரக்கம் என்றில்லா
எத்தனையோ நம்மவர்கள்
செய்யாக் கொடுமைகளைச்
செய்து உயிர் வாழ்கின்றார்
மெய்யாகவே இந்த
மேதினியை வாழவைக்க
புல்லரக்கர் யாவரையும்
போயகலச் செய்திடுவாய்!
பொல்லாங் கெல்லாம் இங்கு
போக்கி அருள் புரிவாய்!
கொள்ளை கொலை எல்லாம்
கோயிலுக்கே வந்ததம்மா!
ஐந்து சதக் கீரை
அடா விலையம்மா!
நொந்துழைக்கும் நாங்கள்
நோய்ப்பட்டு வாழ்கின்றோம்!
இந்த கொடுமைகளை
போக்க வழி நாம் காணோம்!
பெய்யும் மழை கூட
பெய்யாத நிலை கண்டோம்!
பொய்யும் புரட்டுகளும்
பொச்சாப்பு வார்த்தைகளும்
வஞ்சமும் நெஞ்சமும்
வாட்டுதம்மா நம்மவரை!
அம்மா கலைவாணி
அடியேற்கு ஒரு வரம் தா
இம் மாநிலம் சிறக்க
ஏற்று அருள் செய்திடுவாய்.

**செ. அகிலன்**
ஆண்டு 10 C

# நவராத்திரி விழாவும் தேவி வழிபாடும்

''நவராத்திரம்' என்னும் வடமொழி நவராத்திரி எனத் தமிழில் மருவி வழங்குகின்றது. நவராத்திரி என்ருல் ஒன்பது இரவுகள் திருவருட் சக்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியை விஷேடமாக வழிபட்டு நாம் ஈடேறுவதற்காகிய புண்ணிய காலம நவராத்திரி ஆகும். புரட்டாதி மாதத்துப் பூர்வபக்கப் பிரதமைத் திதி முதலாகவுள்ள ஒன்பது இரவுகள் நவர'த்திரி எனவும், பத்தாம் நாள் விஜயதசமி எனவும் வழங்கப்படும்

துன்பத்தைத் துடைத்து அச்சத்தைப் போக்கி இன்பத்தையும், துன்பத்தையும், வாழ்வையும் அருள் செய்த தேவியை வழிபடுங்காலமாக நவராத்திரி அமைந்தது, இந்த ஒன்பது நாளில் தேவியைச் சூக்கும மாகவும் ஆத்ம சைதன்யமாகவும் வழிபடுவர். பத்தாம் நாள் தேவியின் தூல ரூபத்தை வழிபடுவர். அத்தினமே விஜயதசமியாகும். பஞ்ச பாண்டவர்கள் தாங்க மறைந்து வாழ்ந்த காலத்தில் தங்கள் ஆயுதங்களை வன்னி மரப்பொந்தில் மறைதது வைத்தார்கள். பின்னர் விஜயன் எனப்படும் அருச்சுனன் இவ்வாயுதங்களை எடுத்துப் பகைவரை எதிர்த்து வெற்றிஈட்டிய தினமும இதுவாதவால் விஜயதசமி எனவும் இத்தினம் விளங்குகின்றது.


சகதி என்ருல் வினச, ஆண்மை, ஆற்றல் வீரம், வல்லமை, ஊக்கம் எனப் பொருள் படும். சக்தி என்ற சொல்லும் ஒரு சக்தி வாய்ந்தது தேவியையும் சக்தி என்கிருேம். ''சக்தி இன்றிச் சிவமியங்காது'' எனவும் கூறுவார்கள். இந்த உலகத்தை ஒரு சக்தி இயக்குகின்றது. எம்மையும் ஏதோ ஒரு சக்தி தூண்டுகிறது. பராசக்தியே பிரமனிடம் சிருட்டி சக்தியாகவும் விஷ்ணுவிடம் காதற் சக்தியாகவும், உருத்திரனிடம் சங்கார சக்தியாகவும் விளங்குகின்றது.

கல்வி, செல்வம், வீரம் ஆகிய எல்லா அம்சங்களுக்கும் தலைமை தாங்குவது பெண் சக்தியே ஆகும். அறம், பொருள், இன்பம், வீடு எனும் குறிக்கோளைச் சக்தியின் மூலமே அடையலாம். சாத்வீகம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்களும் அமைந்துள்ள ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தியெனும் மூவகைத் தோற்றங்களைக் கொண்டருளும் பராசக்தி. இலக்குமி, துர்க்கை, சரஸ்வதியென அமைந்து அருள் பாலிக்கிருள் பராசக்தியைத் துர்க்கா ரூபமாக உபாசித்தால் வீரம் சிறக்கும் இலக்குமியாக உபாசித்தால் செல்வப் பெருக்குண்டாகும். சரஸ்வதியாக உபாசித்தால் கலவிப் பெருக்குண்டாகும். பார்வதி ரூபமாக உபாசித்தால் ஞானப் பெருக்குண்டாகும. இச் சக்தியால் தான் உலகமே இயங்குகின்றது. தன்னைமயில்லாத தாயன்புக்கு இணை கிடையாது. அந்தத் தாயின் வடிவாய் அன்பின் பிழம்பாய், அண்ட சராசரங்களின் அன்னையாயுள்ள பராசக்தியின் பரங்கருணையும் அப்படியே.

நவராத்திரி விழா மிகவும் புராதன காலந்தொட்டுக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ் ஒன்பது நாட்களையும் கலை விழாவாகக் கொண்டாடுவது எங்கள் கலாச்சாரமாகும். கலை சிற்பக்கலை, சித்திரக்சலை இசைக்கலை, நாட்டியக்கலை எனப் பல வகைப்படும். இவற்றுக்கெல்லாம் தாயகமான கலை தெய்வக்கலையாகும்.

கலைவளங்காண்பதற்கு மூன்று விதமான தகுதிப்பாடுகளாகிய ஆற்றல், செல்வம், அறிவு ஆகிய வளங்கள் தேவை. இவை மூன்றும் ஒருங்கே மிகவும் சிறப்புற அமைந்ததே நவராத்திரி விழாவாகும்.

**செல்வன் கூ. நந்தபாலா**
ஆண்டு 11 A



# SCOUT TROOP

**SEATED FLOOR** : S. Asokumar, S. Niruthan S, Parthipan A. Jeyanthan. S. sathees.
Left to Right :-
**SEATED** :- MRS. L. Victoria (GCL) M. R. Suventhiran, K. Arultheran (P L) T. Muneeswaren (T. L)
MR. V. S. Shanmugarjah (GSL) MR. M. Ramalingam (Principal) T. Sutharman (A. T. L)
S. Baskaran (R.S) MR, K.V Thaneswaran ( prefect of Games )

Standing
First Row – Left to Right :- S. Balachandran, S. Vamadevan, Y. Tharmadas, R . Ranjalingam
V. Uthayakumar, K. Ragulan ( Secy ) T. Puvanenthiran (Treasurer )
S. Sivaroopan ( APL ) T. Raicithiran P. Aravinthan P. Jhalitvatnanm P. Kamalrajah

Standing
Second – RowLeft to Right :- T. Neruji, T. Rajenthiran K. Naualogachandran. T. Thevachandran
K. Kirubakaran N. Vijithan, S. Jathees, S. Vithiananthan,
S. Piratheepan, J. Vamadeva, R, Satheesan

# விஞ்ஞானமும் வாழ்க்கையும்

இயற்கையின் செயற்பாடுகளும் நிரந்தர நிர்ப்பந்தமுமே மனித வாழ்க்கை. அவ்வியற்கையின் சக்திகள் தம்முள்ளே மறைத்து வைத்திருந்த அரும் பெரும் பொக்கிஷங்களின் வெளிப்பாடே விஞ்ஞானமாகும்.

அறிவுப் பிரயோகமற்ற பாமர மக்கள் குழுக்களிடையே பரந்த அளவில் சிந்திக்கத் தொடங்கிய ஒரு சிலருடைய அறிவு விருத்தியின் பலா பலன்களே விஞ்ஞானத்தின் பல தோற்றங்களாகும். குறுகிய நோக்கங்களுடனும் குறிப்பிட்ட சில தேவைகளுடனும் வாழ்ந்து வந்த மனித குலத்திற்கு விஞ்ஞானமானது வியக்கத்தக்க சாதனைகளினூடாக தேவைகளை கணக்கில்லாது வழங்கியதோடு பரந்து வாழப் பழகும் படியும் உதவியது.

நீண்ட தூரத்திற்கு அப்பால் உள்ள ஓரிடத்தை சென்றடைய பல நாட்கள் பிரயாணம் செய்து சிரமப்பட்ட மனிதன் குறுகிய நேரத்திற்குள் அவ்விடத்தைச் சென்றடைய ஏதுவாக மோட்டார் வாகனங்கள், ஆகாய விமானங்கள் என்பனவும் குறிப்பிட்ட அவ்விடத்திற்குச் செல்லக் கால அவகாசம் அற்றவர்கள் குரல் வளத்தைக் கொண்டு தமது நோக்கங்களைப் பூர்த்தி பண்ண ஏதுவாகத் தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பனவும் விஞ்ஞானத்தின் அதி உயர்ந்த கண்டுபிடிப்புகளாக மனித வர்க்கத்தால் போற்றப்பட்ட அதே வேளை சுய நலவாத நோக்கங்களுடனும் குறுகிய அறிவுடனும் குறுக்கு வழியில் சுக போக வாழ்வு நடத்த விரும்பிய கொடூர இதயம் படைத்த ஒரு சிலரின் நீதி நியாமற்ற சட்டங்களுக்கும் கட்டுப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை விஞ்ஞானத்திற்கு ஏற்பட்டதனாலேயே உலகம் இன்று அச்சமடையக் காரணமான அணு ஆயுதங்களின் கணக்கற்ற பெருக்கம் மிகவும் துர்அதிஷ்ட வசமானதோர் நிலையை உருவாக்கியுள்ளது.

அறிவும் உடலும் எவ்வாறு பிரிக்க முடியாது ஒன்றாகக் கலக்கிறதோ அவ்வாறனதே விஞ்ஞானமும் அறிவும்.

நன்மை தீமை என்ற இரு முரண் பட்ட சக்திகளின் சுழற்சியினுள் சிக்கித் தவித்துச் சீரழிந்து போராடி வாழ வேண்டிய அவசியத்தின் பொருட்டு உலகில் வாழப்பிறக்கும் மனிதர்கள் நல்வழியைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதே வரலாறுகள் சான்று பகரும் உண்மையாகும்.

விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் சிறந்த முறையில் மனித குலத்திற்குப் பயன்பட வேண்டும் என்பதே அவ் விஞ்ஞானத்தைத் தனக்குள் மறைத்து வைத்திருந்து வழங்கிய இயற்கையின் நியதியாகும்.

ஆனால் ஏற்றத் தாழ்வுகள், வர்க்க பேதங்கள், தராதர வேறுபாடுகள், என்பன அறிவு வளர்ச்சியின் பயனாக் காலம் காலமாக மனித குலத்தை பின்பற்றி வைத்து வருவதே உலக நடைமுறையாதலால் விஞ்ஞானமும் நன்மை, தீமை என்ற இரு சக்தியினுள் சிக்கித் தவித்துச் சீரழிந்து பயங்கரச் செயற்பாடுகளுடன் உலக மக்களை அச்சமடைய வைப்பதில் வியப்பொன்றுமில்லை.

ஏனெனில் மனித வாழ்க்கைக்காகவே விஞ்ஞானம், மனித அறிவே விஞ்ஞானம் அறிவுத் தெளிவின்மையே உலகக் குழப்பங்கள்.

துர்மபாலன் சுமதி
ஆண்டு 11 C

# அரசின் தோற்றம்

அரசு தோன்றியதை விளக்கப் பல கோட்பாடுகள் இருக்கின்றன. அவற்றுள் சமூக ஒப்பந்தக் கொள்கை மிகவும் செல்வாக்கு உடைய கொள்கையை உடையதாக விளங்குகின்றது. ஏனெனில் அது தரும் விளக்கம் இக்காலத்தவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. சமுதாய ஒப்பந்தக் கொள்கை பற்றி கொக்ஸ், லொக், ரூசோ ஆகியோர் விளக்கம் கொடுத்துள்ளார்கள். சமுதாய ஒப்பந்தத்தின் பேரில்தான் அரசு தோன்றியது. என்பதை மூவரும் ஏற்றனர். ஆனல் சமுதாய ஒப்பந்தம் என்ன முறையிலே செய்யப்பட்டது. என்பதைப் பொறுத்த மட்டில் கருத்து வேறுபாடு உடையவராகக் காணப்படுகின்றார்கள். சமுதாய ஒப்பந்தம் ஏன் செய்யப்பட்டது? பாதுகாப்புக் கருதி முறையாக நீதியைப் பெற்றுக் கொள்வதற்காகவே இவ்வொப்பந்தம் செய்யப்பட்டது. என்பதை மூவரும் ஏற்றுள்ளார்கள்.

ஆனாலும் மூவரும் சிற்சில கருத்து வேறுபாடுகள் உடையவராகக் காணப்படுகின்றார்கள்.

கொக்ஸ் என்பவர் சமுதாய ஒப்பந்தம் நடைபெறுவதற்கு முன்னர் மக்கள் அநாகரிகமான முறையிலே ஒருவரை ஒருவர் தாக்கிப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தார்கள் என்றும் பாதுகாப்புப் பெறுவதற்காக இவ் ஒப்பந்தத்தைச் செய்தார்கள் என்றும், அதன் காரணமாகவே ஒரு ஆட்சி முறை ஏற்பட்டது. என்றும், அதன் வழி அரசு தோன்றியது என்றும் கூறுகிறார்கள். ஒப்பந்தத்தின் பின்னர் திடமான சட்டங்களை நிருவகிக்கக் கூடிய ஆட்சி முறை ஏற்பட்டது. சமுதாய ஒப்பந்தம் அதாவது மக்களுக்கு இடையே அவர்கள் எல்லாரும் ஒருமித்து தங்களிடத்தே இயற்கையாக இருந்த அதிகாரங்கள் அத்தனையையும் தனி ஒருவனிடத்திலோ அல்லது ஒரு குழுவினிடத்திலோ ஒப்படைத்தார்கள். அதற்குப் பதிலாகத் தமக்குப் பாதுகாப்பைக் கோரிப் பெற்றுக் கொண்டனர். இவ்விதமான முறையிலே தான் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது என்பது கொக்ஸ் என்பவரின் கருத்து. இதன்படி பார்த்தால் சகல அதிகாரங்களும் ஆட்சியாளருக்கு உண்டு. நிருபண நிர்வாக நீதி வழங்கும் அதிகாரங்கள் யாவும் ஒருவனிடத்திலோ அல்லது ஆட்சிக்குப் பொறுப்பான குழுவினிடத்திலோ ஒருமுகப்படுத்தப்பட்டு ஆட்சி நடப்பதை கொக்ஸினுடைய கொள்கை ஆதரிக்கின்றது.

அதாவது கொக்ஸ் ஆட்சியாளருக்குச் சர்வாதிகாரமும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாட்டிலே அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்த முடியும் என்று கருதினர். இப்படியாக அவர் சிந்திப்பதற்குக் காரணமாக இருந்தது அவர் வாழ்ந்த காலத்திலே முடியாட்சி நிலவியமையே அந்த ஆட்சியினாலே நாட்டில் அமைதியைப் பேணிக் கொள்ளவோ நல்ல முறையில் ஆட்சியை நடாத்தவோ முடியவில்லை. மன்னனின் நிலை வலிமை குறைந்து காணப்பட்டது.

கொக்ஸ் இந்தச் சூழ்நிலையிலே சிந்தித்தான் மனிதன் சகல அதிகாரங்களையும் உடையவனாக இருந்து அந்த அதிகாரங்களைப் பிரயோகப் படுத்தினால்தான் ஆட்சி சலனம் இல்லாமல் நன்கு அமையும் என எண்ணினன். எனவே அரசு தோன்றும் போது அதிகாரம் தோன்றியது என்ற கருத்தை விளக்கக்கூடிய வகையில் தனது கொள்கையை விளக்கினன். எனவே கொக்ஸ் என்பவரின் சமுதாய ஒப்பந்தம் பற்றிய விளக்கம் வரம்பற்ற முடியாட்சியையும், சர்வதிகார ஆட்சியையும் ஒருங்கே ஏற்படுத்துகிறது எனச் சொல்லலாம்.

லொக் என்பவர்: சமுதாய ஒப்பந்தக் கொள்கை பற்றித் தரும் விளக்கமானது வித்தியாசமாக அமைந்துள்ளது. ஒப்பந்தம்

செய்து கொள்வதற்கு முன்னர் மக்கள் கொக்ஸ் சொன்னது போல மாக்களாக இருக்கவில்லை மக்களாகவே நடந்து கொண்டனர். புறத்திலே இருந்து வரும் சட்டங்கள் நிருவகிக்கப்படாத நிலையில் இருந்தாலும் மக்களின் மனச்சாட்சியானது அவர்களுக்குச் சட்டமாக அமைந்தமையால் சட்டத்தின் வழியிலே ஒழுகி வந்தனர்.

உடைமைகள் சொத்துக்கள் பெருகிக் கொண்டுவரத் தகுந்த பாதுகாப்பு தேவைப்பட்டது. எனவே தங்களிடம் இருக்கும் அதிகாரங்கள் சிலவற்றைக் கையளித்து அதற்குப் பதிலாகப் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள விரும்பினர். எனவே மக்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் ஒப்பந்தமானது மக்களுக்கும் அவர்களாலே ஏற்படுத்தப்பட்ட ஆட்சியாளருக்கும் இடையே ஏற்பட்டது என்று கூறலாம். மக்கள் ஒன்று கூடித் தம்மிடத்திலுள்ள அதிகாரங்களில் சிலவற்றைத் தனிநபரிடமோ, குழுவினரிடமோ ஒப்படைத்தார்கள். முழு அதிகாரத்தையும் ஒப்படைக்கவில்லை. சில அதிகாரங்கள் மக்களிடம் எஞ்சி நின்றன. ஒப்பந்ததின் பேரில் தோன்றிய ஆட்சியாளர் வழங்கப்பட்ட அதிகாரங்களை ஏற்றுக் கொண்டு பாதுகாப்பு அளிக்க எண்ணினர். ஆட்சிக்குப் பொறுப்பானவர் தனிமனிதனாக இருக்கலாம், குழுவினராக இருக்கலாம். அவர்களிடத்திலே வழங்கப்பட்ட அதிகாரங்கள் மட்டப்படுத்தக் கூடியதாக இருந்தன. மக்கள் தம்மிடமுள்ள எஞ்சிய அதிகாரங்களைக் கொண்டு மன்னனோ அல்லது ஒரு குழுவோ அளவு கடந்து தமது அதிகாரங்களைப் பெருக்குவதற்கு முயற்சி செய்தால் அல்லது மக்களுடைய விருப்பத்திற்கு மாறாகச் சென்று கொண்டிருந்தால், அவர்களைத் தடுத்து நிறுத்தி நெறிப்படுத்தவும் புதிய ஆட்சியை நிறுத்தவும் மக்களுக்கு அதிகாரம் உண்டு. ஆட்சியை நடாத்துவதில் மன்னனுக்கும் மக்களுக்கும் பங்கு உண்டு. அரசியலில் நித்திரை செய்யும் பங்காளிகள் போன்று மக்கள் நடந்து கொள்வார்கள். மன்னன் தவறு செய்தான் என்று தோன்றினால் இப்பங்காளிகள் விழிப்பு அடைந்து மன்னனை எச்சரிப்பார்கள். ஏனெனில் இவர்களுக்கும் அதாவது மக்களுக்கும் சட்ட நிருபண, நிர்வாக, நீதி வழங்கும் அதிகாரம் போன்றவை மன்னனைப் போன்று சம அளவில் உண்டு என்று லொக் விளக்கம் கொடுத்துள்ளார். கொக்ஸ் போலல்லாது லொக் வாழ்ந்த காலம் மன்னர்களின் சர்வாதிகாரத்தை நிலை நாட்டிய காலம். மன்னர்கள் தாங்கள் இறைவனின் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொண்டு சகல அதிகாரங்களையும் உடையவராக நடந்து கொண்டனர். மக்களுடைய உரிமைகள் அதிகாரங்கள் பேணப்படல் வேண்டும், மன்னனுடைய சர்வதிகாரப் பிடியிலிருந்து மக்கள் விலகியிருத்தல் வேண்டும், என லொக் என்பவர் சிந்தித்தார். எனவே அரசு தோன்றியமையை விளக்குவதர்கு உரிய கோட்பாட்டுக்கு விளக்கம் கொடுக்கும் போது சமூக ஒப்பந்தத்தின் பேரில் அரசு தோன்றியது எனக் கூறி, அந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட முறையில் இருந்து மக்களும் அரசனும் ஆட்சியிலே பங்காளர் போன்றவர்கள், எனவே மக்களை மதித்தே அரசன் நடந்து கொள்ள வேண்டும், மன்னரின் அதிகாரங்கள் வரம்புக்குட்பட்டவையாக இருக்க முடியும், எனவே நிருபண நிர்வாக, நீதி வழங்கும் அதிகாரம் மன்னனிடம் குவிந்து இருக்காமல் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது, என்ற கருத்தை மக்கள் மத்தியிலே பரவச் செய்யும் முகமாக சமுதாய ஒப்பந்தக் கொள்கைக்கு லொக் விளக்கம் கொடுத்துள்ளார்.

றுசோ என்பவர் இக் கொள்கை பற்றித் தனது கருத்தைக் கூறுகின்றார். இவர் தனது சமுதாய ஒப்பந்தக் கொள்கை என்ற நூலில் அதற்கு விளக்கம் கொடுத்துள்ளார். இவ் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன் மக்கள் நாகரிகம் உடையவராக இருந்தார்கள். அரசர்களுக்குச் சில தேவைகள் முக்கியமாகப் பாதுகாப்புத் தேவை வலிமையுடையதாக இருந்தது அதைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஒவ்வொருவனும் தன்னிடமுள்ள அதிகாரங்கள்

அத்தனையும் அங்கு கூடியிருக்கும் அத்தனை பேரும் என்று கூறப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன் பேரில் ஒரு ஆட்சி முறை தோன்றியது.

அதுதான் ஜனநாயக ஆட்சி முறை ஆட்சிக்குப் பொறுப்பாகத் தனி ஒருவனோ ஒரு குழுவோ ஏற்படுத்தப்படவில்லை எல்லோரிடமும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டன. எனவே எல்லோரும் ஆட்சிக்குப் பொறுப்பானவர்கள்தான். இதுதான் ஜனநாயகம் இங்கு ஒருவருக்கோ அல்லது ஒரு மன்னனுக்கோ இடமில்லை என்று றூசோ விளக்குகின்றார். மக்கள் பிறக்கும் போதே சுதந்திரமானவர்களாய்த் தம்மைத் தாம் ஆளும் அதிகாரம் உடையவர்களாகத் தான் பிறக்கின்றார்கள். பின்னர் அடிமையாகச் சுதந்திரமற்ற நிலையிலேதான் ஒருவனாலோ, குழுவினாலோ ஆளப்படும் நிலைக்குத் தள்ளப் படுகின்றார்கள். இந்நிலைக்கு மாறு மக்களைச் சிந்திக்க வைக்க வேண்டும் என றுசோ விரும்பினார்.

செல்வி த. ஜெகதா
ஆண்டு 11 C

---

சிறு கதை

# உணர்வுகள்

மாலை மயங்கிக் கொண்டிருந்தது எங்கும் இருள் சூழத் தொடங்கியது தெரு வீதிகளில் உள்ள மின் விளக்குகள் எல்லாம் தமது பரந்த ஒளியை வீதியெங்கும் பரப்பிக் கொண்டிருந்தன. இந்த வேளையிலே கனகம்மா வீடு ஒன்றுதான் இருண்ட நிலையில் காட்சியளித்துக் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அந்த வீட்டை நோக்கி ஒருவர் வந்து கொண்டிருந்தார் அவர்தான் கனகம்மாவின் அண்ணன் பரமசிவம்.

''கனகம் ......! தங்கச்சி கனகம் ...!! எங்கை இவளைக் காணயில்லைப் போலை கிடக்குது ... எங்கை போட்டாளோ தெரியாது எதற்கும் உள்ளே போய்ப் பார்ப்போம்...

என்றபடி உள்ளே நுழைந்தார் பரமசிவம்.

''ஆரது...! அண்ணையே... வா... வா .. என்ன இருந்தாப் போல இந்தப் பக்கம் காத்தடிச்சது ..''

என்றாள் சிந்தனையில் ஆழ்ந்திருந்த கனகம்.

''ஒன்றுமில்லைத் தங்கைச்சி இவன் உன்ரை பெடியன் ராசன் விசயமாக உன்னோடை கொஞ்சம் கதைக்க வேண்டிக் கிடக்குது... அதுதான் வந்தனான் எதற்கும் வீடு இருட்டாக் கிடக்குது... விளக்கைக் கொளுத்திப் போட்டு வாவன்...!''

என்றபடி திண்ணையில் உட்கார்ந்தார் பரமசிவத்தார்.

''என்னண்ணை! .. அப்பிடி ராசனைப் பற்றிக் கதைக்க வேணும்...!! ஏதும் பிரச்சனையோ...?''

''இல்லைத் தங்கைச்சி ஒரு பிரச்சனையும் இல்லை எல்லாம் அவன்ரை நடைமுறையளையும் உழைப்பையும் பற்றித்தான் கதைக்க வேணும்.''

''அதுதான்... நான் ஏதோ என்னவோ என்று பயந்து போனன்...''

''இல்லைத் தங்கைச்சி மச்சானுலே இனி ஏலாது அந்தாளும் எத்தனை காலமெண்டு உங்களுக்கு உழைச்சுப் போடுறது. அவரும் கொஞ்ச ஆறுதல் எடுக்கட்டுமேன்...''

அதுக்கு இப்ப நான் என்ன செய்யிறது''

''நீ ஒன்றும் செய்ய வேணும். இவ ராசன் இருக்கிறானல்ல... அவனை இப்ப ரோட்டு உலாத்தாமல் எங்கையும் வேலைக்குப் போகச் சொல்லு அவன் போனால் கொஞ்சம் கஸ்ரம் தீரும் அதோடை பிள்ளை ... சுபாவின்ரை படிப்புக்கும் உதவும்...''

''ஓமண்ணை...! அதைத்தான் நானும் இவனுக்குச் சொல்லக் கேட்கிறானில்லை. உனக்காக இல்லாவிட்டாலும் உன்ரை தங்கச்சி சுபாவின்ரை எதிர்காலத்துக்காக வாவது பாடுபடன் எண்டு... எத்தனை முறை இவனுக்குச் சொல்லுறது அவனும் கேட்கிறானில்லை...''

''சரி... நீ பேசாமலிரு! அவன் இண்டைக்கு வரட்டும் நான் கதைக்கிறன்! ...

''சரியண்ணை மருமோனும் மாமனும் ஒரு நல்ல முடிவுக்கு வாங்கோ! நான் ... போய் தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறன்...!

படலை அடித்துச் சத்தம் கேட்கிறது தெருப்பக்கமாகத் திரும்பி பார்த்தார் பரம சிவத்தார்.

''அம்மா... அம்மா...! எங்கை அம்மா வின்ரை குரலையே காணவில்லை அம்மா''

''வா ராசன் வா... இவ்வளவு நேர மாச்சு! எங்கை போட்டு வாறாய்... மாலை யானது தெரியல்லையே!!

''இல்லை மாமா..., நான் சிவமண்ணை விட்டில இருந்து படம் பார்த்துக் கொண் டிருந்தனான் அதால நேரம் போனதே தெரியல்லை......''

''என்ன! ...நேரம் போனது தெரியல் லையே! ஒ... உனக்கெங்க நேரம் போறது தெரியப்போகுது!... உன்ரை அம்மா படுகிற கஸ்ரம் உனக்கு விளங்குமே! உன்ரை தங்கைச்சியைப்பார். அவள் இருந்து படிக் கிறதுக்குக் கூட ஒரு மேசை இல்லை. அவளும் பாவம்! எப்படியாவது தாய் தகப்பன் படு கிற கஸ்டத்தைக் கண்டு, அவையின்ரை கனவுகளையெல்லாம் நனவாக்க வேணு மெண்ட நோக்கத்தோட, தன்ர ஆசா பாசங்களையெல்லாம் மறந்து படிப்பிலையே தன்னைச் செலுத்திக் கொண்டிருக்கிறாள்!...

''சரி மாமா...... அதுக்கு நான் இப்ப என்ன செய்ய வேணும்...?''

...நீ... ஒண்டுஞ் செய்ய வேணும் ஒருவேலை யைத் தேடி உழைச்சு கொயமாவன்ரை கஸ்டத்தைக் குறைச்சு அவளும் மற்றப் பெண்களைப் போல உண்டு உடுத்து இருக்க செய்யப்பம்.

சரி... மாமா... எதுக்கும் நான் யோசிக் கிறன்...'' என்றபடி மாமனையும் விலத் திக் கொண்டு உள்ளே நுழைந்தான்!

தேத்தண்ணியைக் கையில் ஏந்திய படி வந்த தங்கைச்சி கனகத்தைப் பார்த்த பரம சிவத்தார்...

''பாத்திய தங்கைச்சி இவன் ராசனை... என்ரை சொல்லைக் கூட கேக்கிறதா தெரி யல்லை, எதுக்கும் யோசிக்கிறன் எண்டு கொண்டு என்னையும் விலத்திக் கொண்டு போறான்...''

என்றபடி தேநீரை அருந்தி விட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே போனார் பரமசிவத்தார்...!
அவர் போனதும் தாயின் மேல் சீறினான் ராசன்...!

''அம்மா...! என்னால வேலைக்குப் போக ஏலாது என்னோடை திரியுற மற்றப் பெடி யளைப்பார்! அவங்களும் வேலைக்குப் போய் உழைக்கிறாங்களே!...''

''இல்லையடா ராசன் அவர்கள் ஏன் உழைக்க வேணும்! ஏன் கஸ்ரப்படவேணும்!

அவங்கட அண்ணன்மார் உழைக்கிறுங்கள் அனாதத் திண்டுட்டு தெரு உலாத்துகிறுங்கள் ஆனல் உனக்கும் அப்படியே! கொய்யா இந்தப்பாடுபட்டு இரவு பகலா உழைக்கிறுர் எங்கட சீவியத்துக்தும், சுபாவின்ர படிப்புக்கும் அது காணுமே!...''

கனகமும் சிறி விழுந்து அழுதாள் ''சரியம்மா... கணக்கக் கதைக்க எனக்குத் தலை வெடிக்கிற மாதிரி கிடக்குது!... சாப்பாட்டைத்தா... பசிக்குது...!!''

''சாப்பாடோ...! மத்தியானச் சாப்பாடு கூட இண்டைக்கு இல்லாமல் நானும் சுபாவும் பட்டினி கிடக்கிறம் இப்ப மாமா வந்துதான் காசு தந்தவர் சுபா கடைக்குப் போட்டாள் வரட்டும் சமைச்ச பிறகு எழுப்பித்தாறன். நீ... போய்ப்படு!...''

என்று விம்மியழுதபடி கூறினுள். கனகம்! பொழுது விடிந்ததும் கனகம் தன் மகன் ராசனை எழுப்பினுள்.

''தம்பி ராசன் எழும்படா... நேரம் ஏழு மணியாச்சுது கொப்பாவுக்குச் சாப்பாட்டைக் குடுத்திட்டு வா...''

ஏனம்மா... தங்கைச்சி எங்கை போட்டாள் ..?''

''அவள் இப்பத்தான் படிக்கப் போட்டாள் ''

''சரியம்மா... நான் போட்டு வாறன் ... போட்டு வந்து நான் பொடியளோடை படத்துக்குப் போகணும் காசு... தா...''

''காசோ... எங்கையிருந்து வருகுது காசு ...? — காசுமில்லை ஒண்டுமில்லை... சாப்பாட்டைக் குடுத்திட்டு வந்து பின் பக்க வேலியை அடை நான் கடைக்குப் போறன்...''

''அம்மா... நீ காசு தராட்டிலும் நான் ஆரிட்டையும் மாறியாவது இண்டைக்குப் படத்திற்குப் போவன் ''

என்று படலையைத்திறந்தபடி வெளியிலே போகிறுன். தெருவில் இறங்கிய ராசன் கண்ட காட்சி அவனைத்திகிலடையச் செய்தது. உடல் பதறியது தன் தந்தையைப் பரமசிவம் மாமா தோளில் சுமந்த வண்ணம் வருவதைக் கண்டான்,

''...என்னமாமா ... அப்பாவைத் தூக்கிக் கொண்டு வாறியள்...! என்ன நடந்தது...?...''

''என்ன நடந்ததெண்டு சொல்லுறன்.. நீ...முதல் உள்ளுக்கு வா...''

''ஏன் மாமா ... என்னெண்டு சொல்லுங்கோவன்''

''பின்னை என்னடா...இந்த வயதிலையும் தன்ர பருவத்தையும் பாராமல் உழைச்சுது!... இண்டைக்கு நல்ல காலம் உயிர் தப்பியது ஏதோ தெய்வச் செயல்...''

''என்ன மாமா...நடந்ததைச் சொல்லுங்கோவன்

''கொம்மா எங்கையடா...?''

'அம்மா .இப்பத்தான் என்னட்டச்சாப்பாட்டைத் தந்திட்டுக் கடைக்குப் போனது. இப்ப வந்திடுவா...''

''சரி...வரட்டும் ஒரு பாய் போடு! அப்பாவைக் கிடத்துவம்...''

பாயைக் கொண்டு வந்து திண்ணையில் போட்டான் ராசன்...ராசனும் பரமசிவத்தாரும் சேர்ந்து மெதுவாகப் பாயிலே அவரைக் கிடத்தினுர்கள் அப்போது கனகம் வீட்டை நோக்கி வந்து படலையைத் திறந்தவள் கணவன் நெற்றியிலும் காலிலும் கையிலும் கட்டுக்கள் போட்ட வண்ணம் கிடப்பதைப் பார்த்துத் திகைத்தாள்...

''ஐயோ...அண்ணை...அவருக்கு என்ன நடந்தது...'' என்று அலறியபடி ஓடி வந்தாள்.

''...... தங்கச்சி...... மச்சான் தோட்டத்தில் வேலை செய்திட்டுச் சம்பளத்தை

வாங்கிக் கொண்டு வெளியிலே வரேக்கை அங்கு நிண்ட இரண்டு பேர்... மச்சானை அடிச்சுப்போட்டுத் காசையும் பறிச்சுக் கொண்டு ஓடிட்டாங்களாம்.

"ஐயோ... நான் என்ன செய்வேன் இவ்வளவு காலமும் இந்தக் குடும்பத்தை வழி நடத்திய இந்தக் கைகள் இண்டைக்கு ஏன் இப்படி ஓய்ந்தது... இனி நான் யாரிடம் கைநீட்டுவேன்..."

"...அம்மா... நீ இனி... எதற்கும் கவலைப் படாதை... இவ்வளவு நாளும் வீட்டு யோசனையோ... தங்கச்சியின்ரை நல்வாழ்வையோ நினைக்காமல் பிழைவிட்டிட்டன் இப்பதான் எனக்கு உழைப்பெண்டாலோ... குடும்பக் கஸ்டமெண்டாலோ என்னெண்டு விளங்குது மாமாவும் நீயும் எத்தனை நாள் எனக்கு எவ்வளவோ சொல்லியும் நான் கேக்கேல்ல... இன்றிலிருந்து நான் உழைக்கப்போறன் என்ர குடும்பத்தை நான் காப்பாற்றுவன் எல்லாரையும் போல நாங்களும் சந்தோஷமாக இருக்கப் பாடுபடப் போறன்... நீங்கள் கவலைப்படாதையுங்கோ..."

என்று கண்ணீர் சிந்தியபடி கூறினான் ராசன். மகனின் இந்த வார்த்தை கேட்ட கனகத்தின் உள்ளம் ஆனந்தக் கண்ணீர் வடித்தது;

முற்றும்

**ஐ குமரதாசன்**
ஆண்டு 12 C

---

# பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் இலக்கியப் பணிகள்

ஈழத்து இலக்கிய வரலாறு ஒரு விருட்சம். அதில் பண்டிதமணி அவர்கள் ஒரு பாரிய கிளை எனலாம். பண்டிதர்களுக்குள்ளே மணியாகத் திகழ்ந்து பண்டிதமணி எனப் புகழ் பெற்ருர். அவரின் கல்வித் தொண்டும் புலமையும் வானளாவி நிற்கின்றன. அவரின் புலமை அவரைக் கலாநிதி ஆக்கியது. பல்கலைக்கழகத்தால் இப்படிக் கௌரவப்பட்டம் பெற்ற முதலாவது தமிழ் மூதறிஞர் இவரே.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதி எல்லையில் பிறந்து இருபதாம் நூற்றுண்டின் கடைசிக்காலம் வரை வாழ்ந்தவர். தமிழுக்கும், சைவத்திற்கும் அவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. இதனுல் ஈழத்து இலக்கிய வரலாறு இன்னும் பல பக்கங்களோடு இணைகிறது. ஐந்தாம் வகுப்பு வரை தான் பிறந்த ஊரான மட்டுவிலிலே கிறிஸ்தவ பாடசாலை ஒன்றிலே கல்வி கற்ருர். ஐந்தாம் வகுப்புடன் படிப்பு நின்றுவிட்டதும் அறிஞர் தொடர்பு அவரை ஊக்கப்படுத்தியது. இதனுல் ஆயிரத்தித்தொளாயிரத்திப்பதினேழாம் ஆண்டில் நாவலர் பாடசாலையில் சேர்க்கப்பட்டார் எனவே நாவலர் பரபிலே நாவலர் பாரம்பரியத்தை ஈழத்தில் நிலை பெறச்செய்தவர்களுள் பண்டிதமணியும் ஒருவர் ஆவார்.

இளமைக் காலத்திலேயே இவரின் கல்வித் திறன் கற்றோரை ஈர்த்தது இதனுல் பண்டிதமணி பரீட்சையில் சித்தியெய்திய இவரை ஸ்ரீமத் நவநீதகிருஷ்ண பாரதியாரின் தலைமையில் வித்துவான் சபை ஒன்று நாவலர் பாடசாலையில் வியந்து பாராட்டியது. தங்கப்பதக்கமும் பரிசாகக் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாசாலையில் விழா எடுத்துப் பொற்சங்கிலி ஒன்றையும் வழங்கியது. இவரின் ஆற்றல் இவரை ஆசிரியராக்கியது. ஆயிரத்தித்தொளாயிரத்தி இருபத்தி ஐந்தில் காவிய வகுப்புக்களை நடாத்தி

வெற்றி கண்டார். அதன்பின் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தி ஏழில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்ருர். இந்தப் பயிற்சி ஆயிரத்தித் தொளாயிரத்தி இருபத்தி ஒன்பதில் திருநெல்வேலி சைவ ஆசிரிய பயிற்சி கலாசாலையில் இவரைத் தமிழ்ப் பேராசிரியராக்கியது

பண்டிதமணி அவர்கள் எழுதுவதிலும் பேசுவதிலும் வல்லமை பெற்றிருந்தார், நாவலர், கதிரவேற்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, செந்திநாதஐயர் ஆகியோரைப் பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் பலரின் கவனத்தை ஈர்த்தன இவரின் இலக்கியச் சொற்பொழிவுகள் தனிரசனை பெற்றிருந்தன "சீதையின் கற்பு ஆறிய கற்பு, கண்ணகியின் கற்பு சீறிய கற்பு" போன்ற புதுமைக் கருத்துக்கள் அவரின் இலக்கியப் புலமையைப் பறை சாற்றின. இப்படி இலக்கிய உலகில் சஞ்சரித்த வேளையில் சமய உலகிலும் நாட்டம் கொண்டார். சைவ சித்தாந்த சாத்திரங்களிலும், புராணங்களிலும் ஆய்வு செய்தார். இவரின் கந்த புராண தட்ச காண்ட உரை பலரின் பாராட்டைப் பெற்றது. அப்போது பேராதனைப் பல்கலைக்கழகத்து இந்து மாணவர் சங்கம் இவரைக் கௌரவித்துப் பொன்னாடையும் போர்த்திப் பொற்கிழியும் வழங்கியது. சைவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முப்பது ஆண்டுகள் பேராசிரியர் பணிபுரிந்து, சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தை வளர்ந்து வந்த பேராசான் இவர். யாழ் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம், கலா நிலையம். தமிழ்ச் சங்கம், அகில இலங்கை சைவமகா சபை போன்ற நிறுவனங்களில் நடைபெற்ற பெரு விழாக்களில் தமிழ் இலக்கிய இரசனையுடன் புதிய முறையில் பல சொற்பொழிவுகளை நடாத்திப் பெருமை பெற்றிருக்கிருர், ஆரம்பத்தில் பாரதி பாடல்களிலும் பின்னர் கம்பராமாயணத்திலும் இரசனைகள் செய்து கொண்டு ஆயிரத்தொளாயிரத்தி நாற்பத்திரண்டின்பின் தனது கந்த புராண இரசனையை வெளிப்படுத்தினர், இதன் பயனாகவே கந்தபுராண தட்சணகாண்ட உரை உருவாயிற்று. ஆதலால உரையாசிரியர் வரிசையிலும் உயர்ந்து விளங்கினர். அவ்வப் போதைய இலக்கியச் சொற்பொழிவுகள் இலக்கிய ஏடுகளாகவே மலர்ந்தன. பலஇரசனைக் கட்டுரைகளும் நூல்வடிவம் பெற்றன. இவர் எழுதி வெளியிட்ட நூல்களில் கோயில் கதிர்காம வேலன் பவனி வருகிருன், தட்சணகாண்ட உரை, பாரத நவமணிகள், சைவ நற்சிந்தனைகள், கந்த புராண கலாச்சாரம், கந்தபுராண போதனை, இருவர் யாத்திரீகம், சமயக் கட்டுரைகள், சிந்தனைக் களஞ்சியம், ஆறுமுகநவாலர், இலக்கிய வழி, கம்பராமாயணக் காட்சிகள் அன்பின் ஐந்திணை என்பன முக்கியமானவை.

பண்டிதமணி நாவலரைப் பல வழிகளில் பின்பற்றி நடந்தார். அவரைப்போல் கண்டனப் பிரசங்கமும் செய்தார். இவரின் தமிழ் அறிவு வெகுசனத்தொடர்பு சாதனங்கள் வழியாகப் பல காலம் வெளியிடப் பட்டது. பாரதம், இராமாயணம், கந்த புராணம் என்பவற்றில் நானூறு கட்டுரைகள் தினகரனில் பிரசுரமாகி உள்ளன. இவரின் சைவசித்தாந்தக் கட்டுரைகளும் வானொலிப் பேச்சுக்களும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. தமிழ் நாட்டு அறிஞர்களின் மதிப்பையும் பெற்றிருந்தார். அக்காலத்திலே சைவ பரிபாலன சபை நடத்திய மகாநாட்டிலே 'சீதையும் துறவும்' என்ற பொருளில் அவர் ஆற்றிய உரைவிமர்சனத்தில் அடங்காத சிறப்புக்குரியது. சேனாவரையம், நச்சினர்க்கினியம், சிவஞானபோதம் முதலிய நூல்களில் நிறைந்த பயிற்சி உடையவர். இவரின் எழுத்து நடை தனித்தன்மை கொண்டது. பண்டைய தமிழ்ப் புலவர்களை ஈழநாட்டுப் புலவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் விருப்பம் உடையவர். இவரின் பெருமை இருவகைப்பட்டது. 1) இலக்கிய நயம் 2) சமயதாகம் இலக்கிய நயம் முன்னைய இலக்கிய பாரம்பரியத்தை போற்றுவது மட்டும் அன்றித் தன் வளர்ச்சிக்காகப் பயன்படுவதிலும் தங்கியிருந்தது. இவரின் உரைநடை இலக்கியப் பாண்டித்தியச் சிந்தனைப் பாய்ச்சலுக்கான வேகவாகனம் எனலாம். இலக்கிய நடைமுறைகளையும் மெய்யியல பின்

புலத்தில் தத்துவக்கூறுகளாகக் கண்டவர். இவரின் சிந்தனையில் எழுத்தில், அகம்புறம், கருஉரி, திணை, ஒழுக்கம்; ஆகியவை இலக்கியப் பண்புக்கு அப்பால் கருத்தியல் கோட்பாடுகளாக மிளிர்ந்தன எனலாம். இலக்கியத்தை ஏணியாகக் கொண்டு தத்துவ மேல் காற்றில் திளைத்துக் கிடந்தார். புதியதோர் சிந்தனை ஓட்டத்தையும் அதற்கான ஓர் உரைநடையையும் உண்டாக்கின்றார். இவர் ஒரு நெடுங்காவியம், நடமாடும் பல்கலைக்கழகம். நாவலர் தோட்டத்தினிலே இறுதியாக உதிர்ந்த இலக்கியக்கனி இவரே ஆவர்.

**செல்வி. நி. மேரி அனுசாசியாமளா**
ஆண்டு 12 C கலைப்பிரிவு

# வளிமண்டல நீராவியும் வானிலையும்

**வ**ளிமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு வானிலையைப் பாதிக்கின்றது. மழை காலத்தில் வானம் கரும் முகில்களால் சூழப்பட்டிருக்கின்றது. முகில் என்றால் நீராவி அல்ல, திரவநீர் நுண்ணிய சிறுதுளிகளாக வளியில் மிதக்கும் நிலையே முகில் ஆகும். வளி வெப்பமாக இருக்கும் போது அது குளிராக இருக்கும்போது கொண்டிருப்பதிலும் பார்க்கக் கூடுதலான நீராவியைக் கொண்டிருக்கும். ஆகவே நீராவியால் நிரம்பிய வெப்பமான வளி குளிரடையும் போது அதிலுள்ள நீராவியின் ஒரு பகுதி நீராக மாறும். இந்நீர் வளியிலுள்ள தூசித் துணிக்கைகளில் சேர்ந்து சிறுதுளிகள் உண்டாவதால் கண்ணுக்குப் புலப்படக்கூடிய முகில் உண்டாகின்றது.

வளி கடலின் மேலாகவும் ஈரலிப்பான தரையின் மேலாகவும் அசையும் போது அது நீராவியைப் பெற்று பின் மேலெழும்பும்போது குளிரடையும். அவ்வளியினுல் பெருமளவு நீராவியைக் கொண்டிருக்க முடியாது. எனவே நீர்ச்சிறுதுளிகள் உண்டாகின்றன. இந்தச் சிறுதுளிகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பூமியை நோக்கி விழக்கூடிய அளவு பாரம் உள்ளவையாக வரும்போது மழை பெய்கின்றது.

நீராவியால் நிரப்பிய வளி நிலமட்டத்தில் குளிரடைந்தால் நுண்ணிய நீர்ச்சிறுதுளிகள் தோன்றும்– இதுவே **Fog** எனப்படும். **Fog** என்பது தாழ்மட்டத்திலுள்ள முகிலாகும். **Fog** உலக சரித்திரத்தில் முக்கிய திருப்பங்களைக் கொண்டு வந்துள்ளது. ஹிட்லர் **FOG** கப்பளியைப் பயன்படுத்தி ஜேர்மன் படையை எதிரிகளில் இருந்து பாதுகாத்தார். நெப்போலியன் எகிப்தில் இருந்து தப்பி ஓடுவதற்கு மத்தியதரை **Fog** உதவியது.

வளி அசையாமல் இருந்தால் அது குளிரும் போது உண்டாகும் நீர்த்துளிகள் தரையுடன் தொடுமிடத்தில் படிந்து **dew** ஆகும். வளி மிகவும் குளிரடையும போது அதிலுள்ள நீராவி ஒடுங்கிப் பின் உறைந்து ஐஸ்கட்டிகள் தோன்றலாம். இவை புவியீர்ப்பினுல் கவரப்பட்டு விழும் போது வெப்பநிலை உயர்ந்தால் மழையாக மாறிவிடும். அவ்வாறு வெப்பமடையாமல் இருந்தால் அவை பனிக்கட்டியாகத் தரையில் படியும். வரும் வழியில் உருகி மீண்டும் குளிரான வளியினூடாக இறங்கும்போது உறைந்து ஆலங்கட்டியாக நிலத்தையடையும்.

ஆதி மனிதன் இடிமுழக்கச்சத்தத்தைக் கடவுளின் கோபத்தின் அறிகுறி என

நினைத்தான். மனித குலத்தின் எதிரிகளை அழிப்பதற்குச் சொர்க்கத்தில் இருந்து எழும் ஒலி என்றும் இவற்றைக்கருதினான். இடி முழக்கம் எவ்வாறு உண்டாகின்றது என்பதற்கும் தற்கால மனிதன் விடைகூறுபவனாக இருக்கின்றான். இடியுடன் கூடிய புயல் உற்பத்தியாவதில் 3 கட்டங்கள் இருக்கின்றன. மேலெழும் வளி முதலாவது நிலையாகும். ஏறக்குறைய கால் மணி நேரத்திற்கு மேல் நோக்கி எழும் வளி ஓட்டங்கள் 6 மில்லியன் கணக்கான நீர்ச்சிறுதுளிகளாகவும் பனிக்கட்டி சிறுதுணிக்கைகளாகவும் எழும்பும். இதன் உயரம் பலமைல்களாக இருக்கும். முகிலின் அடியை நோக்கி மணிக்கு 60 மைல் எனும் வேகத்தில் காற்றுச் செல்கின்றது மின்னனுமண்டலத்தின்மேல்மட்டங்களில் வெப்பநிலை 0°Cயிலும் கீழாக இருக்கும் இடங்களில் வளியில் விடுவிக்கப்பட்ட நீர் நுண்ணிய ஐஸ் துணிக்கைகளாகி இவை வளரும்போது புவியின் ஈர்ப்பு சக்தியால் வளியினூடாக விழும். தொடக்கத்தில் அவை மெதுவாக விழுவதால் மேலெழும் வளி காரணமாக நிலத்தை நோக்கி முன்னேற முடியாது. ஆனால் நீரினுடைய சுமைமேல் எழும் வளிக்குத்தாங்க முடியாததாக இருந்தால் துளிகளும் துணிக்கைகளும் முகிலின் ஊடாகக் கீழே விழும். அவை கீழ்நோக்கிச் செல்லும் போது தம்முடன் குளிர்ந்த வளியோட்டத்தை இழுத்துச்செல்லும். இதுவே 2-ம் கட்டமாகும். கீழ்நோக்கி ஓடும் வளி முகிலின் அடிக்குக் குறுக்காகச் செல்லும்போது அது மேலெழும் வெப்பமான ஈரப்பற்றான வளியோட்டத்தைக்குறைத்து எளிதில் நிறுத்திவிடும். குளிரான வளி பூமியின் மேறபரப்பை நோக்கித் தன்னிடம் இருக்கும நீராவியை மழையாகக் கொட்டுகின்றது. இந்நிலைக்குச் சற்று முன் இடிமுழக்கங்களினுள் வெப்பமான மேலோட்டமும் குளிரான கீழோட்டமும் மணிக்கு 100 மைல் வேகத்தில் நடக்கின்றது. முகிலினுள் மின்னல் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கும் முகிலின் அடியில் இருந்து பூமியை நோக்கியும் பாய்கின்றது. இதனால் வளி சடுதியாக விரிய இடிமுழக்கம் ஏற்படுகின்றது. பின்னர் புயல் மறைகிறது.

இடிமுழக்கமுகில் முதிர்ச்சி அடையும் நிலையில் ஒரு மின்னியல் நிலை தோற்றுவிக்கப்படுகின்றது. இதன் உச்சவிளைவாக ஒரு மின்னல் வெளிச்சம் உண்டாகின்றது. மின்னல் என்பது ஒரு சாதாரண மின்கலத்தின் இரு முடிவிடங்களுக்கும் இடையே பாய்வதை ஒத்த பெரிய பொறியாகும். இரண்டு புள்ளிகளுக்கு இடையேயுள்ள மின்னியல் அழுத்தம் அவற்றைப் பிரிக்கும் வளியின் தடையை வெல்லக்கூடிய அளவு உயர்வாக இருக்கும்போது ஏற்படும் மின்பாய்ச்சலையே மின்னல் குறிக்கின்றது. சாதாரண வீட்டு மின் தொகுதியின் ஒரு பொறியைப் பாயச்செய்யும் மின்னியல் அழுத்தம் ஏறக்குறைய 250 Volt ஆகும் இடிமுழக்க முகிலின் அடுத்தவேறுபாடு 100 m. Volt ஆகும். இது அம்முகிலின்மேற்பக்கத்திற்கும். கீழ்பக்கத்திற்கும் இடையே நிலவுகின்றது. முகிலின் ஊடாக மின்னல் அசையும் போது அது மின்னியல் அமுக்க வேறுபாட்டை விடுவிக்க உதவுகின்றது. ஆனால் சில செக்கன்களால் மீண்டும் ஏற்றப்படுகின்றது. இதனால் பளிச்சீடுகள் நிமிடத்திற்கு 3 எனும் வீதத்தில் தோன்றுகிறன.

---

## உங்களுக்குத் தெரியுமா.

### புகழ் பெற்ற ஏழைகள்

ஆபிரகாம் லிங்கன்
— ஏழை விறகு வெட்டியின் மகன்.

கிரகர் மென்டல்
— ஏழை விவசாயியின் மகன்.

தோமஸ் அல்வா எடிசன்
— படகோட்டியின் மகன்.

சாள்ஸ் டிக்கின்ஸ்
— பழைய புத்தக வியாபாரியின் மகன்.

ஜோசப் ஸ்டாலின்
— செருப்புத் தைப்பவரின் மகன்.

பெஞ்சமின் பிராங்க்ளின்
— மெழுகுவர்த்தி வியாபாரியின் மகன்.

எச். ஜீ. வெல்ஸ்
— சில்லறை வியாபாரியின் மகன்.

சாமுவேல் ஜான்சன்
— புத்தக வியாபாரியின் மகன்.

நாம் பார்க்கும் பெரும்பாலான மின்னல் பளிச்சீடுகள் முகிலுக்கும் தரைக்கும் இடையே நடைபெறுகின்றன.

பெஞ்சமின் பிராங்லின் என்னும் விஞ்ஞானி இடிமுழக்க முகிலின் கீழ் ஒரு பட்டத்தைப்பறக்கவிட்டு அதன் ஈரமான நூலினூடாக மின்தரைக்குப் பாய்வதைக் காட்டினார். தொடர்ந்து நடைபெற்ற ஆராய்ச்சிகள் இடிமுழக்க முகிலின் மேற்பக்கப்பகுதியில் (+) மின்னேற்றமும் அதன் அடிப்பகுதியில் (—) மின்னேற்றமும் இருப்பதைக் காட்டின. இவ்விரு பிரதேசங்களுக்கு இடையே பெரிய மின் அழுத்தவேறுபாடு உள்ளது. இது முகிலுள்ள வளியின் தடையை வெல்லும்போது பெரிய மின் பொறி செல்கின்றது. முகிலின் அடியில் உள்ள எதிர் ஏற்றப் பிரதேசத்துக்கும் கீழிருக்கும் பூமிக்கும் இடையே பெரிய அழுத்தவேறுபாடு இருக்கும் போதும் முகில் தரைக்கு அண்மையாக இருக்கும் போதும் மின்னல் தரையைத் தாக்குவதுண்டு. பொதுவாக தென்னை, பனை போன்ற உயர்ந்த மரங்களின் இலை நுனிகளுக்கூடாக மின் புவியை அடைகின்றது. பெரிய கட்டடங்களை மின்னல் பாதிக்காமல் இருப்பதற்காக இடிமின்னல் தாங்கி பொருத்தப் படுகின்றது.

**வை. சிவகுமார்**
**ஆண்டு 12 C**

---

# இந்து சமயமும் பெண்களின் பங்களிப்பும்

சமய வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டு, நம் சமுதாயம் முன்னேறப் பெண்கள் பெரும் பங்காற்ற முடியும். நம் சமய வரலாற்றிலும், பெண்கள் சிலர் பெரும் பங்காற்றியதை நாம் மறக்கமுடியாது. நல்ல தாயாக, சிறந்த மனைவியாக அன்புள்ள சகோதரியாக, வாழ்ந்து சமயத் தொண்டு செய்த பேரடியார்கள் சிலரை நம் சமய வரலாற்றில் நாம் காணாமல் இல்லை.

இங்கு சிறந்த சகோதரியாக வாழ்ந்து அப்பர் சுவாமிகளை சைவ உலகிற்களித்த திலகவதியாரையும், சிறந்த மனைவியாக வாழ்ந்து, சமணனாக வாழ்ந்த தன் கணவன் நின்றசீர்நெடுமாறனை நாயனாராக ஆக்கியதோடு அப்பரது அடியார்வழி சைவ எழுச்சியையும் ஏற்படுத்திய மங்கையர்க்கரசியாரையும் நாம் எவ்வாறு மறப்பது தனித்த நிலையிலும் தம் ஞானப் பக்குவத்தால் அம்மையாக வாழ்ந்த காரைக்கால் அம்மையாரையும் இங்கு நினைக்க வேண்டும்.

சமய ஸ்தாபனமாக நாம் கோவில்களையே பெரும்பாலும் கருதுகிறோம். ஆயின் ஒருவரின் சமய வாழ்க்கை இல்லத்திலேயே தொடங்குகிறது. சமய வாழ்க்கை மலருவதற்கேற்ற சூழலை இல்லத்தில் நாம் பண்ணித் துத்தர முடியாவிட்டால், வாழ்க்கையில் முதற்படியிலேயே இருக்கிறோம் என்பதே பொருள்.

இந்து மக்களின் இல்லங்கள் உண்மையில் சமயச் சிந்தனையின் அடிப்படையில் அமைவனவே. கட்டிட அமைப்பு மட்டுமன்று; வீட்டிலும் தூய்மை பேணப்படுதல்; துளசி மாடம் அமைத்தல், பூசையறை அமைத்தல், மாவிலை தோரணங்களால் அலங்கரித்தல் போன்றனவும் சமய வாழ்வின் எதிரொலியே. சுருங்கக் கூறின் "இல்லங்கள்" இந்துப் பண்பாட்டை விளக்கி நிற்கும் நிலையங்கள் எனல் வேண்டும்.

ஒரு பெண்ணின் பெருமை, இப்பண்பாட்டு நிலையத்தின் தலைவி என்ற நிலையிலேயே சிறக்கிறது. திருமணத்தின் போது இல்லக் கிழத்தியாகத் தலைவியாகச் சிறக்கின்ற, பெண் தாயாக மாறுகின்ற நிலையில் பலராலும் மதிக்கத்தக்கவளாக மேலும் உயர்கின்றாள்.

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

என்பார் திருவள்ளுவர். "இல்லத்தில் சிறந்த சமயச் சூழலை ஏற்படுத்துபவள் இல்லத்தின் தலைவியே 'மனைக்கு விளக்காம் மடவார்' என்று பெரியோர்கள் கூறுவர். 'கிருக லட்சுமி' என்னும் வழக்கையும் நாம் கருத வேண்டும். 'சமயம்' இல்லத் தலைவியின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருப்பது, சமயப் பண்பாட்டின்' அடிப்படையில், பாரம்பரிய நடைமுறையில் ஈடுபாட்டுடன் வளர்ந்து வருகின்ற ஒரு பெண் சாத்திர அறிவு பெறாமல் இருந்திருக்கலாம். ஆயின் அவள் வாழ்க்கை, சமய பாரம்பரியத்தில் அமைந்த இலட்சிய வாழ்க்கையாகவே இருக்கும். நூல்வழி கிடைக்கும் அறிவை விட பாரம்பரியக் கோட்பாட்டில் ஒரு பெண்ணுக்கு இருக்கும் உறுதியே அவள் வாழ்க்கை மேம்பாட்டுக்குத் துணை செய்ய வல்லது.

சில சமய ஒழுக்கங்களைப் பேணிக்காப்பதோடு, குடும்பத்திற் சென்றே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அவள் வாழும் 'தியாக வாழ்க்கையும்' நம் பண்பாட்டின் வழி அவளுக்குக் கிடைத்த ஒரு செல்வமேயாகும்.

இந்துக்கள் அளவில் 'சமயம்' என்பது சில கோட்பாடுகள் அன்று; அது ஒரு வாழ்க்கை நெறியே. எனவே அன்றாட வாழ்க்கையிலும் அதனைக் காண முடியும் காலையில் எழுந்து நீராடி, இறைவனை நினைத்து விபூதி அணிந்து குங்குமப் பொட்டிட்டு அவள் குடும்பத் தொண்டினைப், பணியினை மலர்ந்த முகத்தோடு, செய்து வருகிற செயல் அவள் வாழ்க்கை அடிப்படையின் சமய உணர்வை யாவருமே எளிதில் அறிந்து கொள்ளுமாறுள்ளது.

இத்தகைய பெண்ணின் தோற்றமே நம் பண்பாட்டின் படிவம் என்று சொல்ல வேண்டும். இத்தகைய பெண்மணி தாயாகித் தன் குழந்தையைத் தன் பண்பாட்டுச் சூழலில் வளர்க்கும் திறத்திலேயே நம் சமயத்தின் பிற்காலம் அடங்கியுள்ளது எனலாம். தாய் அன்பிலேயே குடும்பப் பிணைப்பு உருவாகிறது. இக் குடும்பப் பிணைப்பே நம் சமயக் கல்வியின், பண்பாட்டுக் கல்வியின் முதற் பாடம்.

காலம் செய்த கோலத்தால் இன்று இளைஞர்கள் போன்று பெண்களும் பாரம்பரியப் பண்பாட்டிலிருந்து நெடுந்தூரம் விலகிச் சென்று விட்டாலும், இன்றும் ஓரளவேனும் நம் சமயப் பண்பாடு பேணிக் காக்கப்படுகிறதென்றால், அது பெரிதும், பெண்களாலேயே என்று தான் கூற வேண்டும். திருக்கோயில்களிலும் சமயக் கொண்டாட்டங்களிலும் பெண்களே மிகுதியாகக் கலந்து கொள்கின்றனர், அவர்களே எம் சமயத்தைப் பேணிக் காக்கும் சக்திகளாக விளங்குகின்றார்கள்.

கணபதிப்பிள்ளை உதயசிறி
ஆண்டு 12 C

---

## உலகில் விசேடமானவை,
### எண்களில்

ஆமையிலுள்ள இனங்கள் — 225

யானையின் இதயம் நிமிடத்துக்கு துடிக்கும் தடவைகள் — 35

ஆமையின் வாழ்வுக் காலம் (ஆண்டுகள்) — 400

ஆஸ்திரேலிய குட்டி ஈனும் பாம்பு ஒருமுறை ஈனும் குட்டிகள் சராசரி — 70

பசுபிக் சமுத்திரத்திலுள்ள ஆழமான இடங்கள் — 35


நண்டு ஒன்றின் வாழ்வு காலம் (வருடம்) — 26

அமெரிக்காவைச் சார்ந்த பிக்பாக்கெற் திருடனான காமஸ்லோரான் திருடிய பாக்கெற்றுக்களின் தொகை —50,000

உலகில் உயரமான கட்டடத்தின் உயரம் — 1377 அடி 110 மாடிகள்

து. குமுதினி
ஆண்டு 12 D

# COLLEGE ATHLETIC TEAM



**SEATED :-** (Left to Right) *T. Thanujah, .K Premalatha, N. Balananthini, M. Sakeela, Mr. M Ramalingam (Principal) A. Baskar S. Surenthiran, S. Kirubakaran, Mr. K V. Thaneswaran (Prefect of Games)*

**STANDING FIRST ROW :-** (Left to Right) *S. Bhamini, K. Hemalatha. M. Rajani. S. Vathani M Kumuthini, K Ananthy, T. Vijaya nirmala, S. Balathevi, S. Subajini, N. Sasikala*

**STANDING SECOND ROW :-** (Left to Right) *S. Anantharajah, S. Sasitharan, T. Muneeswaran, N Umakaran, A. Arulchelvan, E. Balendra, S. Jackson jeeva, N. Jeevakumar. S. Jeevananth, S. Suboskaran.*

# குறள் வழி வாழ்க்கை

விலங்கியல் கற்கும், கற்பிக்கும் நாம் குறள்வழி வாழ்க்கை என்னும் தலைப்பின் கீழ் கட்டுரை எழுத முனைந்தது உங்களுக்குப் புதுமையாக இருக்கும். குறள்வழி வாழ்ந்தால் இப்புவி எவ்வளவு இன்பகரமானதாக அமையலாம் என்பதனை இக்கட்டுரை எடுத்துக் கூறுகின்றது. இங்கு மையமாக எடுத்துக் கொள்ளப்பட்டது

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
-வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.
எனும் குறளாகும்.

விலங்கியல் கற்றவர்கள் மனிதன் மனிதனாகவே படைக்கப்படவில்லை. அவன் நீண்ட பரிணாம மாற்றங்களினாலேயே படைக்கப்பட்டவன் என்று கருதுகிறார்கள். சிலர் கடவுள் நம்பிக்கையற்றோராகவும் காணப்படுகிறார்கள். மனிதனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு வெளிப்புறச்சக்தி இருக்கிறது. அதுவே இந்த நீண்ட பரிணாம மாற்றங்களை நெறிப்படுத்தியுள்ளது என நாம் கருதுகின்றோம். நாம் எடுத்துக்கொண்ட குறளில் உள்ள தெய்வமே இச்சக்தியென்று உணர்கிறோம். இக் குறளில் வானுறையும் தெய்வம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் காலத்துக்குக்காலம் தெய்வம் மக்களிடையே தோன்றுகின்றது. உதாரணமாகப் பார்த்தனுக்கு தேரோட்டியாகத் தோன்றியது. நம் மத்தியிலும் எம்மால் இனம் காணப்படாத தெய்வம் நடமாடலாம். நமது துன்பங்களுக்கு எல்லாம அத்தெய்வம் முடிவுகட்டும் நாளும் வரலாம்.

நம்மைச் சுற்றி உள்ள உயிரியல் உலகைத் தோற்றுவித்த பரிணாமத்துக்கு a) விகாரம் b) குறுக்குப்பரிமாற்றம் c) புணரியாக்கத்தின்போது அமைப்பு ஒத்த நிறமூர்த்தங்கள் எழுந்தமானமாக பங்கிடப்படுதல் d) புணரிகளின் கருக்கட்டல் எழுந்தமானமாக நடைபெறல் e) அபரிமித உற்பத்தி f) இயற்கைத் தேர்வு என்பன காரணங்களாக அமைகின்றன, என உயிரியலாளர்கள் கருதுகின்றனர்.

விகாரம் பரம்பரைக் காரணிகளால் சடுதியாக ஏற்படும் தலைமுறையுரிமை பெறக்கூடிய மாற்றமாகும். இது புதிய இயல்புகளைத் தோற்றுவிக்கக் கூடியது.

குறுக்குப் பரிமாற்றம் என்பது அமைப்பொத்த நிறமூர்த்தங்களின் பகுதிகள் கோப்புகளில் பரிமாறப்படுவதாகும். இதனால் பரம்பரையலகுச்சேர்க்கைகள் மாறுகின்றன. புதிய இயல்புகள் தோன்றலாம்.

அமைப்பொத்த நிறமூர்த்தங்களில் ஒத்த ஒழுககுகளில் எதிர் உருக்கள் இருக்கின்றன. தாய்வழி வந்த நிறமூர்த்தங்களும் தந்தைவழி வந்த நிறமூர்த்தங்களும் எழுந்தமானமாகப் பங்கிடப்படுவதனால் ஒவ்வொரு புணரியும் மற்றையவற்றிலும் வேறுபட்ட பரம்பரையலகுச் சேர்க்கைகளைக் கொண்டிருக்கும். இதுவும் புதிய இயல்புகள் தோன்றுவதற்குக் காரணமாகின்றது.

புணரிகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன. அவற்றின் கருக்கட்டல் எழுந்தமானமாக நடைபெறுவதாக இருந்தால் அதன் பயனாக வரும் நுகம் புதிய பரம்பரையலகுச் சேர்க்கைகளைக் கொண்டதாக இருக்கும். அதன் பயனாக புதிய இயல்புகள் தோன்றலாம்.

அங்கிகள் பெரும் தொகையான குழந்தைகளைத் தோற்றுவிக்கின்றன. இவை நுகத்திலிருந்து விருத்தியடைகின்றன. ஒவ்வொரு குழந்தையும் மற்றையதிலிருந்து வேறுபடுகின்றது. குழந்தைகள் பெரும் தொகையாக இருக்கும்போது அவற்றிடையே போட்டி ஏற்படுகிறது. இயற்கைத் தேர்வினால் தெரிவு செய்யப்பட்ட குழந்தையே இனப்பெருக்கக் காலம்வரை தப்பி உயிர் வாழ்ந்து தனது இயல்புகளை அடுத்த சந்ததிக்குக் கடத்தும். இதனையே டார்வின் "தக்கன பிழைத்தல்" என்று கூறினார்.

புதிய இயல்புகள் தோன்றுவதாலேயே ஏற்கனவே இருந்த உயிரினங்களில் இருந்து வேறுபட்ட உயிரினங்கள் தோன்றிப் பரிணா

மம் நடைபெறுகின்றது. மேலே எடுத்துக் காட்டப்பட்ட புதிய இயல்புகளின் தோற்றத்திற்குக் காரணமான நிகழ்ச்சிகள் யாவும் தற்செயலானவையாக இருந்தால நம்மைச் சூழ உள்ள இந்த அழகிய உலகம் அதன் பல்வகைமையுடன் தோன்றியிருக்க முடியுமா? பரிணாமத்தின் உச்சக்கட்டம் என்று நம்மால் நம்பப்படும் மனிதன் தற்செயலான மாற்றங்களின் விளைவாகத்தோன்றினான் என்றால் யார் நம்புவார்கள்? எனவே திசை காட்டியாகத் தொழிற்பட்டது வானுறையும் தெய்வமேயாகும்.

கிரேக்க தத்துவ ஞானி சோக்கிறற்றீசுக்கு நஞ்சூட்டப்பட்டதற்கு ஒரு காரணம் அவர் இறைவனுக்கு வரைவிலக்கணம் கூற முற்பட்டதாகும். நாம் இறைவனுக்கு வரைவிலக்கணம் கூற முன்வரவில்லை. விலங்கியல் நோக்கில இறைவனைப் பார்க்க முற்பட்டோம். ஒரு விலங்கினது உடலின் ஒவ்வொரு பகுதியும் சிறப்பான ஒரு தொழிலைச் செய்வதற்கேற்றவாறு அமைந்து அதே நேரத்தில் முழு உடலும் ஒரு அலகாகத் தொழிற்படும் விந்தையை அறிந்து அனுபவித்தவர்கள் அந்த விந்தைகளுக்கு எல்லாம் காரணகர்த்தா யார் என்று சிந்திக்க வேண்டும். கடவுள் எங்கிருக்கிறார் என்று நம் மத்தியில் இருக்கும் சிலர் கேட்பதாலும் கடவுள் இருக்கிறாரா என்று கேட்பதாலுமே நாம் கடவுள் பற்றிய விளக்கத்தைச் சிறிது விரிவாக்கியுள்ளோம்.

ஒரு பிரதேசத்தின் காலநிலைக்கு ஏற்றவாறே அங்கு தாவரவிலங்கு வாழ்க்கை அமையும். ஒருபிரதேசம் சமநிலையில் இருக்கும்போது அங்கு காலநிலைக்கேற்ற காடே காணப்படும். அக்காட்டில் தாவரங்களும் விலங்குகளும் ஒன்றில் ஒன்று தங்கிவாழும். மனிதன் ஆதியில் காட்டுவாழ்க்கையையே வாழ்ந்தான் என வரலாறு கூறுகின்றது.

ஆதிமனிதன் சூழலில் தானும் ஒரு அங்கமாகிச் சூழலோடு சேர்ந்து வாழ்ந்தான் அவன் ஏனைய விலங்குகளைப்போலத் தானும் ஒரு விலங்காகத் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்குச் சூழலைப் பயன்படுத்தினான். அவன் தனது உரிமைக்கு மேலதிகமாகச் சூழலைச் சூறையாடவில்லை. ஆனால் தற்காலமனிதன் சூழலைத் தான் விரும்பியவாறு மாற்றுகின்றான். தான் மற்றைய உயிரினங்களைப் பாதிப்பதை அவன் நினைவில் கொள்வதில்லை தனது விருப்பத்திற்கேற்பச் சூழலைச் சூறையாடுகின்றான். ஏனைய உயிரினங்களுக்கும் சூழலில் பங்கு இருக்கின்றது, அவையும் வாழவேண்டும் என்று மனிதன் நினைப்பதில்லை.

இலங்கையில் உள்ள யானைகளுக்கு நடப்பதைச் சிந்தித்துப்பாருங்கள். விவசாய நடவடிக்கைகளுக்காகவும் நதிகளைத் திசை திருப்புவதற்காகவும நமது நாட்டில்உள்ள காடுகள் அழிக்கப்படுகின்றன. தமது வாழிடமான காட்டைஇழந்த யானைகள் மனிதன் பயிரிடும் நிலத்துக்கு வந்தால் அவற்றுக்கு என்ன நடக்கின்றது யானை பயிரை நாசம் செய்கின்றது என்று மனிதன் நினைப்பானேயொழிய, அது உணவு இன்றி வாழிடம் இன்றித்தான் பயிர்செய்யும் நிலத்தை நாடுகின்றது அதன் வாழிடத்தை நாமல்லவோ பறித்தோம் என்று நினைப்பதில்லை. சரணாலயங்கள் அமைத்து விலங்குகளைப் பாதுகாத்தாலும் அவை இயற்கையில் வாழும் சுதந்திரத்துடனும் பெரும் எண்ணிக்கையிலும் வாழமுடியாது. பல உயிரினங்கள் மனிதனின் நடவடிக்கைகளால் மறைந்துள்ளன. சில அருகி வருகின்றன. மனிதன் வாழ்வாங்கு வாழவில்லை

ஒரு சிவராத்திரி நாள் திருக்கேதீஸ்வரம் கோவில் மேற்கு வீதியில் புல் தரையில் அமர்ந்திருக்கும்போது எறும்புகள் புல் தானியங்களை எடுத்துச் செல்வதைக் கண்டேன். அப்பொழுது எனது மனதில் ''மனிதன் பயிரிடுவதற்காகப் புல்வெளிகள் யாவற்றையும் அழித்துத் தான் பயிரிடும் உணவில் எறும்புக்குரிய பங்கை அளிக்காது விட்டால் அச்சின்னஞ் சிறிய பிராணி உணவுக்காக என்ன செய்யலாம் எனும் சிந்தனை ஏற்பட்டது மனிதனின் விவசாய நடவடிக்கைகளைச் சிந்தித்துப் பாருங்கள். நிலத்தைப் பண்படுத்தித் தான் விரும்பும் பயிரை விளைவித்துப் பயிரில்

வேறு பிராணிகளுக்குப் பங்கு இல்லை என்னும் கருத்துடன் அவற்றையெல்லாம் விரட்டித் தானே அனுபவிக்கின்றான். அந்த நிலங்களை அவன் பயிரிடாவிட்டால் இயற்கை அவ்விடத்தில் ஏதோ தாவர வர்க்கங்களை தோற்றுவித்து ஒவ்வொரு உயிருக்கும் உணவு அளித்திருக்கும். நாவல், இலந்தை, வேம்பு, ஆல் இப்படியான பெரிய மரங்களைச் சிந்தித்துப் பாருங்கள். அவை எல்லாம் ஒரே சமயத்தில் பழங்களைத் தோற்றுவிக்கின்றனவா? வெவ்வேறு சமயத்தில் வெவ்வேறு மரங்கள் பழங்களையும், வித்துக்களையும் தோற்றுவிப்பதால் பிராணிகளுக்கு ஒழுங்காக உணவு கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்றது. அவற்றில் சில தகாத காலத்துக்காக, தமக்குக்கிடைக்கும் இயற்கை உணவுகளைப் பாதுகாத்தும் வைக்கின்றன.

மனிதனது எதுவிதமான குறுக்கீடும் இல்லாத ஒரு இடத்துக்குச் சென்று பாருங்கள். அவ்விடம் எவ்வளவு தூய்மையாகவும் அழகாகவும் இருக்கின்றது. அங்கு அழகான பூக்கள், இலைகள், பறவைகள், பூச்சிகள் முதலியவற்றைக் காணலாம். நாம் தோட்டத்தில் பயிரிடும் ரோசாவும், செவ்வந்தியும் தான் அழகானவை என்று நீங்கள் நினைக்கக் கூடாது. இயற்கை வனப்பை மனிதன் சீர்குலைக்கின்றான். மனிதன் தான் விரும்பியவாறு இயற்கையை மாற்றுவதுடன் அதனை மாசடையவும் செய்கிறான். மாசடைவதால் மனித வாழ்க்கையும் ஏனைய உயிரினங்களின் வாழ்க்கையும் பாதிக்கப்படுகின்றது. காலநிலை மாறுகின்றது. ஆதி மனிதன் சூழலை மாசடையச் செய்யவில்லை. காரணம் அவன் பரந்த பிரதேசத்தில் வாழ்ந்தான். அவனது இயற்கைக் கழிவுகள் பிரிகையாளரால் பிரிக்கப்பட்டு மறைந்தன. ஆனால் நவீன மனிதன் நகரங்களில் நெருக்கமாக வாழ்கிறான். கைத்தொழிற் கழிவுகளும் உண்டாகின்றன இவற்றை எல்லாம் அகற்றுவதற்குத் தேவையான திட்டங்களைத் தீட்டாமையாலேயே மாசடைதல் பிரச்சனை ஏற்படுகின்றது.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல் என்பது, தானும் வாழ்ந்து பிற உயிரினங்களும் வாழக்கூடிய நிலைமையை உருவாக்குவதாகும். ஆனால் நாம் அவ்வாறு வாழவில்லை, மற்றவர்களின் மனஎழுச்சிகளுக்கும் மதிப்பளிக்க நாம் பழக வேண்டும். குற்றம் செய்தவரைச் சித்திரவதை செய்துதான் கொல்லவேண்டும் என்று நினைக்கக்கூடாது கொல்லப்படுவதை மற்றவர்கள் பார்க்கும்படியாகச் செய்வதோ பல காயங்களுடன் கூடிய உடலை மனிதர் பார்வைக்கு வைப்பதோ வாழ்வாங்கு வாழ்தல் ஆகாது. தவறு செய்வது மனித இயற்கை. தண்டிக்கும் போது அதனையும் கருதி மனிதாபிமான முறையில் எந்தக் குற்றவாளியையும் தண்டிக்க வேண்டும். நம் முன்னோரது பழக்க வழக்கங்களைப் பழையவை என்று தூக்கி எறியக்கூடாது. பழமையிலும் புதுமை காணப்பழக வேண்டும். ஆலயங்களின் புனிதம் பேணப்பட வேண்டும். கடவுள் நம்பிக்கையுள்ளவர்களாக வாழ வேண்டும். நாட்டின் இயற்கையமைப்பை நாம் விரும்பியவாறு மாற்றாமல் தகுந்தவாறு திட்டமிட்டுத் தாவர விலங்குச் சமநிலையைக் குழப்பாது சூழலைப் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு உயிருக்கும் சூழலில் உள்ள பங்கை உணர்ந்து மதிப்பளித்து அவை வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும். இவ்வாறு வையத்துள் வாழ்பவன் தெய்வத்துக்குச் சமமாவான்.

ம. ரஜனி
ஆண்டு 13 A

# நாக்கொண்டு மானிடம் பாடாத தன்மையாளர்கள்

செந்நாப் புலவர்கள் பலர் தோன்றிப் பாவிசைத்துத் தமிழ் வளர்த்த பெருமை கொண்டது எம் தமிழிலக்கியப் பரப்பு. அப்பரப்பினிலே ஆதிக இலக்கியச் செய்யுட்கள்

''வானம் நாண வரையாது சென்
றோர்க்கு''

ஆனது ஈயும் கவிதை வன்மையுடைய புரவலரையோ வள்ளல்களையோ பாடிய செய்யுட்களாகவும் மக்கள் வாழ்க்கையைச் சிறப்பாகச் சித்தரிக்கும் செய்யுட்களாகவும் அமைந்தன.

அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள், புலவர்கள் தம்மைப் பாடுவதையே பெரும் பேறாகக் கொண்டனர். ஆனால் அக்கால மன்னர்கள் வேண்டுவன புரிந்து புலவரைச் சிறப்பித்தனர். புலவரும் புகழுடைய மன்னரைப் பாடுவதல்லாது வேறொன்றும் அறியாதவராய் வாழ்ந்தனர். இதற்கு உதாரணமாகத் தனது நண்பனான பாரி இறந்ததைக் கேட்ட கபிலர் உயிர் வாழ விரும்பாது வடக்கிலிருந்ததும், ஔவையார் அதிகமான் உயிர் நீத்தபோது நெஞ்சுருகிப் பாடியதும் புறநானூற்றில் காணப்படுகின்றன.

ஆனால் இம்மரபை மாற்றியமைத்தவர்கள் காரைக்கால் அம்மையாரும், மூவாழ்வார்களும். நாக்கொண்டு மானிடம் பாடாராய் இறைவன் புகழ் பாடி இறை ஒன்றையே மனத்திருத்தி இறவாப் புகழ் கொண்ட பக்தியாளர்கள். சைவமும், வைஷ்ணவமும் சீரழியும் நிலையில் இருந்த போது இவர்கள் தோன்றிச் சைவ, வைஷ்ணவ பக்தி நெறிக்கு வழிகோலினர் காரைக்கால் அம்மையார் சிவபெருமான் மீது பக்தி பூண்டு ஒழுகியவர். இவர் ''பிறவாமை வேண்டும், மீண்டும். பிறப்புண்டேல் உன்னை மறவாமை வேண்டும்'' எனச் சிவன் மீது கொண்ட அன்பின் திறத்தை வெளிப்படுத்தியவர். அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்பவற்றைச் சிவன் மீது பாடியவர்.

மூவாழ்வார்களில் பொய்கையாழ்வார் வைஷ்ணவ சமயத்தின் விடிவெள்ளியாக விளங்கினார். கிருஷ்ணவதாரத்தில் ஈடுபாடு உடையவர். இவர்

''நாடிலும், நின்னடியே நாடுவேன்
நாள்தோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன் -சூடிலும்
பொன்னாழி ஏந்தினான் பொன்னடிக்கே
சூடுவேற்கு
என்னாகில் என்னே எனக்கு'' என்றும்
''வாய் அவனை அல்லது வாழ்த்தாது கை
உலகம்
தாயவனை அல்லது தாம் தொழா- பேய்
முலை நஞ்சு
ஊணாக உண்டான் உருவொடுபேர் அல்லால்
காணாக்கண் கேளாச் செவி''

என்றும் பாடுவதிலிருந்து நாக்கொண்டு மானிடம் பாடாத தன்மை புலப்படுகிறது. இவர் சைவத்தையும் வைஷ்ணவத்தையும் சமரச நோக்குடன் பார்த்தவர்.

''திருக்கண்டேன் பொன்மேனி கண்
டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்''

எனத் திருமாலின் திருமேனியைப் பாடிப்பரவும் பேயாழ்வாரும் சைவத்தையும் வைஷ்ணவத்தையும் சமரச நோக்குடன் பார்த்தவர் ஆவார் பக்தியோடு உயர்ந்த வாழ்வு வாழாதவர்களை மானிடராக மதிக்கக் கூடாது என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர் பூதத்தாழ்வார்.

இவர்களைப் பின்பற்றி ஏனைய திருமழிசை ஆழ்வார் தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், ஆண்டாள், மதுரகவி ஆழ்வார், பெரியாழ்வார் குலசேகர ஆழ்வார், நம்மாழ்வார், திருப்பாணழ்வர் ஆகிய ஒன்பது ஆழ்வார்களும் இறை சிந்தனையினராய் பல்லவர் ஆட்சிக் காலத்தில (வாழ்ந்து 6-9 நூற்றாண்டு) இடையறாத பக்தியுடன் இறையருள் வசப்பட்டு நாக்கொண்டு மானிடம் பாடாத தன்மையினராக வாழ்ந்தனர். இதற்குத் தக்க சான்றாக திருமழிசை ஆழ்வார் திருமாலிடம் அளவு கடந்த பக்தியுள்ளவர். இவருடைய பக்தனாகிய கணிகண்ணனைப் பல்லவ நாட்டு அரசன் தம்மைப் பாடுமாறு கேட்க அதற்குக் கணிகண்ணன் "மானிடம் பாட அறியேன்" என்று மறுக்கிறா". இதனால் கோபமுற்ற அரசன் நாட்டைவிட்டு அகலுமாறு பணித்தான். இதனை அறிந்த திருமழிசை ஆழ்வார் கணிகண்ணனைப் பின்தொடர்ந்ததுடன் திருவெஃகாவில் எழுந்தருளிய திருமாலிடம்.

"கணிகண்ணன் போகிறான் காமரு
பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டாம்
—துணிவுடைய
செந்நாப் புலவனும் செல்கின்றேன்
நீயும் உன்
பைநாகப் பாய் சுருட்டிக் கொள்"

என்று வேண்டுகோள் விடுக்க இறைவனும் அவ்வாறே செய்து அவர்களைப் பின் தொடர்ந்ததாகவும் பின்னர் பல்லவ அரசன் பிழையுணர்ந்து வேண்ட திருமழிசை ஆழ்வாரின் வேண்டு கோளின்படி திருமால மீண்டுவந்து திருவெஃகாவில் வீற்றிருந்தான் என்றும கதையுண்டு.

ஆழ்வார்களுள் சிறந்தவரான நம்மாழ்வார் பிறந்த நாள் முதல உலக வாழ்க்கை பற்றிச் சிந்தியாமல் வாழ்ந்த பொழுது தலயாத்திரை செய்து வந்த மதுரகவி ஆழ்வார் இவரை நோக்கி

"செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்."
என்று வினவ அவர்

"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். இவர் நான்கு பிரபந்தங்கள் விஷ்ணுவைக் குறித்துப் பாடினார். இந்நான்கு பிரபந்தங்களும் நான்கு வேதங்கள் எனப்படுகின்றன இவர் நாயன்மார் போலக் கடவுளைத் தோத்திரம் கூறி வழிபட்டால் மோட்சம் அடையலாம். என்ற கருத்துக் கொண்டவர் இவருடைய திருவிருத்தப் பாடல்கள் மாணிக்கவாசகருடைய திருவாசகப் பாடல்கள் போல மனதை உருக்கும் பாடல்களாகக் காணப் படுகின்றன இவரை அவயவியாகவும் ஏனைய ஆழ்வார்களை அவயவங்களாகவும் வகுத்துக் கூறுவர். இவருடைய பாடல்கள் பகவானைப் புகழ்ந்தும் இறைபக்தியற்ற மனிதரை இகழ்ந்தும் பாடப்பட்டுள்ளன.

"செடியாய வல்வினைகள் தீர்க்கும்
திருமாலே நெடியோனே! வேங்கடவா!
நின்கோவில் வாசல்
அடியாரும், வானவரும் அரம்பையரும
கிடந்தியங்கும்
படியாய் கிடந்துன் பவளவாய்
காண்பேனே"

எனப்பாடிய குலசேகர ஆள்வார்,

"பல்லாண்டு, பல்லாண்டு
பலலாயிரத்தாண்டு
பலகோடி நூறுயிரம் பல்லாண்டு
நணபோன்
மணிவண்ணா உன் செவ்வி திருக்காப்பு"

என வாழ்த்திக் கிருஷ்ணவதாரத்தில் ஈடுபாடு கொண்டு அவ்வவதாரத்தையே சிறப்பித்துப் பாடிய பெரியாழ்வார், இறைவனையே தன் நாயகனாக மனக்கண்ணிற் கண்டு அவனையே நினைந்துருகிப் பாடிய ஆண்டாள், தம்மை இறைதொண்டரது காற்புழுதியாகக் கருதி வாழ்ந்து திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்னும் பக்திப் பாசுரங்களைப் பாடிய தொண்டரடிப் பொடியாழ்வார்.

"அமலன் ஆதிபிரானடி யார்க்கென்னை
யாட்படுத்த
விமலன் விண்ணவர் கோன் விரையார்
பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதி வானவன் நீள்
மதிலரங்கத்தம்மான் திருக்
கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன
வொக்கின்றதே"

எனப் பாடிப் பரவிய திருப் பணாழ்வார், மடலேறியும் இறைவனை அடைவேன் எனத் துணிந்து பெரிய சிறிய திருமடற் பிரபந்தங்களைப் பாடிய திருமங்கை ஆழ்வார் ஆகியோரை இக் குறிக்கோளோடு வாழ்ந்த பக்தி நெறியாளர் வரிசையில் நாம் காண்கிறோம்,

ஆழ்வார்கள் இறைகுணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டு விஷ்ணு புகழ் ஒன்றையே பாடிப் பரவி வாழ்ந்த இந்தக்கால கட்டத்தே சிவனைப் போற்றிப்பாடிப் பரவி அவன் தாளையடைவதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர், முதலிய சைவ நாயன்மார்களையும் நாம் காண முடிகிறது.

"குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்"

கண்டு அதிலே இயலித்து மனம்பறிகொடுத்து வாழ்ந்த இந்நாயன்மார்கள்

"எவரேனும் தாமாக விலாடத்திட்ட
திருநீறும் சந்தனமும் காண்பாராகில்
இவர் தேவர் அவர்தேவரென இரண்டாட்
டாது ஈசன் திறமே பேணி வாழ்ந்
-தவர்கள்

ஆழ்வார்களுள் தொண்டரது சாற்புமுதியாகத் தம்மைக் கருதித் தொண்டர் குலமே தொழுகுல மெனப் பாடிய தொண்டரடிப் பொடியாழ்வார் போல்

"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கு
மடியேன் திருநீலகண்டத்துக்
குயவனார்க்கடியேன்"

எனத் திருத்தொண்டர் தொகை பாடி சுந்தரமூர்த்தி நாயனார் உவர் மண் மூட்டையொடு தன் முன் காட்சி தந்தவனை வெண்ணீறு பூசிய அடியானைக் கண்டு தாம் ஊர்ந்து வந்த யானையை விட்டிறங்கி கூப்பிக் கைதொழுத சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோரை நாம் பக்தி நெறியாளர் வரிசையிலே காண்கிறோம் இவர்களெல்லாம் மானிடம் பாடியோரல்லர். பந்தக் கட்டுக்களினின்று நீங்கிய இறை அடியார்களை இறைவனைக் கருதி வாழ்ந்தவர்கள். அரசனுக்கு மந்திரியாக வாழ்ந்தும் இமைப் பொழுதும், தன் நெஞ்சில நின்று நீங்காதவராக இறைவனைக் கண்டு களித்த மணிவாசகர், இறைவனுக்குத் தன் கண்ணையே இடந்து அப்பிய கண்ணப்பர் சுந்தரமூர்த்திநாயனார் போன்ற அடியார்கள் பலரை மானிடம் பாடாத தன்மையினராக நாம் காண்கிறோம். தென்னாட்டில் மட்டுமல்ல வடநாட்டிற் கூட கபிர்தாசர், ஸ்ரீசைதன்யர், மீராபாய் இராமதாசர், நாமதேவர், சூர்தாசர், துளசிதாசர் போன்றோர் இத்தகைய மானிடம் பாடாத பக்தி நெறியாளராக வாழ்ந்து இறவாப் புகழெய்தியிருக்கிறார்கள்.

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்பிலும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்"
எனப் புலவர்களை நெறிப்படுத்திய

ஐ. பிரேமராணி
ஆண்டு 13C

# நினைவுகள் கலைகின்றபோது...

அன்று சனிக்கிழமை, எல்லா வேலைகளையும் முடித்துவிட்ட சாந்தி தங்கள் வெளிமுற்றத்திற்கு வந்து வானத்தை அண்ணாந்து நோக்கினாள். எவ்வளவு அமைதியாக இருக்கிறது. பகற் பொழுதில் எவ்வளவு ஆரவாரமாக இருந்தது. பறவைகள் வானத்தில் பறப்பதும் குருவிகள் தங்கள் சக நண்பர்களுடன் உலாவுவதும், வண்டுகள் பூக்கள்மீது தேனை எடுப்பதுமாக அமைதி அற்று இருந்தது. இப்போது எவ்வளவு அமைதியாக இருக்கிறது. என இரசித்துக் கொண்டிருந்தாள் சாந்தி. அமைதியாக இருந்த சாந்தியை அவளின் நினைவுகள் கடந்தகால வாழ்க்கைக்கு இழுத்துச் சென்றன.

அன்று சாந்தி கவலை அற்ற பறவை. சிட்டுக் குருவிபோல் ஆடிப்பாடித் திரிந்தாள். கவலை என்றால் என்ன என்று தெரியாது சாந்திக்கு. அப்போது அவள் தான் தான் உலகத்திற்கு ராணி என்ற எண்ணத்தில் ஒருவருக்கும் அடங்காமல் மதிக்காமல் திரிந்தாள். அவ்வேளையில் சாந்திக்கு எண்ணில் அடங்காத நண்பிகள். ஏனெனில் அவ்வூரிலேயே அவள் தான் பணக்காரி. சாந்தி வெளியூரில்தான் கல்வி பயின்று வந்தாள். ஒவ்வொரு நாளும் பஸ்ஸில் செல்வது வழக்கம் ஏனெனில் விடுதியில் இருந்து படிப்பதற்கு சாந்திக்கு விருப்பமில்லை. அப்போது சாந்திக்குப் பதினெட்டு வயது. வயது பதினெட்டேயொழிய அவளின் செய்கை முழுவதும் குழந்தைப்பிள்ளைபோல் தான் இருந்தது.

சாந்தி வீட்டில் செல்லப்பிள்ளை. பெற்றோர் இவளின் போக்கிற்கே விட்டுவிடுவார்கள். ஏனெனில் ஏதும் சினத்து விட்டால் அன்று முழுக்க சாப்பிடாமல் அழுது கொண்டே இருப்பாள் அதனால் பெற்றோர் ஒன்றும் கதைப்பது கிடையாது

சாந்தியின் உயிர்நண்பி உமா. அவள் மிகவும் கெட்டிக்காரி. அத்துடன் அடக்கமானவளும் கூட அவளின் இந் நற்செய்கையினால் அவளின் மேல் பலபேர் பொறாமை கொள்வதும் உண்டு. இப்படிக் கவலை அற்று இருந்த சாந்தியைத் திசைதிருப்பியது அச்சம்பவம்.

வழமையாக சாந்தியும், உமாவுந்தான் பஸ்ஸில் பாடசாலை செல்வது வழக்கம் அன்று உமா வரமாட்டாள் என்று சாந்திக்குத் தெரியும். ஏனெனில் முதல்நாள் தனக்குச் சரியான தலையிடி என்று கூறி, இன்று பாடசாலை வரமாட்டேன் என்று கூறியிருந்தாள். இதனால தனிமையாகவே பாடசாலை செல்ல வேண்டியநிலைசாந்திக்கு. தன் சக நண்பிகளுடன் கதைத்துக் கொண்டிருந்த சாந்திக்கு அந்தப்புத்தகம் தன் புத்தகங்களுடன் எப்படி வந்தது என்று ஒரேயோசனை இருந்தும் தன் மனதைத் தேற்றிக் கொண்டு வீடுவந்து சேர்ந்தாள் வீடுவந்த சாந்தி புத்தகத்தை எடுத்து யாருடையது என்று நோக்கினாள் 'சாந்தன்' என்று எழுதி இருந்ததைப் பார்த்த சாந்திக்கு உலகமே தனக்குள் அடங்கியது போல் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தாள். அவளின் எண்ணம் முழுவதும் தன்னைச் சாந்தன் விரும்புவதாக சாந்தன் மேல் சிறியதோர் விருப்பம் இருந்ததுதான் சாந்திக்கு. ஆனால் இவ்வளவுசீக்கிரத்தில் அவன் தன் விருப்பத்தை புத்தகம் மூலம் வெளியிடுவான் என எண்ணவில்லை. தன் விருப்பத்தை எவ்வாறு சாந்தனிடம் கூறுவது என்ற எண்ணத்தில் குட்டி போட்ட பூனை போல் அலைந்து கொண்டிருந்தாள்.

இவளின் இவ்வாறான போக்கைப் பார்த்த உமா என்ன சாந்தி ஒரு மாதிரியாக இருக்கிறாய், ஏதும் சுகயீனமா என்று கேட்பதும் உண்டு. தன் எண்ணத்தை

உமாவிடம் கூறுவோமா என நினைப்பாள் பின உமா தன்னை என்ன நினைப்பாளோ என எண்ணித் தன் விருப்பத்தை தனக் குள்ளேயே அடக்கி விடுவாள், என்றாலும் சாந்தியின்வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைச் சகதோழிகள் பார்க்கத் தவறவில்லை. சாந்தி உமாவுக்குச் சொல்லவும் முடியா மல் மெல்லவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தத்தளித்துக் கொண்டிருந்தாள். இவ்வாறு தனது நாலாண்டு வாழ்க்கையை யோசனையிலேயே செலவிட்டாள். காலதேவன் சாந்தியையா பார்ப்பான். சாந்தி இப்போது பழைய சாந்தி அல்ல. கதைப்பதில் நடை உடை பாவனையில் முற்று முழுதாக மாறி இருந தாள். வழமையாகச் சாந்தி பொழுது புலர்வதன் முன்பே எழுவது வழக்கம். அன்றும் அவ்வாறு தன் வேலையில் மும் முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த சாந்தியை திசைதிருப்பியது தபாற்கார னின் மணிஓசை. ஓடிச் சென்று கடிதத்தை வாங்கிக் கொண்டாள். அவசர அவசர மாகப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

அன்பின் நண்பி சாந்தி அறிவது,

நான் நலம், நலமறிய ஆவல். பலநாட்க ளுக்குப்பின் இக்கடிதத்தை வரைகிறேன். இவ்வளவு காலமும் நான் கொழும்பில் இருந்தேன். இப்போதுதான் ஊருக்கு வந் தேன். ஊருக்கு வந்தபின் எனக்குத் திரு மணம் என அறிந்தேன். யார் மாப்பிள்ளை என்று கேட்டாய் நான் சொல்ல மாட் டேன். நேரில்தான் கூறுவேன். நாளை உன் வீட்டிற்கு வருவேன். வேறு என்ன அம்மா, அப்பாவைச் சுகம் கேட்டதாக கூறவும்.

மிகுதி நேரில்,

இப்படிக்கு
உயிர்த்தோழி
உமா

கடிதத்தைப் படித்து முடித்த சாந்திக் கும் சந்தோஷமாக இருந்தது தன் எண் ணத்தை அவள் வந்தவுடன் கூறிவிட வேண்டும் என மனகல் கொண்டாள். ஏனெனில் உமாவின் வீட்டின் அயல் வீடு தான் சாந்தனின் வீடு. சாந்தியின் மனம் சுழல்வது போல் பூமியும் தன் சுழற்சியி னால் மறுநாளை வரவழைத்தது.

விடிந்தும் விடியாததுமாகச் சாந்தி சீக்கிரம் எழுந்து தன் வேலைகளை எல்லாம் முடித்ததும் வாசலில் 'கார்' வரும் சத்தம் கேட்டு எழுந்து சென்று பார்த்தாள். தன் கண்களைத் தன்னாலேயே நம்பமுடிய வில்லை சாந்திக்கு. ஏனெனில் உமா தான் வந்து கொண்டிருந்தாள். உமாவை வரவேற்று அவளுடன் வெகுநேரமாக கலந்துரையாடிக் கொண்டிருந்தாள் பின்னர் சாந்தியே பேச்சைத் தொடக்கினாள் "உன் கணவர் யார் உமா? எனக்கு ஏன் கூறாமல் இருக்கி றாய். "வேறுயாருமல்லச் சாந்தி. நம்முடைய சாந்தன் தான்" என்று கூறவும் தன் காது களையே சாந்தியால் ஒருகணம் நம்ப முடிய வில்லை. உலகமே இருண்டது போன்ற ஓர் பிரமை ஏற்பட்டது. பின் உமா விடை பெற்றுச் சென்றுவிட்டாள். உமா போனதே தெரியாமல் இடியேறு கேட்ட நாகம் போல் அப்படியே நாற்காலியில் சாய்ந்துவிட்டாள் சாந்தி


இருந்தும் சாந்தியின் மனதில் ஏன் எனக்குச் சாந்தன் புத்தகம் தரவேண்டும் என்ற வினாவுக்கு விடை தோன்றியது. நீண்ட யோசனைவழி அறிந்துகொண்டாள். உமாவிற்குக் கொடுக்க வேண்டிய புத்தகம் மாறி எனக்கு வந்துவிட்டது. இது வே நடந்தது. தன் மனம் எண்ணிய எண்ணத்தை நினைக்கும் போது சாந்தியால் தன்னைப் பார்க்கத் தனக்கே அருவருப்பாக இருந்தது. விசனித்தாள்.

சாந்தியின் எண்ண அலைகளைத் தடுத்தாற் போல வந்தது அந்த மழை. உள்ளே சென்ற சாந்தி தன் தாயாரின் அழைப்பைக் கேட்டதும் பழைய நினைவலைகளை நீக்கி புதிய வாழ்க்கைக்கு ஆயத்தமானாள். கல்வி அறிவு "வாழ்க்கைக்கு ஆயத்தமாக்குகிறது" என்ற வெளிச்சம் அவள் இதயத்தில் பளிச்சிட்டது.

யாவும் கற்பனை

**து. தனுஜா**
**ஆண்டு 12 C**

# HOSTELERS



(L. R.) *R. Sasitharan, J. Sivakumar, T. Thayenthiran, S. Mahalingam, K. Kumareswaran, Y. Premadas S. Gowrathan, N. Kalaivasan*

**Standing-3 rd Row** *S. Suthakaran, S Sarveswaran, M. Surenthiran, P. Kannadasan, A. Umakandan, S. Sathanandan.*

**2 nd Row** *P. Priyatharshany, S. Ushanthini R. Manoviswanathan R. Anandarajah, M. Baskaran, K Krishnarupan J. Ranjith Jeyakumar N. Baskaran R. Jeyakumar, N. Jeyarajah, K. Mathialagan, S. Jeevanath, N. Kirupakaran, L. Pirapakaran, N. Ilango, S. Satgunapalan S. Jeyanthini P. Anitha.*

**1st Row** P. Vathany, S. Shanthakumar, S. Thilaheswary, S. Sasikala, P. Vathana, S. Shanthini, P. Jeyaleela, M. Thiruvaruchelvy, P. Pathmajini K. Komathy T. Thavalaxmy, A. Moreen, Jeyarany P. Logeswary, S. Vaksala, P. Geethanjaly.

**Seated :** Miss. R. Navaratnam, Miss. L. Peterz (Matron) S. Sujatha, S. Thiruvarudchelvi, Miss. P. Anbarasi, K. Krishnaverny, Principal K. Indranandan, S. Thiruchelvam, S. Bazil, S. Meignanaseelan, Mr. S. Subramaniam, Mr. V. Mahendran (Master in Charge).

## MY GARDEN

I have a garden in front of my house. It is a small plot of land There are many flower plants like Roses, Balsam, Sunflower and Shoe flower. Every evening I water the plants Some times my brother helps me. Early in the morning I pick up the flowers and put them in my vase. During the rainy season my garden looks very green. I spend most of my free time in the garden.

**M. Ravishankar.**
year 7 'A'

## *The importance of English*

Englsh is a language having much value, meaning and influence. It is both spoken and a written language. It is now spoken as a mother tongue in Great Britain, USA, Canada, Australia, and New Zealand. It is also the language of administration.

In SriLanka, India aud Africa it is learnt as a second Language In Europe, Japan and other countries it is learnt as an important foreign language. In Russia, it is learnt as a very useful, important foreign language In the United Nations Organization it is the medium of communication and the Language of all meetings.

English is a language of world culture and unity. Some of the best books in Arts, science and commerce are written in the English tongne. you find shakespcase's drama, the poetry of wordsworth. Tennyson keats and Byron in English.

What is more, you find the best translation of the Holy Bible, the kural, and Koran in English. In these books you find pearls of wisdom,- wisdom that makes a nation great.

English has the qualities that can make the East and the west meet and bring about world Unity and world Culture.

**N. Baskary**
year 7 B

## Auto biography of an Umbrella

I was made in a factory at Ratmalana. I was wrapped in a tissue paper and was bundled with some of my friends. we were then packed in a card bord box and was taken to pettah.

There I was lying in a show case. One day I was bought by a young school girl, she used me in rain and sun. I was serving her for nearly two years

One day she left me in the bus. May be because I was old! At the end of the day I was taken away by the conductor.

New I go about with the conductor's little daughter.

**T. Ellilini**
year 7B

## MY PET DOG

I call him Blackie. It is a very clever animal Its colour is black. Its ears are long and it has a short bushy fail I give him milk, rice and meat. It likes meat very much Blackie barks when stangers come to our house It sleeps near my bed, It used to accompany me whenever I go out. Itis wags its fail when I go home. It is one year old and its height is only a foot.

**A. Yogeswary**
year 7 C

## My Hobby

A hobby is some kind of work we do during our leisure. There are many hobbiec such as reading, gardening, collecting stamps picture post cards and coins.

My hobby is collecting stamps. I started it when I was ten yearsold Now I have morethan five huhdred stamps.

Collecting stamps help me to learn a lot about other countries I have a nice stamp album My father helps me to mount the stamps on them.

I exchange stamps with my friends. My pen - pal from Japan sends me Japanese stamps.

Collecting stamps is a useful hobby and I like it very much.

**S. Suganthan**
**year 8 A**

## *The Country I like to visit*

The country I would like to visit most is Japan. There are many people living in this beautiful country. Japanese are kind, courteous, hospitable and friendly people Japanese live peacefully with their neighbours.

This island is situated in the North pacific along the East coast of Asia. It consists of many small Islands. The greatest attraction it offers to the fourists are the cherry blossoms and Fujiyama. Japanese being an artistic race, have added much to the natural beauty of their country. The people of this country are industrious.

Apart from enjoying the picturesque sights of mountains, large tanks, gardens and parks one can derive much profit by a visit to Japan. It is one of the countries in the world which had progressed rapidly in various fields.

Tokyo, Nagoyo, Nagasaki are industrial towns Inspite of the industrialisation and modernisation that have swept over Japan, the people still wear their picturesque

costumes and follow their culture of the past. Therefore, Japan is the most interesting country I would like to visit.

**E. Dhanushan**
**year 8 A**

## *The Pearl of the Indian Ocean*

My country is Srilanka. which is surrounded by the Indian Ocean. SriLanka is a small country. From North to South the island is 425 kilo metres long. From West to East it is 225 kilometres wide.

There are many communities in SriLanka. They are the Sinhalese, Tamils, Muslims, Burghers, Europeans and Indians. It has a population of about twenty million people.

The island has a tropical climate The temperature ranges between 20° to 30° ceutigrade. In the central hills the climate is cooler. The Peradeniya and Haggula Botanical gardens have a large variety of tropical plants.

Wild animals live in the game reserves. Wild life parks are at Wilpattu and Yala where many varieties of birds live in their natural surrounding.

The longest river of our country is the Mahaveli Ganga. There are many other well known rivers such as the Kalu Ganga, Valare Ganga, Kelani Ganga, Maha - Oya and Dedun Oya. The highest mourutain is Pidurutalagala.

Anuradhapura in the North Central plains of SriLanka was the first capital ruled by the Sinhalese kings Anuradhapura is the Rome of the Buddhists It was founded by king Pandukabhaya. It is the only city which has a genuine Buddhist atmosphere. Sigiriya was the capital of Kasyapa. It is the Ajanta of Sri Lanka. Mihintale is a sacred hill The ruins of Sri Lanka are a commentary to the greatness of the Sri Lankans.

Jaffna is a land of legend where the folklore of the people are on interesting blend of history and Hindu mythology. A few; words with the ever friendly 'Jaffnese' will bring out a wealth of legend about the land and take any visitor on a new voyage of discovery.

There are many religious festivals of Sri Lanka The Kandy Perahera takes the main place here.

Because of the natural beauty of Sri Lanka many tourists are attracted to out country. I wish my country every success in the future.

**Mohandas Suresh**
year 8 A

## THE PERSON WHOM I LIKE BEST

The persrn whom I like best is my mother. The first word I learns to say when I was a baby was 'ammah', because I loved her most.

It doesnt mean that I do not love my father, but I love and like my mother more because she fed me. made my clothes, bathed me and taught me to sing songs. when I was a little girl. I had always moved more with my mother than with my father when I was small That is why I like my mother more.

She gets up early from bed and wakes me wp and makes me to study my lessons She often says "Early to bed and early to rise will make a person healthy, wealthy and wise".

She prepares the meals to my taste Even now she combs my hair and gets me ready to school. I am so grateful to my mother.

**Dushyanthi**
year 9 C

## Trees

Trees are useful to man in many ways. Both man and the animals get many kinds of food from them

The timber is used for making all kinds of furniture. We need fire wood for cooking. Trees also provide valuable medicines.

Another use of trees is that they stop soil erosion. Countries which have many trees get more rain than those which have less trees.

So it is our duty to protect trees for they in turn will protect us. A big tree takes about a hundred years to grow but it could be felled in five minutes. We need to cut down trees, but we must plant others in their place.

If there are no trees we cannot think of a beautiful world. If there are no trees, there would be no life on earth.

**Jackson Jeeva**
year 10

## *How I Spent my Second Term Holiday*

